கல்கி



KALKI 9.10.1966 35 காசு





அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்—அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

Lederle லெடர்லி டிவிஷன். ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID

CMCI-26 TAM

கல்கி

பொருளடக்கம்

பராபவ, புரட்டாசி 23 ❀ அக். 9

''கல்கி''யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

நினைவுத் திரையிலே...!

ஒருவர்: என்னங்க! உங்களுக்குப் புழுங்கல் அரிசி சாப்பிட்டுத் தானே பழக்கம்? இப்பொழுது ரேஷனில் போடுகிற பச்சரிசி உங்களுக்குப் பிடிக்கிறதா?

நண்பர்: ரொம்ப நன்றாய்ப் பிடிக்கிறது! முதலில் கையில் பிடித்துக் கொள்ளுகிறது; பின் வாயில் பிடிக்கிறது; கடைசியில் வயிற்றுக்குள்ளே போய் நன்றாய்ப் பிடித்துக் கொள்கிறது!

- பி. எஸ். ரங்கநாயகி
கல்கி, செப்டம்பர் 29, 1946




திட்டத்துக்காகவே மக்கள்
மக்களுக்காகவே திட்டம்
வோட்டு அறுவடை வளமாக இருக்குமென்று நம்புகிறேன்!
சர்க்கார் செல்வாக்கு
பணபலம்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ■ இதழ் 10

மாமனிதர் மறைந்தார்!

எல்லையற்ற மதிநுட்பம் படைத்த பேரறிஞர்களை உலகம் அபூர்வமாகத்தான் பெறுகிறது.

செயல் திறன் மிகுந்த சான்றோர்களையும் உலகம் அருமையாகத்தான் காண முடிகிறது.

மதி நுட்பம், செயல் திறன் இரண்டிலும் ஒருங்கே சிறந்து விளங்குபவர்களோ அபூர்வத்திலும் அபூர்வமாக, அருமையிலும் அருமையாகத்தான் உலகில் தோன்றுகிறார்கள்.

அப்படிப்பட்ட ஓர் அரிய ஆன்மாவை, அபூர்வ ஆன்மாவை டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரவர்களின் மறைவில் இழந்து விட்டோம்.

அரசியல், சட்டத் துறை, ஆன்மிகம், கல்வி, கலை இப்படிப் பலவற்றில் மேதையாகத் திகழ்ந்தவர் டாக்டர் ஸி. பி. அவர்கள். நாட்டில் சுதந்திர உணர்ச்சி கட்டுக்கடங்காமல் பெருகிய சமயத்தில், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அரசியலில் மிதவாதியாக இருந்தார். ஆனால் அந்தக் காலத்தில், நாட்டில் பொருளாதார வளர்ச்சி குறித்த உணர்ச்சி மங்கிக் கிடந்தது. இவரோ இத்துறையில் அப்போதே ஒரு தீவிரவாதியாகப் பணி புரிந்தார். டாக்டர் ஸி. பி. அவர்களுக்கு இன்று புதிதாக நினைவுச் சின்னம் தேவையில்லை என்பது போல் என்றும் அவர் பெயரை எடுத்தியம்பும் மேட்டூர் அணையும், பைகாராமின் திட்டமும், நாட்டின் பல துறை முகங்களும், கேரளத்தின் பல தொழில்களும் அவரது பொருளாதாரப் பேரறிவுக்கும், தீர்க்கதரிசனத்துக்கும் தக்க சான்றுகளாக நிற்கின்றன. ஸி. பி. அவர்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வந்தது போல் நாட்டின் நதிகள் அனைத்தும் இணைக்கப்பட்டு, போக்கு வரத்து பிரச்னை தண்ணீர்ப் பிரச்னை இரண்டும் ஒருங்கே தீர்க்கப்படுமேயானால் அது டாக்டர் ஸி. பி. அவர்களுக்கு ஓர் அற்புத ஞாபகார்த்தமாக விளங்கும்.

டாக்டர் ஸி. பி. அவர்களின் அபாரமான அறிவுத் திறனும், செயல் திறமையும் சுதந்திர இந்தியாவில் பூரணமாகப் பயனுறாதது நமது நாட்டின் துர்பாக்கியங்களுள் ஒன்று என்றே சொல்ல வேண்டும். அவர் எழுதவிருந்த சுயசரிதை இலக்கிய உலகுக்குக் கிட்டாதபடி, அந்நூல் முற்றுப் பெறுவதற்குள் அவரது வாழ்வு முற்றுப் பெற்றதோ விதியின் மிகக் கொடூரமான விளையாட்டு. வேகமும், துடிப்பும், அற்புதங்களும் நிரம்பிய அவரது நீண்ட வாழ்க்கை அதற்கேற்ற ஒரு முடிவைத் தேடிக் கொண்டு விட்டது என்றுதான் நாம் ஆறுதல் பெற முயல வேண்டும்.

ஸி. பி. அவர்களின் சிந்தனு சக்தி, நெஞ்சுரம், வாக்குவன்மை, இலக்கிய உள்ளம், ஆன்மிக ஈடுபாடு, உற்சாக மனப்பான்மை இவற்றையும், அவரது கம்பீரம் கொழிக்கும் சுந்தர வடிவையும் உலகம் அறியும். ஆனால் இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டினால் மட்டும், "ஸி. பி." என்று நாம் குறிப்பிடும் அந்தத் தனித் தன்மை வாய்ந்த வியக்தியைப் பெற்றுவிட முடியாது. இவை யாவற்றுக்கும் உட்பொருளாகவும், இவை யாவற்றையும் கடந்ததாகவும் ஸி. பி. என்ற ஒரு கௌரவமான பண்பு இருந்து வந்தது. இத்தகைய ஸி. பி.க்கள் உலகில் அதிகம் தோன்ற முடியாது. எனவேதான் இப்படியொருவர் தோன்றும் போது உலகம் முழுதும் அவரிடம் உறவு கொண்டு விடுகிறது. இப்படிப்பட்டவர் மறையும் போதும் அநுதாபம் சொல்பவர் அநுதாபம் பெறுபவர் என்று பிரிக்க முடியாமல் அனைவரும் துயரத்தில் ஒன்றுகின்றனர்.

இதே உணர்ச்சியுடன்தான் நாம் டாக்டர் ஸி. பி. அவர்களின் மதிப்புக்குரிய குடும்பத்தினருக்கு நமது அநுதாபங்களை அளிக்கிறோம்.

பரிசுக்குத் தக்க பாத்திரம்

நேரு அவர்களின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட உலக சமாதானப் பரிசு ஐ.நா. காரியதரிசி ஊதாண்டுக்கு அளிக்கப்பட விருப்பதை இந்தியா மட்டுமின்றி, உலகமே ஆமோதிக்கும். உலக சமாதானத்தை நிலை நாட்டுவது எப்போதுமே மிகவும் கஷ்டமான பணி. இதில் வெற்றி காண்பது சுலபமல்ல. ஒரு ராஜ ரிஷிக்கு இருக்க வேண்டிய உயர்குணங்களும், பண்புகளும், உலக அமைதியில் ஆழ்ந்த நம்பிக்கையும் இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பூரணமாக இருத்தல் வேண்டும். காலஞ்சென்ற டாக் ஹாமர்ஷீல்ட் அத்தகைய ஒரு ராஜ ரிஷி. அவருக்குப்பின் அப்பதவிக்கு யாரை நியமிப்பது என்பதிலேயே வல்லரசுகளுக்குள்ளே மோதல்கள் இருந்தன. முடிவில் பரீட்சார்த்தமாக ஊதாண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பின்னர் அவருடைய நேர்மையாலும், பக்ஷபாதமற்ற நடவடிக்கைகளாலும், உண்மையான உழைப்பாலும் உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற்று நிரந்தரக் காரியதரிசியானார். ஐ. நா.வின் கௌரவத்தையும் அந்தஸ்தையும் நிலைநாட்டினார். இப்போது அவருடைய பதவிகாலம் முடிவடைகிறது.



அடுத்த முறையும் அவர் நீடித்துப் பதவி வகிக்க விரும்பவில்லை. ஏன்? உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை, முக்கியமாக வியட்நாம் போரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்ற உண்மையான ஏக்கம்தான் காரணம். இந்தியா பாகிஸ்தான் உறவுகளைச் சுமுகமாக்க முடியவில்லையே என்று தாபம். வல்லரசுகளிடையே நல்லெண்ணத்தை வளர்க்க முடியவில்லையே என்ற வருத்தம். ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் கொடுக்க வேண்டிய சந்தாத் தொகைகளையும், சமாதானப் பணிக்காக ஏற்பட்ட செலவுகளையும் வசூலிக்க முடியவில்லையே என்ற மனச் சோர்வு.

எனினும் ஸ்தூலமாக வெற்றி ஏற்படுவதைக் கொண்டு மட்டும் ஐ. நா. காரியதரிசி

ஐக்கிய நாடுகள் சபையின் அழைப்பை ஏற்று அந்த உலக அரங்கில் இம்மாதம் 23-ந் தேதியன்று சங்கீதக் கச்சேரி செய்ய அமெரிக்கா சென்றிருக்கும் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள், இந்த ஒரு கச்சேரியைத் தவிர அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல்வேறு நகரங்களிலும் ஏழு வாரங்கள் வரை பல கச்சேரிகளை நிகழ்த்துகிறார். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கடற்கரை வரையுள்ள பல இடங்களுக்கும் கர்நாடக சங்கீதத்தின் திக்விஜயம் அக்டோபர் 2ந் தேதி முதல் நவம்பர் 19ந் தேதி வரை நடைபெறுகிறது. இந்த இதழ் தமிழ்கூறும் நல்லுலகிலுள்ள கல்கி நேயர்களின் கரங்களை அலங்கரிக்கும்போது ஸ்ரீமதி எம். எஸ். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் தமது முதல் கச்சேரியை நிகழ்த்திக் கொண்டிருப்பார். ஹாமில்டன் என்ற நகரில் கோல்கேட் சர்வகலாசாலையின் ஆதரவில் இம்மாதம் ஆறந் தேதியன்று இம்முதல் கச்சேரி நடைபெறுகிறது.



யின் சமாதானப் பணியைக் கணித்துவிடக் கூடாது. வெற்றி கிட்டாவிட்டாலும், விடாமுயற்சியுடன் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டு வருவதே பாராட்டுக்குரியது. உலக நாடுகளின் நல்லெண்ணத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் ஓர் உலக ஸ்தாபனத்தின் கௌரவத்தை அவர் நிலை நாட்டி வருவதையும், எல்லா நாடுகளின் நம்பிக்கையைப் பெற்றிருப்பதையும் கொண்டே ஊதாண்டின் சிறப்புப் பணியை மதிக்க வேண்டும். எல்லா வல்லரசுகளும் இப்போது ஒரே முகமாக அடுத்த ஐந்தாண்டு களுக்கு ஊதாண்ட் அவர்களே தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதென்று முடிவு செய்திருக்கின்றன. அவருடைய பக்ஷபாதமின்மைக்கும் மனிதாபிமானத்துக்கும் இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை. நேரு சமாதானப் பரிசுத் தொகையான ஒரு லட்சம் ரூபாயை அப்படியே ஒரு பள்ளிக்கு நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ள ஊதாண்ட் தமது பெருமையை மேலும் உயர்த்திக் கொண்டு விட்டார். அவருடைய உலக சமாதானப் பணி பலனளிக்க ஆண்டவன் அருளட்டும்!

பூசாரி வரம் தரவில்லை!

அரசாங்க ஸ்தாபனங்களுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று முரணாக நடந்துகொள்வதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் எப்படித் தடைப்படுகிறது என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் தமிழகத் தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கடராமன் தமிழ் வர்த்தக சங்கத்தில் பேசியபோது சமீபத்தில் விளக்கிச் சொன்னார். தமிழக அரசாங்கத்தின் உத்தரவாதம் பெற்ற ஒரு தொழிற்பேட்டையின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்ய ஆயுள் இன்ஷியூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆறரை சதம் வட்டியில் கடன் கொடுக்க முன்வந்தது. இந்த வட்டி விகிதத்துக்குத் தமிழக அரசாங்கம் சம்மதித்திருந்தது. ஆனால் ஐந்தரை சதம் வட்டிக்கு மேல் கொடுத்துச் சென்னை அரசாங்கம் கடன் வாங்கக் கூடாது என்று ரிஸர்வ் பாங்கி அனுமதி கொடுக்க மறுத்து விட்டது. எல். ஐ. ஸி., ரிஸர்வ் பாங்கு இரண்டுமே அரசாங்கத் தொடர்புள்ள ஸ்தாபனங்கள். இவைகளுடைய பரஸ்பரச் சண்டையில் தொழிற் பேட்டைக்குப் பணம் கிடைப்பது நின்றுவிட்டது; வேலையும் நின்றுவிட்டது.

ரூபாயின் வெளிநாட்டு மதிப்புக் குறைப்புக்குப் பின் தொழில்களுக்கு இறக்குமதி லைசென்சுகள் தாராளமாக வழங்கப்பட்டன. ஆனால் அதற்கு அநுகூலமாக நிதிவசதிகளை விஸ்தரிக்க ரிஸர்வ் பாங்கி மறுத்து விட்டது. பழைய 'கடன் கட்டுப்பாடு' விதிகள்தான் இன்னமும் அமுலில் இருக்கின்றன. இதனால் லைசென்ஸ்கள் கிடைத்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் தொழிலதிபர்கள் தவிக்கின்றனர்.

சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை என்ற ரீதியில் ஓர் இலாகா செய்யும் அநுகூலத்தை மற்றோர் இலாகா ரத்து செய்து விடுகிறது. இப்படித்தான் நாட்டின் பொருளாதாரம் குட்டிச் சுவராகிக் கொண்டு வருகிறது. எதிர்க்கட்சியினர் குறை சொன்னால் பலன் கிடைப்பதில்லை. இப்போது அமைச்சரே சொல்கிறாரே! பலன் ஏற்படுமோ?

என்ன சேதி?

- ☐ நெஞ்சை உருக்கும் கடிதம்
- ☐ ஒட்டுப் போட்ட துணி
- ☐ ஆக்கூராரின் மறைவு

பம்பாய் — 1
செப்டம்பர் 12, 1966

என் அன்புள்ள ராஜகோபாலாச்சாரியருக்கு,

'என் காலத்தின் சரித்திரம்' என்ற எனது நூலுக்கு விஷயம் சேகரிப்பதற்காகவும், ஆக்ஸ்போர்ட் முதலிய இடங்களில் சில அலுவல்களை நிறைவேற்றுவதற்காகவும் இங்கிலாந்து செல்லும் நான், அம்மார்க்கத்தில் இங்கு இருக்கிறேன்.

உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், ஒரு வாரத்துக்கு அதிகமாக மிகவும் காய்ச்சலிருந்தது என்றும் அறிந்து விசாரமடைகிறேன். உங்களுடைய சகஜமான ஆரோக்கியத்தைப் பெற்று உங்களுக்கே உரிய உத்வேகத்தையும், ஆற்றலையும் விரைவில் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். அவ்வாறு நடைபெறப் பிரார்த்திக்கிறேன்.

பெருமதிப்புடனும் பேரன்புடனும்,
உங்கள் பிரிய
ஸி. பி. ராமசுவாமி அய்யர்

[இக்கடிதம் ராஜாஜிக்கு வந்தபோது அவர் மிகவும் சுகவீனமுற்று எதையும் படிக்க இயலாத நிலையில் இருந்தார். அவர் இந்தக் கடிதத்தைக் கண்ணுற்ற செப்டம்பர் 27ந் தேதி சர் ஸி. பி. அவர்கள் இவ்வுலகில் இல்லை என்பதை நினைக்கும்போது மனித வாழ்வின் அநித்தியம் எவ்வளவு அழுத்தமாக மனத்தில் பதிகிறது !]

சென்னை முதல் அமைச்சர் திரு பக்தவத்சலம் காஞ்சியில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் சமீபத்தில் பேசியபோது தங்களுக்குள் சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார். அவ்விதம் அவர்களால் இருக்க முடியாவிட்டால் 'தேர்தல் நடந்து முடியும்வரையிலாவது உங்கள் சண்டைகளை ஒத்திப்போட்டு வைக்கக் கூடாதா? அதுவும் முடியாவிட்டால் சண்டைகளைப் பகிரங்கமாகவாவது போட்டுக்கொள்ளாமல் இருக்கலாமே' என்றாராம். ஒட்டுப் போட்ட கந்தல் துணியைக் கட்ட எவ்வளவு பிரயாசைப்பட வேண்டியிருக்கிறது என்பதை நினைத்து முதலமைச்சரிடம் நமக்கு அநுதாபம் தான் ஏற்படுகிறது.

சிறந்த தேசபக்தரும் பொதுஜன சேவையையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தவருமான ஆக்கூர் ஸ்ரீ அனந்தாச்சாரியாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். விடுதலைப் போரில் கலந்து கொண்டு பத்து ஆண்டுகள் சிறையிலிருந்த தியாகி, அந்தத் தியாகத்தைக் கிரயமாக்கிக் கொள்ள விரும்பாத உத்தமராகவே வாழ்ந்து மறைந்து விட்டார்.


நட்பைப் போற்றும் சிறந்த குணம் பெற்றவர் அவர்! எஸ். ஜி. கிட்டப்பாவிடம் அவருக்கு அளவுகடந்த சிநேகம். அந்தச் சிநேகத்தின் காரணமாகவே ''கிட்டப்பா ஹிந்தி பயிற்சிப் பள்ளி''யை அமைத்து ஹிந்தி வகுப்புக்கள் நடத்தி வந்தார். ஆண்டுதோறும் கிட்டப்பா ஞாபகார்த்த விழாவும் நடத்தி வந்தார்.

அடுத்து அவர் நடத்தி வந்த பெரும் பணி பாரதி சங்கத்தின் காரியதரிசியாக இருந்து ஆண்டுதோறும் அச்சங்கத்தின் சார்பில் பாரதியார் விழா நடத்தி வந்ததாகும். பல



இன்னல்களுக்கிடையே அவர் விடாப்பிடியாக விழாவை நடத்தி வந்தார்.

அவரது அறுபதாண்டு நிறைவு விழாவின் போது கிடைத்த நிதியத்தையும் பொருள்களையும் அப்படியே வாலாஜாபேட்டை தீனபந்து ஆசிரமத்துக்கு வழங்கி விட்டார். அவர் தமது உயிருக்குச் சமானமாகக் கருதிவந்த நண்பர்கள் ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமய்யரும், ஸ்ரீ ஜமதக்னியும் ஆவர். கடைசிக் காலத்தில் ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமய்யரின் தீனபந்து ஆசிரமத்தில் நோயுடன் இருந்து உயிர் நீத்தார். அவர் வாழ்க்கை முழுதும் நைஷ்டிகப் பிரம்மசாரியாகவே இருந்து மறைந்துவிட்டார். அவருடைய நண்பர்களே அவருக்கு உற்றாரும் உறவினருமாக இருந்து வந்தார்கள். அந்த நண்பர்களுக்கு நமது அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



அத்தியாயம் 2

தேமாங்கனி

வேந்தன் வருகிறான் என்பதற்குரிய அறிவிப்பு ஒலிகள் கேட்டதும், உடனே அங்கிருந்து தப்பிச் சென்று விடும்படி வேலவன் கோதையை அவசரப்படுத்தினாள் அல்லவா நீலவல்லி? அந்தச் சொற்படியே அவள் சொன்ன அடையாளத்தை வைத்து, நொச்சி மரங்களைத் தாண்டிக் கிழக்கே திரும்பினான்.

''இந்தச் சோலையைத்தான் இளவரசி குறிப்பிட்டாள் போலும்; இங்கேதான் அந்தக் குகை இருக்கிறது போலும்!'' என்று எண்ணிக் கொண்டு சோலையுள் நுழைந்த வேலவன், அதன் அழகிலே சொக்கிப் போனான்.

மணற்பாங்கான இடத்தில் தென்னை மரங்கள் நிற்பதே ஓர் அழகு! அவற்றுக்கு அருகிலே கமுகுமரங்கள் நின்றன.



அவற்றைப் பின்னி இணைத்துக் கொண்டு வண்ண வண்ணப் பூங்கொடிகள்! இவற்றைத் தாண்டி உள்ளே புகுந்தால் 'குளுகுளு' என்று பூம்பந்தர். அதற்கு அப்பால் நேர்த்தியான கனி மரங்கள், மா, பலா, வாழை முதலியன! அதோ சுனை தெரிகிறது.

வேலவன் கோதை ஆவலும் எழிலின்பமும் நிரம்பிய உள்ளத்தோடு மேலே நடந்தான், சுனையை நோக்கி!

கடவுளுடைய படைப்பின் விந்தையை என்னவென்று சொல்வது! உப்புக் கைக்கும் கடலின் கரையிலே மிக அருகிலே எவ்வளவு தூய தண்ணீர்! வைரக் கற்களைத் தெளித்தது போல அல்லவா காட்சி தருகிறது, சுனைத் தண்ணீரின் பரப்பு! வேலவன் கோதை அந்தத் தண்ணீரில் ஒரு கை யெடுத்துக் குடித்தான். கரும்புச்சாறாக இருந்தது தண்ணீர்!

மாபெரும் சோலை அது! பாறைகள் படர்ந்திருக்கிற எல்லையிலே பெரிய பெரிய மரங்கள் ஓங்கி நின்றன. அந்தப் பாறைகளின் ஊடாக மேல் கோடியிலே பெரிய குகை இருந்தது. உதிக்கும் சூரியனை நோக்கியவாறு! கதிரவனின் வைகறை ஒளி முழைக் குள்ளே புகுந்து விளையாடிக் கொண் டிருந்தது !

வேலவன் கோதை குகைக்குள்ளே போய்ப் பார்த்தான். ''பாழி'' என் பார்களே அப்படிப் பொந்தாக இல்லை அந்தக் குகை! துறவிகள் இருப்பதற்கும், படுப்பதற்கும் உரிய கல் மேடைகள் 'மழு மழு' என்று செதுக்கப்பட்டிருந்தன.

கோதை அந்தக் கல் மேடைகளை ஆராய்ந்தான். யாரோ பெரிய அரசன்



துறவிகளுக்காக அமைத்துக் கொடுத்த கற்படுக்கைகள் அவை என்ற செய்தி, அந்தப் பாறையிலே கல் எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. மழுங்கியும் தேய்ந்தும் மறைந்தும் போயிருந்த அந்தக் கல்வெட்டு முழுவதையும் ஆர அமரத்தான் படித்துப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்து முகப்பு விளிம்பிலே இருந்த ஒரு கல் படுக்கையிலே அமர்ந்தான் வேலவன் கோதை! வட்டுடையிலே செருகி வைத்திருந்த அந்த நீல மலரை இப்போது வெளியே எடுத்து வாசனை பார்த்தான்.

''நீல மலரிலும் இத்தனை நறுமணம் கொண்ட ஒரு நீல மலர் இருக்கிறதா! ஆகா!'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

''இது மலரின் வாசனையா? அல்லது மலரைச் சூடியிருந்த கூந்தலின் வாசனை தானா?'' என்று எண்ணியபோது அவனுக்கே சிரிப்பு வந்தது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டா இல்லையா என்று ஒரு கேள்வி புலவர்கள் சங்கத்திலே எழுந்ததும், நக்கீரன் சிவபெருமானோடு இதுபற்றி வாதிட்டதும் நினைவு வந்தது. உடனே கையிலிருந்த நீல மலரை எடுத்துக் குகையின் மாடத்திலே வைத்தான். குகை முழுவதும் ''கம கம் கம்'' என்று கமழ்ந்து நிரம்பியது. உள்ளக் குகையிலும் அந்த வாசனை நிரம்பியது!

நீலவல்லியின் கூந்தலிலிருந்து நழுவி விழுந்த மலர் அல்லவா அது! அதனுடைய வாசனையோடு சேர்ந்து அந்தப் பெண்ணரசியைப் பற்றிய எண்ணங்களும் பூவிலிருந்து கிளம்பும் நறுமணத்தைப்போல் கமழ்ந்து எழுந்தன.

ஆம்; குகைக்குள்ளே சென்று அமர்ந்த பிறகு நீலவல்லியைப் பற்றிய நினைவு இன்னும் அதிகமாயிற்று.

கடலிலிருந்து முரசொலி கேட்டதும் எவ்வளவு பதறினான் அவன்! தந்தையிடம் அவ்வளவு அச்சமா அவளுக்கு?

இருக்கலாம்; குறும்பக் கடம்பர்களின் மன்னன் அவ்வளவு கண்டிப்பானவன் போலும்! ஆனாலும் மகளிடம் கூடவா கடுமை? மறுபடியும் வேலவனை வந்து சந்திப்பது அடுத்த முழு நிலவு இரவிலேதான் என்று சொன்னாளே நீலவல்லி, ஏன் அப்படி?

அடுத்த முழுநிலவின் போதுதான் குறும்பர் மன்னன் மறுபடியும் கடல் மீது செல்வான், அது வரை கன்னி மாடத்தின் கதவு பூட்டியேதான் கிடக்கும் என்றானே, அத்தனை கடுங்காவலா இந்த வெள்ளைத் தீவில்?

திருடர்களுக்கு, உலகிலுள்ள மற்ற எல்லாருமே திருடர்கள் என்றுதான் தோன்றும் போலும்! அத்தனை பெரிய தீவில் இளவரசியை யார் வந்து திருடிக் கொண்டு போய் விடுவார்கள்! எதற்காக அந்தக் கன்னிமாடத்தின் கதவுகளை அப்படிப் பூட்டி வைக்க வேண்டும்? மகளைக்கூட நம்பாத மாபெரும் திருடனு அந்த மன்னவன்!


வேலவன் கோதை நினைத்தான், ஒரு வேளை இந்த இளவரசியைப் பற்றியும் ஏதாவது 'ஆயம்', இரகசியம் இருக்குமோ? இந்தப் பெண்ணையும் ஒரு வேளை எங்கிருந்தாவது கொள்ளையடித்துக் கொண்டு வந்துவிட்டானோ? மரக்கலங்களிலே வரும் மாபெரும் வணிகர்கள், யவனர்கள், குறுநில மன்னர்கள் போன்ற கூட்டத்திலிருந்து இந்த ஒப்பற்ற அழகியை அபகரித்துக் கொண்டு வந்து விட்டானோ இந்தக் கடம்பன்? ஆனல் அவனோ வயதான மன்னன். இவளோ வயதுப் பெண். இவளுடைய தந்தைக்குரிய வயதைத் தாண்டியவன் கடம்ப மன்னன். அப்படியானல் என்ன நோக்கத்தோடு இவளைத் திருடிக் கொண்டு வந்திருக்க வேண்டும்? கடம்பனுக்குப் பெண் குழந்தைகள் இல்லாமல், இப்படிப்பட்ட ஒரு பெண்ணைச் சிறு வயதிலேயே எங்கிருந்தாவது எடுத்து வந்து வளர்க்கிறானே? இந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தால் அது தனியான ஓர் எழிலோடு இருக்கிறதே! திருட்டு மன்னனுக்கு இப்படி ஒரு பெண்ணரசி பிறப்பாளா, என்ன? இவள் வேறு ஏதோ ஒரு நாட்டு மாதரசியாகத்தான் இருக்க வேண்டும். இந்தத் திருடனுக்கு இப்படி ஒரு மகள் பிறப்பதாவது!

'ஏன் பிறக்கக் கூடாது? சிப்பியிலே முத்தும், சேற்றிலே செந்தாமரையும் பிறப்பதில்லையா?' என்று எண்ணி, உடனே வேலவன் கோதை சிரித்தான். தன்னையே நோக்கிப் பரிகாசமாகச் சிரித்தான்! இது வரை பழகியறியாத, இப்பொழுதுதான் முதன் முதலாகச் சந்தித்துள்ள ஒரு பெண்ணிடம் தனக்கு ஏன் இத்தனை கவலை? மயங்கி மடிந்து போயிருக்க வேண்டிய நிலையில் தனக்கு உணர்வூட்டி உயிர் கொடுத்தாளே அந்த நன்றியா? அது மட்டுந்தானா? அல்லது அவளுடைய முகத்தின் எழிலும் சேர்ந்து இத்தனை பாடுபடுத்துகிறதா தன்னை?

இருக்கலாம். இது வரை போர்க்களத்தில் வேலோடு வேலும், — வாளோடு வாளும், சந்திப்பது என்ற பயிற்சிதான் தெரியும் வேலவனுக்கு.



ஜேய் கொண்டு ஸ்நானம் செய்யும் ஒவ்வொரு முறையும்



உங்கள் சருமத்துக்கு மென்மை, ஒளி, கவர்ச்சி ஆகியவை கிட்டுகின்றன

ஜேய் அழகு சாதன சோப் சரும துவாரங்கள் அனைத்தையும் சுத்தப்படுத்தி, சருமத்தை மிருதுவாக்குகிறது. ஜேய் கொண்டு ஸ்நானம் செய்யும் ஒவ்வொரு முறையும் உங்கள் சருமத்துக்கு மென்மை, ஒளி, கவர்ச்சி ஆகியவை கிட்டுகின்றன. பளபளக்கும் ரேக்கு 'ராப்ப'ரின் காரணமாக அதில் அடங்கியுள்ள மனோகர மல்லிகை நறுமணம் நிலைத்து வீசுகிறது.



டாடா தயாரிப்பு

உங்கள் எழில் பெருக

ஜேய்

அழகு சாதன சோப்

Bensons/ITJS-107-Tam

இப்போது கண்களோடு கண்கள் சந்திப்பது புதிய அரிய அநுபவம் அவனுக்கு. வேலும் வாளும் கண்களுக்குள்ளும் இருப்பதுண்டா! என்ன பாடு படுத்துகின்றன அந்த நிலவுக் கண்கள்!

தன்னுடைய நிலைதான் இப்படி! அவளோ? புதிதாகப் பார்த்த ஒருவனிடம் எத்தனை இரக்கமும் அன்பும் அக்கறையும் காட்டினாள்! தான் தப்பித்து ஓடிவிட வேண்டும் என்பதில் அவளுக்கு ஏன் அத்தனை கவலை? தன் கையால் மயக்கம் தெளிவித்துத் தன் கையாலேயே மறு வாழ்வு கொடுத்து விட்ட ஓர் உயிர், மறுவினாடி குறும்பர்களின் கையில் சிக்கி மடியக் கூடாதே என்ற உணர்ச்சியா அது? ஆனாலும் தகப்பனுக்கும், தன் இனத்துக் குறும்பர்களுக்கும் மேலாக ஒரு வேற்று மனிதனிடம் அத்தனை அன்பு எடுத்த எடுப்பிலேயே தோன்றுமா? அப்படியானால்?

'கண்டதும் காதல்' என்று ஒன்று சொல்வார்களே, அதாக இருக்குமா இது?

வேலவன் கோதை மாடத்தின் மீது வைத்த நீல மலரை மறுபடியும் கையிலே எடுத்தான். நெஞ்சகம் நிரம்புகிறவரை வாசனை பார்த்தான். உடம்பு விம்மியது.

* * *



இரண்டு மூன்று நாட்கள் இப்படியே கழிந்தன. அந்த எண்ணக் குமைவிலிருந்து மனத்தை வெளியேற்றுவதற்காகக் குகையைச் சுற்றியிருந்த பல பகுதிகளையும் ஆராயத் தொடங்கினான் வேலவன் கோதை.

குகைக்குப் பின்னால் பாறையின் மறுபுறம் ஏறிச் சென்றால் சற்று உயரத்தில் கல்லால் ஆகிய ஒரு கட்டடம் தெரிந்தது. மண்டபம் போன்று தோன்றிய அந்தக் கட்டடத்துக்குள்ளே சென்றான் வேலவன் கோதை.

துறவிகளுக்கு என்று ஒரு கல்விக் கழகமும் ஒரு நூல் நிலையமும் இயங்கியிருக்குமானால் அது இந்த இடமாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது வேலவனுக்கு. உயரம் உயரமான கல் திண்டுகள், சாய்மானங்கள் தவ இருக்கைகள், படுக்கைகள், அறைகள் என்று உள்ளே உள்ளே போய்க் கொண்டே இருந்தது. இதன் மையமான கல் மன்றத்தின் சுற்றுச் சுவர்களிலெல்லாம் பெரிய பெரிய மாடக் குழிகள் பல இருந்தன. அந்த மாடக் குழிகளிலே ஓலைச் சுவடிகள் வைக்கப்பட்டிருந்தன.

கல் மன்றத்தின் நெற்றிப் பொட்டிலே இருந்த ஒரு பெரிய குடைவிலே கல்லாலாகிய தாமரைப் பீடம் ஒன்று தெரிந்தது. அந்தக் கல் தாமரையின் மீது பெரிய ஏட்டுச் சுவடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு அருகிலே சிறு சிறு ஏட்டுத் தொகுதிகள்.

மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் ஒரு துறவுப் பள்ளியைக் கண்டதும், அந்த இடத்தில் எண்ணற்ற ஏட்டுச் சுவடிகளைப் பார்த்ததும் வேலவன் கோதைக்கு வியப்பு மேலோங்கிற்று. "கவனிப்பாரில்லாமல் இப்படிக் கிடந்தால் இந்த ஏடுகள் எல்லாம் செல்லரித்து அல்லவா போய் விடும்; திருடன் அரச பீடத்தில் அமர்ந்தால் கல்வியின் நிலை வேறு எப்படி இருக்கும்? செங்கோலைப் பிடிக்கிற கரம் கன்னக்கோல் பிடிக்கிற கரமாக இருந்தால், எழுத்தாணி துருப் பிடிக்கும், ஏடு செல்லரிக்கும். இதில் வியப்பில்லை!" என்று எண்ணிக் கொண்டே, சுவடிகளுக்கு அருகிலே சென்று ஒன்றை எடுத்துப் பார்த்தான் கோதை. அதில் எழுதியிருந்த எழுத்து சாதாரணத் தமிழ் எழுத்தாக இராமல் "ஊசி முறி" அல்லது "ஊசிமுரி" என்று அழைக்கப்பட்ட தமிழ்க் கூட்டெழுத்தாக இருந்தது. ஏடு ஏடாகப் பல பக்கங்கள் எழுத வேண்டியவற்றையெல்லாம் சில வரிகளில் அடக்கி விடக்கூடிய இந்தச் சுருக்கெழுத்தாகிய 'ஊசி முறி'யை இளமையில் 'மங்கலங்கிழார்' என்ற புலவரிடம் வேலவனும் சேர குடும்பத்தைச் சேர்ந்த சில அமைச்சர் மக்களும் படித்ததுண்டு. உளவு, தூது முதலிய முக்கிய பணிகளில் ஈடுபடும் அரசியல் சுற்றத்தார்களுக்கு இத்தகைய கல்வி மிகவும் அவசியம் என்று கருதிய காலம் அது! அதன் முக்கியமும் பயனும் கோதைக்கு நன்றாகப் புரிந்தன இப்போது!

சுவடிகளை ஆராய்ந்தான். சிறிய சுவடிகள் எல்லாம் மருத்துவம், கணித சோதிடம், வான இயல், பரியேற்றம், ஆனையேற்றம் என்று தனித் தனித் தலைப்புகளில் இருந்தன! சில ஆண்டுகளுக்கு முன்புவரை இந்த இடத்தில் துறவிகளுக்கும் அரச குமாரர்களுக்கும்

என்றே ஒரு பெரிய கலைக் கழகம் இயங்கிற்று என்பது இப்போது கோதைக்குப் புரிந்தது. ஆனால் திடீரென்று எல்லாரும் ஏதோ காரணத்தால் அங்கிருந்து போட்டது போட்டபடியே விட்டுவிட்டு ஓடியிருக்க வேண்டும் என்பதும் புலனாயிற்று!

வேலவன் கோதை சிறிய ஏட்டுத் தொகுதிகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் பெரிய சுவடிகளை மெதுவாக வெளியே எடுத்துப் பார்த்தான். ''சேரரின் கதை'', ''சோழர் குல முறை'', ''பாண்டியரின் வரலாறு'' என்று மூன்று பெரிய சுவடிகள். இன்னொன்று ''தமிழகக் குறுநில மன்னர்'' என்பது. மற்றொன்று, ''கடல் சூழ் இலங்கைக் காவலர்.''

மற்ற நான்கு சுவடிகளைக் காட்டிலும் வேலவன் கோதைக்கு இப்போது மிகவும் முக்கியமாகப் பட்டது குறுநில மன்னரைப் பற்றிய சுவடிதான்! துளுநாட்டு நன்னரும் இந்த வெள்ளைத் தீவுக் குறும்பரும் பற்றிய செய்திகள் இந்தச் சுவடியிலேதானே இருக்க வேண்டும்!

''தமிழகக் குறுநில மன்னர்'' என்ற தொகுதியை வெளியே எடுத்து வைத்துக் கொண்டான். படிக்க ஆரம்பித்தான். இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்றையும் பற்றிச் சொல்கிற சோதிட ஏடு அது என்று வேலவனுக்கு நன்றாகப் புரிந்தது. ஏடுகளைப் புரட்டினான். ''நன்னரின் வாழ்வின் முடிவு — பன்னிரண்டாம் காண்டம்'' என்று எழுதியிருந்தது.

சோதிடம் பார்ப்பதும் குறி கேட்பதும் வேலவனுக்குப் பழக்கமில்லாத செயல்! அவற்றில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. ஆனாலும் அந்த ஏட்டுச் சுவடியை மட்டில்லாத ஆவலோடு படிக்கத் தொடங்கினான். அதற்கு முக்கிய காரணம் அந்தச் சுவடி நன்னர்களுடைய முடிவுகாலத்தைப் பற்றி அல்லவா சொல்லப் போகிறது! உளவுக்குரிய எத்தனையோ ஆயமான செய்திகள் கட்டாயம் இந்த ஏட்டில் இருந்தே ஆகவேண்டுமே!

ஏட்டைப் படிக்க ஆரம்பித்த பிறகோ வேலவன் கோதையின் ஆர்வம் பன்மடங்காகப் பெருகிற்று. ஏனென்றால் அது சோதிட ஆராய்ச்சிக் கணக்காக இராமல் நிகழ்ச்சிகளைக் கதை சொல்லுவதுபோல் சொல்லிக் கொண்டு போயிற்று.

சமணத் துறவிகளும், புத்தரின் சீடர்களும் வாழ்வினையிலும் அதன் பயனாக ஏற்படும் மறுபிறப்பிலும் அசையாத நம்பிக்கை உடையவர்கள் என்பது வேலவன் கோதைக்குத் தெரியும். அந்த நம்பிக்கையை அடிப்படையாக வைத்தே கேள்வியும் விடையுமாகத் தொடங்கியது நன்னர்களின் வரலாறு.

''நன்னர்களுடைய அழிவு காலம் நெருங்குகிறது என்று வான மண்டலத்துக் கோள்களின் நிலையிலிருந்து தெரிகிறதே. அதற்குக் காரணம் என்ன முனிவரே!'' என்று ஒரு துறவி இன்னொரு துறவியைக் கேட்கிறார் ஓலைச் சுவடியிலே!

இந்தக் கேள்விக்கு இரண்டாவது துறவி சொல்கிற மறுமொழி: ''ஆமாம், முனிபுங்கவரே! உமக்குத் தெரியாதது போல் கேட்கிறீரே; இந்த நன்னர்களின் குலத்தை ஒரு மாபெரும் பெண் பாவம் பீடித்திருக்கிறது அல்லவா? அந்தப் பழி நன்னர் குலத்தை அடியோடு துடைத்துவிடப் போகிறது என்பதையே வான மண்டலம் அறிவிக்கிறது!''

முதல் துறவி மறுபடியும் கேட்கிறார்: ''ஓகோ, அதைக் குறிப்பிடுகிறீரா? சரிதான். இந்த நன்னர்களின் வேந்தர் மரபிலே ஒரு பெண் பழி என்றீரே! ஒன்றுதானா அல்லது அதற்கும் அதிகமா?''

''நன்றாக என்னை மடக்கினீர் துறவியாரே! ஒரு பெரும் பழி என்று சொன்னேனே தவிர, அது பல பழிகளின் ஒருமித்த சேர்க்கை! பாவ மூட்டை அது!''

''புரிந்து கொண்டேன் துறவியர் பெருமானே! அது என்ன என்று உணர்த்துவீர் முனிவரே!''

''துளு நாட்டு வேந்தனும் பாழி நகர்ப் பாவியுமாகிய நன்னன் செய்த பெண் கொலையைக் குறிப்பிடுகிறேன், முனிவரே! தமிழ் இலக்கியம் முழுதும் உள்ளம் கொதித்துப் பாடுகிற அத்தனை கொடுமை வாய்ந்ததும், ஒரு பெரிய அரசச் சுற்றத்தின் எதிர்கால அழிவுக்கே ஆதி காரணமாக அமைந்த பெருந்தீவினை கொண்டதும், சொல்லும் போதே உடம்பில் நெருப்பை மூட்டுவதுமாகிய அந்த நிகழ்ச்சியை உமக்குச் சொல்கிறேன். கேளும், முனிவரே!''

இவ்வாறு கூறி இரண்டாவது துறவி அந்த நிகழ்ச்சியை எடுத்து மொழிவதாக அமைந்திருந்தது அந்த ஏட்டுச் சுவடி.



சேர நாட்டுக்கு வடக்கே இருக்கிறது கொண்கான நாடு. மேற்கில் கடலும், கிழக்கில் மலையுமாகத் திகழும் இந்த நாடு கொண்கானம் என்றும் துளு நாடு என்றும் அழைக்கப் பெறும். இந்தத் துளு நாட்டை ஆண்டு வந்த நன்னர்களிலே பல கிளைகள். இவர்களில் பாழி நாட்டைத் தலைநகரமாகக் கொண்டு, மாமரத்தையே காவல் மரமாக நட்டுப் பல்லாண்டுகளாக அரசாட்சி செய்து வந்தான் நன்னன் என்ற கொடியோன்.

நன்னனுடைய துளு நாட்டிலே தமிழ் மக்களோடு சேர்ந்து ''கோசர்'' என அழைக்கப் பெறும் மக்களும் இணைந்து வாழ்ந்து வந்தார்கள். இந்தக் கோசர்கள் குச முனிவரின் வழியில் வந்தவர்கள் என்றும், இவர்களின் முன்னோர்கள் கௌசாம்பி முதலிய நான்கு பெரிய நகரங்களை அமைத்து வாழ்ந்து வந்ததால், இவர்களை நாலூர்க் கோசர்கள் என்று சங்கப் புலவர்கள் அழைத்தார்கள் என்றும் சோதிட ஏடு கூறிற்று. இவர்களுடைய பழைமையான இடம் வேற்று நாடு என்றும், எத்தனையோ பல ஆண்டுகளுக்கு முன்பே இவர்கள் தமிழ் நாட்டில் வந்து குடியேறித் தமிழ் மக்களுடன் கலந்து கொண்டார்கள் என்றும் இன்னொரு வரலாறு. எது எப்படியானாலும் இவர்கள் பல நாடுகளில் சுற்றித் திரிந்து விட்டுக் கடைசியில் தமிழ் நாட்டின் மேற்குக் கடற்கரையில் வந்து துளு நாட்டில் தங்கினார்கள் என்பது உண்மை.

இந்தக் கோசர்களுடைய தனிச் சிறப்பு என்னவென்றால், இவர்களுடைய வில் திறமை பகைவர்களும் வியக்கத்தக்க விதத்தில் இயங்கும்! இதைக் கண்டு பாராட்டிய துளு நாட்டு வேளிர் தலைவர்களும் குறுநில மன்னர்களும் இந்தக் கோசர்களைத் தமக்குப் படை வீரர்களாக அமர்த்திக் கொண்டார்கள். தங்களுடைய அரச சபையிலே பெரிய பதவிகளும் கொடுத்து இந்தக் கோசர்களை ஆதரித்து வந்தார்கள். கோசர்களும் தங்களை ஆதரிக்கும் மன்னர்களுக்கு உண்மையானவர்களாக இருந்ததால் தமிழ் இலக்கியம் இவர்களை ''ஒன்று மொழிக் கோசர்'' என்று பாராட்டியது.

இப்படியெல்லாம் பாராட்டப்பட்ட கோசர்களுக்கு ஒரு தலைவன் இருந்தான். அவனுக்கு நேரிழை என்று ஒரு மகள். ஒப்புயர்வற்ற ஒரே மகள். முன்னோர்களின் பழைமை நாட்டு எழிலும் குடி புகுந்த நாடாகிய தமிழ் நாட்டு வனப்பும் ஒட்டி வளர்ந்து ஓர் உருவாக அமைந்த ஒரு ஒட்டுமாங்கன்று அவள்! படிகத்தின் வெண்மையும் மாந்தளிரின் பசுமையும் இணைந்த ஒரு நிறம். மென்மையான மேனி. சூரியனுடைய ஒளியில் பளபளக்கிற மாங்கொழுந்து போல அந்த மேனியில் ஒரு ஒளி வெட்டு! வேனிற்காலத்தில் தென்றற் காற்று உடம்பிலே பட்டதும் மாமரத்தில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டு அப்படியே வடுவும் இளங்காய்களுமாகக் குலுங்குமே, அது போல இளமையின் பொலிவு மேனியிலே விம்முகிற வயது. தகப்பனுக்கு ஒரே மகளானதால் சீரும் சிறப்புமாக, நன்னர்களின் காவல் மரத்தைப் போல அரசப் பெருமிதத்துடன் வளர்ந்த தேமாங்கன்னி அவள். தும்பை அறுத்துக் கொண்டு துள்ளி ஓடுகிற கன்றுக்குட்டியைப் போல முழு உரிமையோடு காடுகளிலும் சோலைகளிலும் துள்ளித் திரிகிற பயமறியாத இளங்கன்று அந்த நேரிழை! வில்லாளிகளின் தலைவனை தந்தையை எண்ணி, யாராலும் அந்த ஓடுகிற கன்றைப் பிடித்துக் கட்டமுடியாத நிலை!

இப்படியிருக்கும் போதுதான் மிகப் பெருங்கேடு ஒன்று எதிர்பாராதவகையில் நிகழ்வதாயிற்று!

துளு நாட்டு நன்னனுடைய பாழி நகரத்து எல்லையிலே, அந்த நகரத்தை அணைத்துக் கொண்டு ஓடுகிறது எழிலாறு. அந்த எழிலாற்றின் கரையிலே சோலைகளும் நந்தவனமுமாக அடர்ந்த பூங்காவனத்துக்குள்ளே அந்த ஆற்றின் கிளையாறு ஒன்று, ஒரு சிறிய அருவியாக விழுந்து, பிறகு சிற்றோடையாகச் சலசலத்து ஓடுகிறது. அந்த அருவி விழுகிற எல்லை மேட்டின் மீது தான், நின்றது நன்னனுடைய காவல் மரமாகிய மாமரம்!

ஒரு கோவிலின் கொடி மரத்துக்கு எத்தனை பெருமை உண்டோ, ஒரு பாடல் பெற்ற தலத்தின் தெய்வ மரத்துக்கு எத்தனை புனிதம் உண்டோ அத்தனை பெருமையும் புனிதமும் சிறப்பும், ஒரு காவல் மரத்துக்கு அந்தக் காலத்தில் இருந்து வந்தது. ஒரு நாட்டின் மீது படையெடுக்கிற அரசர்கள் முதலில் குறி வைப்பது காவல் மரத்தைத்தான். ஒரு வேற்று அரசன் வந்து தனது காவல் மரத்தை வெட்டி வீழ்த்தி விட்டான் என்றால், தன்னையே வெட்டி வீழ்த்தியதுபோலக் கருதுவான் காவல் மரத்துக்கு உரிய அரசன்! இதனால் அந்தக் காவல் மரத்

தைக் காப்பாற்றுவதில் வீரர்கள் அனைவரும் மிகுந்த கருத்துச் செலுத்துவார்கள். அந்த மரத்தின் கிளைகள், இலைகள்கூட வேறு யாருடைய கையிலும் அகப்படாமல், காலில் மிதிபடாமல் காவல் காப்பார்கள் வீரர்கள். அந்த மரத்தின் கனிகளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். யாருமே அந்த மரத்தில் ஏறவோ கனிகளைப் பறிக்கவோ கூடாது என்று கண்டிப்பு!

நன்னனுடைய மாமரத்துக்குக் கீழே வேலி கட்டி அதன் கனிகள் எங்கும் வெளியே விழுந்து விடாமல் நன்கு பாதுகாத்து வந்தார்கள். என்றாலும், ஒரு நாள் ஒரு சூழ்ச்சியைச் செய்தது தீவினை!

இந்தத் தீவினையைப் பற்றிக் கூறும் போது வேலவன் கோதையின் கையிலிருந்த அந்தக் குகையேட்டில் வினைப் பயன் பற்றிப் பல நூறு பாடல்கள் எழுதி வைத்திருந்தார்கள். அவற்றையெல்லாம் விட்டு விட்டுக் கதையை மேலே புரட்டினன் வேலவன் கோதை.

* * *



இளவேனிற் காலம் அது. நேரி மலைக்குச் சென்று மலை வளம் கண்டு களிப்பதும், ஆற்றிலும் கடலிலும் நீராடி மகிழ்வதும் சேர வேந்தர்களுடைய நெடுநாளையப் பழக்கம். நன்னனும் சேர மன்னரையும் விடச் சிறப்பு மிக்கவன் என்ற தற்பெருமைக்கு ஏற்ப ஏழில் மலைக்குச் சென்று, ''ஆருட்டு'' என்னும் அந்த நீராட்டுத் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தான்.

சேர நாடும் துளு நாடும் பிறநாடுகளும் ஆருட்டில் மூழ்கியிருந்தது போலவே, நன்னனுடைய அரசியற் பெருமக்களில் ஒருவனாகிய கோசர் தலைவனும், தன் மகள் நேரிழையுடன் சுற்றத்தார்கள் சூழப் பாழிநகர் எழிலாற்றின் கரைக்குச் சென்று, ஆருட்டு நீராட்டை நடத்திக் கொண்டிருந்தான்!

நேரிழை என்ற பயமறியா இளங் கன்று பூஞ்சோலைக்குள்ளே புகுந்து, அங்கே துள்ளி ஓடிய சிற்றோடையிலே கூந்தல் புரளக் கயல்விழிகள் மருளத் தாமரைக் கைகளை நீட்டி நீட்டி, நீந்தியும் மிதந்தும் விளையாடிக் கொண்டிருந்தாள்! தன் மகளுடைய அழகு விளையாட்டைக் கண்டு களித்தவாறு கோசர் தலைவனும் அவன் மனைவியும் கரையிலே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது தண்ணீரில் ஒரு மாங்கனி மிதந்து வந்தது. ஆருட்டு ஆடிய மக்களின் வெறியைக் கண்டு தானும் வெறி கொண்ட ஒரு கடுவன் குரங்கு, அருவி மேட்டிலே நின்ற காவல் மரத்தின் மீது தொத்திப் பாய்ந்தேறி, ஒரு மாம்பழத்தைப் பறித்துத் தண்ணீரிலே வீசியிருக்க வேண்டும்! இல்லாவிடில் காவல் மரத்தின் பழம் அத்தனை வேலியையும் காவலையும் தாண்டித் தண்ணீருக்குள் எப்படி விழும்! குரங்கின் விளையாட்டா அது, தீவினை என்ற ஊழ்வினைக் குரங்கின் விளையாட்டுத்தான் அது என்று முழங்கியது துறவிகளின் ஏடு!

''கண்ணே, தள்ளி நீந்தம்மா அந்தப் பழத்தைத் தொட்டு விடாதே அம்மா!'' என்று கதறினன் கரையிலிருந்த கோசர் தலைவன்! பனம்பழம் போல அவ்வளவு வண்ணமும், மாதுளம் பழம் போல அத்துணை செம்மஞ்சள் நிறமும், துளுநாட்டிலேயே வேறு எந்த மாம்பழத்துக்கும் கிடையாது! அரச மரத்தின் அரசக் கனி அது! பார்த்ததுமே அதைப் புரிந்து கொண்டு அவ்வாறு கதறினன் தந்தை!

''இந்தப் பழந்தானே! தொட்டால் என்னவாம்?'' என்று சொல்லிக் கொண்டே, வெடுக்கென்று பாய்ந்து தண்ணீரில் மிதந்து போய்க் கொண்டிருந்த அந்தப் பழத்தைப் பற்றி எடுத்தாள் நேரிழை.

''அம்மா அம்மா! அதை எடுக்காதே, கண்ணே! காவல் மரத்துப் பழம் அது!'' என்று கூச்சலிட்டான் கோசத் தலைவன். அந்தக் கூச்சலைக் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்த பல வீரர்களும் என்னவோ ஏதோ என்று பதறிக் கொண்டு ஓடி வந்தார்கள். இதற்குள் நேரிழை, ''மற்றவர்களுக்கு அந்தக் கண்டிப்பு! நமக்குக்கூடவா அது!'' என்று சொல்லிக் கொண்டே, புயத்தளவு தண்ணீரில் கால்களை மணலிலே பாவி நின்றவாறு, அந்த மாம்பழத்தை எடுத்து மோந்து பார்த்தாள். ''ஆகா! என்ன மணம்! என்ன மணம்!'' என்று சொல்லிக் கொண்டு அந்த வாசனையிலே ஈடுபட்டவளாய் மாங்கனியைக் கடித்தாள். சுவைத்தாள். சாற்றை உறிஞ்சினள்! மறு விநாடி வரால் மீனைப் போல் மீண்டும் தண்ணீருக்குள் முக்குளி பாய்ந்து, நீரின் அடித்தளத்தில் மூச்சடக்கிச் சற்று நேரம் நீந்திச் சென்று, தொலைவிலே போய்த் தலையைத் தண்ணீருக்கு வெளியே தூக்கித் தகப்பனைப் பார்த்துச் சிரித்தாள் நேரிழை!



"கோசர்கள் காவல் மரத்துக் கனியைப் பறித்துச் சாப்பிட்டு விட்டார்கள்!''

இவ்வாறு மாம்பழத்துக்குக் கையும் காலும் கொடுத்து வருணைம் பூசிற்று ஊர் வம்பு! அதற்கு ''அலர்'' என்று அந்தக்காலத்துப் பெயர்!

காட்டிலே தீ பரவுவது போல் என்றும், வேள்வி நெய்யிலே நெருப்பு ஏறுவது போல் என்றும், புலவர்கள் உவமை சொல்வார்கள். அப்படிப் பரவிப் பற்றிப் பிடித்தது இந்தச் செய்தி பாழி நகரம் முழுவதும்! ஏழில் மலைக்குச் சென்றிருந்த நன்னனிடமும் பரவியது இந்தச் செய்தித்தீ! அவனுடைய இரண்டு செவிகளையும் சுட்டது அது! எந்த ஆறுட்டு நீராட்டினாலும் அணைத்துக் குளிர வைக்கமுடியாதபடி அவனுடைய நெஞ்சிலே தீப் பிடித்தது. தலைநகரை நோக்கி விரைந்தான் நன்னன்!

திருவோலக்கம் கூடியது பாழி நகரத்திலே!

''அமைச்சர்களே! என்னுடைய தானைத் தலைவர்களே! போர் வீரர்களே! ஆறுட்டுக்காக நான்தான் பாழி நகரத்தை விட்டு ஏழில்மலைக்கு நீராடச் சென்றிருந்தேன். ஆனால் நீங்கள் எல்லாரும் என்ன ஆனீர்கள்? அனைவரும் மாண்டு மடிந்தா போனீர்கள்? காவல் மரத்தின் கனியைப் பறித்த கோசக் கைகள் இன்னும் வெட்டுண்டு தரையில் வீழாமல் இருப்பது ஏன்? ஏன் என்று உங்களைக் கேட்கிறேன். வாய் திறந்து சொல்லுங்கள். ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?''


இவ்வாறு வெகுண்டு கூக்குரலிட்டான் அந்தக் கொடுங்கோலன் நன்னன்.

திருவோலக்கம் முழுவதும் அப்படியே நடுநடுங்கியது! அந்த அரச சபையில் கூடியிருந்த அத்தனை வீரர்களும் கையும் காலும் பதறினார்கள். யாருக்கும் எதுவும் மறுமொழியாகப் பேச நாக்கு எழவில்லை.

ஒருவன் எழுந்தான் அந்த வீரர் குழுவிலே! வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் 'சரேல்' என்று எழுந்



தூரத்திலிருந்து காணில்
அழகு...



அருகே நெருங்கினலோ
கொஞ்சும் எழில்

ஆம், **லாக்டோ-காலமைன்** உபயோகித்தால்

இனி எழிலுடன் விளங்குங்கள்—லாக்டோ-காலமைன் ஒரு சிறந்த அழகுசாதனம்.சருமக்கோளாறுகளை மிருதுவாயும், மென்மையாகவும் நீக்குகிறது.

இனி என்றுமே எழிலுடன் மிளிருங்கள்—லாக்டோ-காலமைனில் சருமத்திற்கு நலன் தரும் காலமைன், விட்ச்ஹேஸல் இரண்டும் உள்ளன...சருமத்தைத் தூய்மையுடன் ஒளிரச் செய்கிறது.

லாக்டோ-காலமைன் மூலம் எழிலுடன் ஒளி வீசுங்கள்.

கட்டைப்பெட்டியுடன், திருட்டுச் செய்யமுடியாத சீசாவில் தற்போது கிடைக்கிறது.



சருமக் கோளாறுகளைக்
களையும் ஒரே
அழகு சாதனப்
பொருள்

லாக்டோ காலமைன் ரகங்களில் இப்பொழுது கிரீம், டால்க் இரண்டும் கிடைக்கின்றன.

Benson/I-CIL-9-TAM

தான். எழுந்த வேகத்தைப் போலவே தாழ்ந்து உடலை வளைத்துத் தலையை வணங்கி இரு கைகளையும் கூப்பிய வாறு பேசத் தொடங்கினான்.

''வேந்தர் வேந்தே! எதிர்பாராத வாறு ஒரு சிறு தவறு நேர்ந்துள்ளது. அதைச் சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகி—''

''விளக்கமா! நாளைத் தலைவர்களே! என் அமைச்சர் பெருமக்களே! விளக்கங்கள் நடைபெறுவது புலவர்களின் சங்கத்திலே! இது திருவோலக்கம்! இது வீரர்களின் அரங்கு! தெரிகிறதா! நன்னனுடைய அரசியல் சுற்றம் கூடியிருக்கிற வீர மன்றம் இது. இங்கே விளக்கங்களுக்கு இடமில்லை. இங்கெல்லாம் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு!''

'' மன்னவா! நடந்தது என்னவென்றால்.......''

''வேண்டாம்! எந்த விளக்கமும் என் செவிகளில் ஏறாது!''

''வேந்தே! மாம்பழத்தை எடுத்தது யாரென்று தெரிந்தால் தாங்கள் இவ்வாறு கூறமாட்ட—''

''யாராக இருந்தாலும் சரி. நன்னன் ஆணையிடுகிறேன். இந்தத்திருவோலக்கத்திலிருந்து அரச ஆணையாக இதை அறிவிக்கிறேன். நமது காவல் மரத்தின் மாங்கனியைத் தொட்டது யாராக இருந்தாலும், உடனே இந்தக் கணமே சென்று கனியைக் கொய்வதுபோலத் தலையைக் கொய்து விடுங்கள்! இது என் ஆணை!''

'ஆகாகா' என்று ஓர் அங்கலாய்ப்பு அந்த அரசச் சுற்றத்திலே மெல்லொலியாகப் பரவியது. மறுபடியும் அதே படை வீரன் எழுந்தான்.

''அரசே! மீண்டும் மீண்டும் எழுந்து பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். காவல் மரத்தின் கனியைத் தொட்டது ஒரு பெண் — ''

''இருக்கட்டும்! பெண் ஆண் என்ற பாகுபாடு இதில் இல்லை. காவல் மரத்தின் கனியைத் தொட்டது மிகப் பெருந் தவறு. மன்னிக்க முடியாத தவறு. ஆகையால் என்னுடைய தீர்ப்பில் மாற்றம் இல்லை!''

வீரன் மருள மருள விழித்தான். இதைப் பார்த்ததும் நன்னனுடைய குரல் இன்னும் கடுமையாயிற்று.

''கோச வீரனே! நன்னன் அறிவித்த சொல்லுக்கு மறு சொல் இனி இல்லை. சொன்னது சொன்னதுதான்! தவறு செய்தது யாராக இருந்தாலும் மரண தண்டனை விதித்தது விதித்தது தான்!''

கோச வீரனுடைய கண்கள் கலங்கின. நாக்குழறிற்று.

''மன்னர் மன்னா! அறியாமல் செய்த பிழை இது! இந்தப் பிழையைச் செய்தது வேறு யாருமில்லை. என் மகள் நேரிழை.''

திருவோலக்கத்தில் ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று. தண்ணீருக்குள் 'தொப்' என்று மாம்பழம் விழுந்தால், அதைச் சுற்றி வட்டம் வட்டமாகச் சுருள் சுருளாக அலைகள் எழுந்து கரைவரையில் சென்று தாக்குமே, அது போல ஒரு துன்ப அதிர்ச்சி எழுந்து அலை வீசி அமைச்சர் முதல் கடைசிப் போர் வீரன் வரை சென்று தாக்கிற்று.

''கோசர் தலைவா! விடுத்த ஆணையை இனி மாற்றுவதற்கில்லை. மகளை அடக்கி வளர்க்காத குற்றம் உன்னுடையது. அதற்கு இந்தத் தண்டனையை உன் மகள் துய்த்தே ஆக வேண்டும்!''

கோசர் தலைவன் நிலத்தில் விழுந்தான். வீரமும் ஆற்றலும் எல்லாம் தரையிலே நன்னனுக்கு முன்பாகப் போட்டு, அதன் மேல் தன் உடம்பைச் சாய்த்து இரண்டு கைகளையும் கூப்பியவாறு விழுந்தான். வணங்கினான்.

''நன்னர் பெருமானே! என் மகளுடைய எடைக்கு எடை பொன்னும் தொண்ணூற்று ஒன்பது ஆனையும் காணிக்கை செலுத்துகிறேன். பிழையை மன்னித்து அருள வேண்டும்!''

மன்னன் சீற்றத்தோடு எழுந்தான். சுற்றம் முழுதும் அனல் சிந்தும்படி பார்த்தான்.

''அமைச்சர்களே! திருவோலக்கம் கலைகிறது. நீங்கள் அனைவரும் எழுந்து செல்லலாம். நமது தண்டனையை நிறைவேற்றலாம்!''


* * *



ஏடுகளைப் படித்துக் கொண்டே வந்த வேலவன் கோதைக்குக் கண்களில் நீர் மல்கியது.

''அட பாவி! இதனால்தான் பெண் கொலை புரிந்த நன்னன் என்று வசை சொல்கிறார்களா!'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே சுவடியை மேலும் புரட்டினான்.

நன்னன் செய்த பெண் பழி இம்மட்டோ? பெண் கொலை புரிந்த நன்னன் இன்னும் இதற்கு மேலும் பெண் பாவம் செய்தான். ''பிண்டன்'' என்னும் அரசனுடன் போர் செய்து



டாக்டர்: சார்! உங்களுக்கு அடிக்கடி கழுத்து வலி வருவதற்குக் காரணம் தெரிந்து கொண்டு விட்டேன்!

பகைவர்களை அழித்து ஒழித்துவிட்டு, வெற்றியோடு நிறுத்தாமல் பகைவர்களுடைய பத்தினியரின் கூந்தலைக் களைந்தெடுத்து அதனால் கயிறு திரித்தான்!

இந்தச் செய்தியை ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கிறான் வேலவன். ஆனாலும் இது நன்னனுடைய பகைவர்கள் யாராவது திரித்த கயிறாக இருக்குமோ என்று எண்ணினான். இப்போது ஓலைச்சுவடியே ஆதாரமாக நின்று, வேலவன் கோதையை ஆத்திரம் கொள்ளும்படி செய்தது! நன்னர்களின் அறமற்ற கொடுமை எங்கே போய் முடிகிறது, பார்ப்போம் என்ற எரிச்சலுடன் ஏடுகளை மேலே புரட்டினான். எதிர்காலப் பலன் ஆரம்பமாயிற்று.

பெண் கொலை புரிந்தான், பகையரசர்களின் வாழ்வரசிகளைச் சித்திர வதை செய்து மரணத்தை விடக் கொடுமைப் படுத்தினான். இத்தனை தீவினையும் எளிதில் விடுமா? முனிவர்களாகிய ஞானிகளின் 'உறுவது உரைத்தல்' என்ற தீர்ப்பின்படி, நன்னன் செய்த பெண் பழி, பெண்மையின் சீற்றம் நன்னர் குலத்தை வலிமையாகப் பற்றிப் பிடித்து எரிக்கிறது. ஒரு மாங்கனியைக் கடித்ததற்கு மரண தண்டனை என்றால், மாங்கனிகளில் எல்லாம் இனிய மாங்கனியான ஒரு தேமாங் கன்னிக் கனியைக் கடிந்தவனுக்கு, ஊழ்வினை எத்தகைய தண்டனையை வழங்கும் என்று சொல்லவும் வேண்டுமா? அதோடு எத்தனை பெண்களின் கூந்தலைக் களைந்து உயிரோடு மரண வேதனையைத் தந்திருக்கிறான் இந்த நன்னன்! எனவே, பெண் பாவம் என்பது நன்னனின் குலத்தின் மீது படர்ந்து ஒரு பெண்ணின் மூலமாகவே பழி தீர்த்துக் கொள்ளப்போகிறது. நன்னர் குலத்தின் அழிவுக்கு ஒரு பெண்ணே காரணமாக அமையப் போகிறாள்!''

இவ்வாறு முடிந்தது ஏட்டுச் சுவடி!

வேலவன் கோதைக்கு உள்ளத்தில் சீற்றமும் வெறுப்பும் கசப்பும் மண்டின. மனப் புழுக்கம் தீருவதற்காக வெளியே சோலைக்கு வந்து குளிர்ந்த காற்றைப் பருகலானான்.

'நன்னர்களுடைய முடிவு காலம் ஒரு பெண்ணினால்தான் ஏற்படப் போகிறது என்று ஏடு சொல்கிறதே. ஒரு வேளை அந்தப் பெண் இந்த இளவரசி நீலவல்லியாகவே இருக்குமோ! ஏன் இருக்கக் கூடாது? இந்த வெள்ளைத் தீவின் கடற்குறும்பர்களும் நன்னர்களும் ஒரே கூட்டந்தானே! நீலவல்லி என்ற இந்தப் பெண்ணரசியே குறும்பர்களின் அழிவுக்குக் காரணமாகி, அந்த அழிவே நன்னர்களின் அழிவுக்கும் காரணமாகலாம் அல்லவா?'

இவ்வாறு எண்ணங்களை வலை பின்னிக் கொண்டே சுனையின் கரையிலிருந்த ஒரு பாறையில் அமர்ந்தான் வேலவன் கோதை. அப்பொழுது—''தொப்'' என்று ஓசை கேட்டது. தலைக்கு மேலே ஒரு பெரிய மாமரம். அதிலிருந்து ஒரு மாம்பழம் தண்ணீருக்குள் விழுந்து மிதந்தது. மேலே ஏதாவது குரங்கு பாய்ந்து செல்கிறதா என்று மரங்களைப் பார்த்தான். எதையும் காணோம். சுனைத் தண்ணீரானதால் விழுந்த மாம்பழம் எங்கும் ஓடி விடாமல் அங்கேயே வட்டம் சுற்றியது. வேலவன்கோதைக்கு உள்ளத்தில் ஒரு மின்னல் தாக்கியது! 'அந்தப் பழத்தைத் தொடலாமோ?'

''என்ன பைத்தியக்கார நினைப்பு! ஏட்டில் வந்த மாம்பழத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்!'' என்று நினைத்துச் சுனைக்குள்ளே இறங்கி அந்தத் தீங்கனி மாவைக் கையிலே எடுத்தான். ''கம்'' என்று கனி மணம் கமழ்ந்தது. பல்லுக்கு அருகிலே கொண்டு போனான் வேலவன்கோதை. உடனே பதறினான். காரணம், பின்புறம் எங்கிருந்தோ ஒரு பாறாங்கல் 'கட கட' என்று பாறைகளிலே உருண்டது. அதைத் தொடர்ந்து ஏதோ ஒரு விநோதமான கூச்சல் கேட்டது.

கையிலே எடுத்த மாம்பழத்தை மறுபடியும் தண்ணீருக்குள்ளேயே உதறிவிட்டுப் பதற்றத்தோடு மறு பக்கம் திரும்பினான் வேலவன் கோதை! (தொடரும்



சென்னை
வெலிங்டன்
பிராட்வே
சயானி
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
தனிப்பிறவி
டைரக்ஷன்·M.A.திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பா தேவர்



MTP-I-P-I-65/66 TM

சினிமா


தாலி பாக்கியம்

திரு எம். ஜி. ஆர். நடித்த படம் என்றால் குத்துச் சண்டைகள் இல்லாமல் இராது. தீய சக்திகளை எதிர்த்துப் போராடித் தூயவன் வெற்றி பெறுகிறான் என்ற கருத்து இல்லாமல் போகாது. அடிக்கடி பார்த்தாலும் திரு எம். ஜி. ஆர். அவர்களுடைய ரசிகர்களுக்கு அலுக்காத கருத்துக்கள்; காட்சிகள் இவை. அப்படியிருக்க, படாதிபதிகள் இதனை மாற்றிப் புதிய கருத்துக்களைப் புகுத்திப் பரீட்சித்துப் பார்க்க எதற்காகத் துணியப் போகிறார்கள்? பூவாளூர் சுந்தரராமனின் கதையில் புதுமை ஏதேனும் இருந்திருக்குமானாலும் அது வழக்கமான இந்தக் காட்சிகளுக்கிடையே எங்கோ தேடிப் பார்க்க வேண்டிய விதத்தில் ஒளிந்து கொண்டு விட்டது.

தாலி பாக்கியம் ஜனரஞ்சகமான படம். கப்பையாவின் நடிப்பு சிறப்பாக இருக்கிறது. நாகேஷ், நம்பியார் ஆகியோர் தங்களது வழக்கப்படி நடித்திருக்கிறார்கள். மாறுதல் என்ற முறையில் பல காலத்துக்குப் பிறகு எம். என். ராஜத்தைத் திரையில் காண்கிறோம். சரோஜாதேவியின் நடனங்கள், 'பண்ணைக் காலத்திலேயே தமிழ் நாட்டுக் கிராமப்புறங்களில் 'டுவிஸ்ட்' நடனம் பிரபலமடைந்திருந்ததா என்ன?' என்று கேட்க வைக்கிறது.

முதற் பகுதியில் வேட்டி கட்டிய கோலத்தில் வரும் திரு எம். ஜி. ஆர். பிற்பகுதியில் பாண்டும் கோட்டுமாகக் காட்சி தருகிறார். சரோஜாதேவியுடன் 'ஃபிரீயா'க நடிக்கிறார் என்பது இந்தப் படத்தைப் பார்த்தாலே புரியவில்லையா?





சின்னஞ்சிறு உலகம்

அரிச்சந்திரனை ஒரு பொய் சொல்ல வைக்கப் படாத பாடு பட்டார் விசுவாமித்திரர். அப்பாவி அய்யாக்கண்ணுவினால் அரிச்சந்திரனைப் போல் சத்தியத்தைக் கடைசிவரை காப்பாற்ற முடியுமா? சத்தியம் பேசி அல்லலுற்ற அவன் ஒரு பொய் சொல்லி, அதன் விபரீத பலன்களை அனுபவிக்கிறான்.

கதை ஏனோதானோ என்று எப்படியோ இருக்கிறது. ஆனால் டைரக்டர் கோபாலகிருஷ்ணனது வசனங்களிலே இழையோடும் நகைச்சுவை, கோர்ட் காட்சிகள், கே. ஆர். விஜயாவின் துடிப்பான நடிப்பு, நாகேஷின் விபரீதக் கற்பனைகள் ஆகியவை படத்தைப் பார்க்கத் தூண்டுகின்றன.

ஜெமினி கணேசன் அப்பாவி அய்யாக்கண்ணுவாக வந்து தம் தங்கையிடம் பாசத்தைப் பொழிகிறார். அவரது தங்கையாக வரும் கே. ஆர். விஜயாவின் வெகுளி நடிப்பு படத்துக்கு உயிரூட்டுகிறது. ராதிகாவின் நடனம் இப்படத்துக்குத் திருஷ்டிபரிகாரம்!

'தன்மானத்தை உயிரினும் மேலெனப் பேணி மரணத்தில் வாழ்ந்தவள் ஜான்சி ராணி' என்று பாடும் புதுமைப் பெண்கள் நம் பண்பை மறந்து அரை டிராயரில் காட்சியளிக்க வேண்டியது அவசியம்தானா? இதில் பாரதி பெயரை வேறு இழுத்து இழிவு படுத்தியிருக்க வேண்டாம்!

விபரீதக் கற்பனைகளில் மூழ்கித் தான் அழுவதோடு பிறரையும் அழ வைக்கும் நாகேஷ்தான் 'வள்ளிக்கோட்டை மைனர்'. இந்த அமுமூஞ்சியை நமக்கு வெறுக்கத் தோன்றவில்லை.

சின்னஞ் சிறு உலகம் ரசித்து மகிழக்கூடிய நல்ல பொழுது போக்குப் படம்தான் என்றாலும் கே. எஸ். கோபாலகிருஷ்ணனிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்த்துச் செல்கிறோம், ஏமாறுகிறோம். 'ஆனைக்குத்தான் அடி சறுக்கியதா அல்லது வேண்டுமென்றே சறுக்கி விழுந்ததா' என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது படம்.

பாலைவன விளக்கு

கடலில் செல்லும் கப்பல்களுக்கு வழி காட்டுவதற்கும், திசை யறிவிப்பதற்கும் கலங்கரை விளக்கங்கள் இருப்பது போல் மணல் கடலான பாலைவனத்திலும் இத்தகைய தீபஸ்தம்பங்கள் உண்டு. திடீரென்று வீசும் ஸைமூம் என்னும் பாலைப் புயல்களால் பாலைவனப் பாதை மண்மேடிட்டு இருந்த இடமே தெரியாமல் மறைந்து விடுவதுண்டு. அப்பொழுது பாலைவனத்தில் பிரயாணக் கூட்டங்களுக்கு வழி காட்டுவதற்காக நகரங்களுக்கு அருகில் இத்தகைய பெரும் ஒளி விளக்குகளை அமைத்திருப்பார்கள். நெடுந் தொலைவுக்கு ஒளி வீசும் இந்தத் தீபத் தூண்களின் எரிபொருள்கள் கந்தைத் துணியும், எண்ணெயும்தான்! தகவல்: ''பாருக்''

ஆதாரம் : 'மைஇந்தியா'


பூவா, தலையா?

சாதாரணமாகக் கால்பந்தாட்டப் போட்டி நடக்கும்போது யாருக்காவது அடிபட்டால் டாக்டர் அழைக்கப்படுவார். ஆனால் இங்கிலாந்தில் நடந்த ஓர் ஆட்டத்தில் விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்னரே டாக்டர் அழைக்கப்பட்டார்.

காரணம்: ஆட்டத்தை யார் ஆரம்பிப்பது என்பதை முடிவெடுக்க, மத்தியஸ்தர் 'பூவா, தலையா' என்று நாணயத்தை மேலே சுண்டினார். இதை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நின்றனர் காப்டன்கள் இருவரும். காசு கீழே விழாமல் ஒரு காப்டனின் 'அங்காந்திருக்கும் வாய்தனிலே' புகுந்து, நேரே வயிற்றுக்குள் சென்றுவிட்டது!

தகவல்: ''மலிக்''

ஆதாரம்: பேஜியண்ட்



வளர்த்த கடா....!



சீன அணுகுண்டு தயாரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்த மூன்று விஞ்ஞானிகளும் அமெரிக்காவில் பயின்றவர்களாம்! டாக்டர் சின் ஷ்யூ ஷென் இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவில் பணியாற்றியவர். சென் நிங் யாங், சுங் தாவ் லீ ஆகிய மற்ற இருவரும் அமெரிக்கப் பிரஜைகளாக இருந்தபோது நோபல் பரிசு பெற்றவர்கள்! ஆதாரம்: யு.எஸ். நியூஸ் & வோர்ல்ட் ரிப்போர்ட் தகவல்: மலிக்

கல்கியின் நகைச்சுவை

பஞ்சபாண்டவர்கள் ஒருசமயம் துரியோதன மகாராஜாவிடம் சென்று, ''எங்களுக்கு ஐந்து ராஜ்யங்கள் வேண்டும்; இல்லாவிடில் ஐந்து ஊர்கள் வேண்டும்; அதுவும் இல்லாவிடில் ஐந்து வீடுகள் வேண்டும்'' என்று கேட்டார்கள்.

''ஐந்து ராஜ்யங்கள் கிடையாது; ஐந்து ஊர்கள் கொடுக்க முடியாது; ஐந்து வீடுகள் வேண்டுமானால் வீட்டு வாடகைக் கண்ட்ரோலரிடம் விண்ணப்பம் போடுங்கள்'' என்றான் துரியோதனன். ''வீட்டுக் கண்ட்ரோலரிடம் போவதை விடக் காட்டுக்குப் போய்த் தொலைகிறோம்'' என்று பஞ்சபாண்டவர்கள் போனார்கள்.

– கி. நாராயணன்.


டுமீல்!

டெலிவிஷன், சினிமா முதலியவற்றில் காட்டப்படும் பயங்கரக் கதைகள் மூலமாகப் பிஞ்சு உள்ளங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு வாசகர் கடிதம் எழுதி யிருந்தார்.

பாட்டி இறந்து போனாள் என்று தன் ஆறு வயதுக் குழந்தையிடம் சொன்னாள் தாயார். அந்தச் செய்தியைத் தன் நான்கு வயதுத் தம்பியிடம் பரப்பிற்று அந்த ஆறு வயதுச் செல்வம்.

சில விநாடிகள் தான் கேட்ட செய்தியைப் பற்றிச் சிந்தித்த அந்த 'நான்கு வயது' கேட்ட கேள்வி: ''யாருடைய துப்பாக்கி பாட்டியின் உயிரைக் குடித்தது?''

—''பிலால்''



பொன் மொழிகள்

பெண் டாக்டர்கள் இல்லாமல், பெண் நீதிக் குமாஸ்தாக்கள் இல்லாமல், பெண் வழக்கறிஞர்கள் இல்லாமல், பெண் விஞ்ஞானிகள் இல்லாமல், பெண் எழுத்தாளர்கள் இல்லாமல் நம்மால் வாழ முடியும். ஆனால் தாய்மார்கள் இல்லாமல், மனைவிமார்கள் இல்லாமல், தங்கை, சகோதரிகள் இல்லாமல், சிநேகிதிகள் இல்லாமல் - அதாவது ஆண்களிடத்தில் உள்ள உயர்வையே கண்ணெனக் கொண்டு அன்பு செலுத்தி, நாம் அறியாதவாறு, ஒவ்வொரு விநாடியும் ஆக்குவித்து, ஊக்குவித்து நம்மைக் காப்பாற்றும் அவர்களில்லாமல் போனால் வாழ்வே துக்ககரமாக ஆகிவிடும்.

- லியோ டால்ஸ்டாய்.

★ ★ ★

காதலுக்கும் வீரத்துக்கும் தொடர்புண்டு. காதல் நிகழும் இடத்தில் வீரம் செறியும்; வீரம் செறியுமிடத்தில் காதல் நிகழும். அஃதில்லா இடத்தில் இஃது இராது. இஃதில்லா இடத்தில் அஃது இராது. காதல் அகம்; வீரம் புறம்.

- திரு வி. க.

★ ★ ★

உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டுமானால் ஒன்று - மனம் குறுகிக் குறுகித் தன்னையும் மறந்து போகும் நிலை வர வேண்டும்; அல்லது மனம் விரிந்து விரிந்து எல்லையற்ற உலகத்தில் திரிய வேண்டும்.

- மு. வ.

ஆதாரம்: அறிவுத்திரள். - அ. பாண்டியராசன்

மலர்கள் - ஒரு லட்ச ரூபாய்!

பம்பாயின் மேயர் உயர்திரு பட்கார் பதவி ஏற்றதும், தாம் மாலைகளும், பூச்செண்டுகளும் ஏற்க முடியாதென்றும், அவற்றுக்குப் பதிலாக அத் தொகையை ஏழைகள் கஷ்ட நிவாரண நிதிக்கு அளிக்குமாறும் கேட்டுக் கொண்டார். காரணம்: பம்பாய் ரோட்டரி கிளப் எடுத்துள்ள கணக்குப்படி ஆண்டு தோறும் பம்பாய் மாநகர் மட்டும் மாலைகளுக்கும் பூச்செண்டுகளுக்குமாக மூன்று கோடியே அறுபத்தைந்து லட்ச ரூபாய் செலவழிக்கிறதாம்—அதாவது நாளொன்றுக்குச் சரியாக ஒரு லட்ச ரூபாய்!

— தகவல்: முபீன்

அப்படி ஓர் ஆசை!

எங்கள் கம்பெனிக்கு ஓர் உதவி மானேஜர் தேவை. வயது இருபத்தைந்திலிருந்து நாற்பதுக்குள் இருக்க வேண்டும். காலை ஒன்பது மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மற்றவர்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்: மாலையில் டென்னிஸ் ஆட வேண்டி யிருக்கும். சம்பளம் ஆரம்பத்தில் ரூபாய் இரண்டாயிரம் கொடுக்கப்படும்.

[பின் குறிப்பு: இந்த மாதிரி வேலை எங்களிடம் காலியில்லை; என்றாலும் எந்த மாதிரி வேலையை எல்லோரும் விரும்புகிறார்கள் என்பதை அச்சில் பார்க்க வேண்டும் என்று எங்களுக்கு ஆசையாக இருந்தது. அதற்குத் தான் இவ்விளம்பரம்!] - தகவல்: அனி

மூலம்: அமெரிக்கன் மாகஸைன்



லக்மே டால்க் மட்டுமே அளிக்கும்

- நினைவில் நிலைக்கும் நாலு இனிய வாசனைகள்
- மிக மென்மையான பவுடர்



புதுமலர்ச்சி நீடிக்க ஒரு புதிய முறை!

தேர்ந்தெடுக்க வகைவகையான வாசனைகள், ஒவ்வொன்றுமே மென்மையான பவுடருடன் இணைந்து குலவும் மேன்மை - இவைதாம் லக்மே டால்க் சிறந்து விளங்குவதன் ரகசியம். அதன் மென்மையும், அதிகம் உறிஞ்சும் சக்தியும் அபாரம்...கடும் உழைப்பினூடே நாள் பூராவும் உங்களைக் குளுமையாகவும், புத்துணர்ச்சியுடனும் இருத்துகிறது!

லக்மே டால்க் – மிக மென்மையான பவுடர்... உங்களுக்கு ஏற்ற ஒரே டால்க்!

லக்மே டால்க்

லேவண்டர்
ஸாண்டல்
நிர்வாண
வெட்டிவர்

Bensons/1-LK 6-TAM




1. கோகலேயின் நூறாவது பிறந்த தினக் கொண்டாட்டம் ராஜாஜி ஹாலில் சென்னை கவர்னர் உஜ்ஜல் சிங் தலைமையில் சிறப்பாக நடந்தது. டாக்டர் சி. பி. நினைவு மலரை வெளியிட்டார்.




2. மயிலை கற்பகாம்பாள் நகரில் கோகலே - சாஸ்திரி பொருளாதார - அரசியல் கழகக் கட்டடத்துக்கான அஸ்திவாரக் கல்லை நாட்டுகிறார் திட்டக் கமிஷன் அங்கத்தினர் திரு பார்வே.

[redacted]



3. செம்பியத்தில் உள்ள டிராக்டர்களும் அவற்றோடு விவசாயக் கருவிகளும் தயாரிக்கும் 'டபே' தொழிற்சாலைக்குச் சென்னை கவர்னர் உஜ்ஜல் சிங் விஜயம் செய்து பார்வையிடுகிறார்.

4. கலைவாணர் திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பத்தாவது நினைவு நாள் மயிலாப்பூர் ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் அறிஞர்கள், கலைஞர்களின் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சி ஆகியவற்றுடன் விமரிசையாக நடந்தது.



காற்றினிலே வரும் கீதம்

ரா. கணபதி

அத்தியாயம் 7

ரத்தன் சிந்திய ரத்தம்

கண்ணனைப் போல மாயாவி யாருண்டு?

மீராவின் விஷயத்தில், ஏழை இழந்த புதையலாக என்றும் அவள் நினைவில் நிற்பதற்காகவே அவளைப் பிரிந்த கண்ணன், மேர்தா விஷயத்தில் அதற்கு முற்றிலும் மாறாக நடந்து கொள்ளத் திருவுளம் கொண்டான் போலும்! மேர்தா மக்களின் நினைவிலிருந்தே தான் நழுவிவிட வேண்டும் என்பதுபோல் அந்த ராஜ்யத்துச் சம்பவங்களை உருவாக்கினான் அவன்! 'பக்தியைக் குறைத்துக்கொண்டு வீரத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்' என்று கூறிய ராவ் தூதாவுக்கே கண்ணனும் உடந்தையாகி விட்டதுபோல் நாட்டு நிகழ்ச்சிகளைச் சமைத்தான்.

முகமதியர்களின் ஆதிக்கம் பரவுவதைத் தடுப்பதற்காகவே ராவ் தூதா, பக்தியைக் குறைத்து வீரத்தைப் பெருக்க வேண்டும் என்றார். ஆனால் மேர்தாவில் பக்தி குறைந்து வீரம் பெருகியதற்குக் காரணம் அந்நிய மதத்தினரின் ஆதிக்கப் பரவல் அல்ல. ராஜபுத்திரர்களிலேயே இரு பிரிவினரான சிசோதியர்களுக்கும் ராட்டோர்களுக்குமிடையே மூண்ட பிளவு காரணமாகவே மேர்தாவில்—ஏன், ராஜஸ்தானம் முழுவதிலுமே—வீரத்துக்கு அதிக அவசியம் உண்டாயிற்று.

இந்தப் பிளவின் மூலத்தை அறிய வேண்டுமாயின் மேர்தாவிலிருந்து மேவாருக்குச் செல்ல வேண்டும். ராஜஸ்தானத்தின் பல சிற்றரசுகளுக்கும் மேற்பட்ட பேரரசாகத் திகழ்ந்த மேவாரின் புகழ் பெற்ற அரசர்களாகிய மகாராணாக்களின் வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

பாரதத்தின் வீர வரலாற்றில் இலகங்களாக ஜொலிக்கும் மேவார் ராணாக்கள் சித்தோரிலிருந்து ஆட்சி புரிந்த சிசோதியப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ராமபிரானின் வழித் தோன்றல்களாகக் கருதப்படுபவர்கள். '**ஹிந்துவா சூரஜ்**'—**ஹிந்து** மதத்தின் சூரியன்—என்ற பட்டம் பெற்றவர்கள். இச் சிசோதிய வம்சம் கண்ட ஒரு சிம்மமாகப் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் மேவாரில் செங்கோலோச்சியும், போர் வாளோச்சியும் பெருமை படைத்தவன் லாகாசிங் என்ற லக்ஷ சிங். லட்சத்தில் ஒருவனாகப் பிறந்ததால் இப்பெயர் பெற்றான் போலும்!

பாரத தருமத்துக்கு அணிவித்த முப்புரிநூல் போன்ற பாவன ஸ்தலங்கள் கயை, பிரயாகை, காசி ஆகியன. இவற்றை 'த்ரிஸ்தலி' என்று சிறப்பித்துச் சொல்வார்கள். லாகா சிங்கின் காலத்தில் இவை முஸல்மான்களின் வசத்தில் இருந்தன. இவற்றை மீட்க வேண்டுமென்பதொன்றே அம்மாவீரனின் மகத்தான



அபிலாஷையாக இருந்தது. தனது முதுமைப் பருவம் வரையில் இம்முயற்சியிலேயே அயராது ஈடுபட்டிருந்தான்.

அப்போதுதான் விதி விளையாடியது. விசுவநாதனுக்கும் வேணிமாதவனுக்

கும் பணி புரிவதிலேயே வாழ்வை அர்ப்பணித்திருந்த கிழ ராணா லாகாசிங்கை அவனது முதுமையில் மணவினையில் ஈடுபடுத்திவிளையாடிற்று விதி. விளையாட்டே வினையான கதை அது.

ராவ் தூதாவின் வம்சமான ராட்டோர் குலத்தைச் சேர்ந்தவனும், அவரைப்போலவே



மண்டோர் எனப்படும் மந்தவாரத்தைச் சேர்ந்தவனுமான ரண்மல் என்ற மகாரதன் தன் அருமைச் சகோதரி ஹம்ஸாபாயை லாகாவின் புத்திரனான சண்டனுக்குத் திருமணம் செய்விக்க விரும்பினான். கலியாணம் பேசுவ

தற்காகச் சித்தோருக்குச் சென்றான். தேங்காய் கொடுத்து விட்டுத்தான் விவாகப் பேச்சுக்களைத் தொடங்குவது ராஜஸ்தானியரின் வழக்கம். அதற்கேற்ப, கிழ ராணா லாகா சிங்கைச் சபா மண்டபத்தில் சந்தித்த ரண்மல் தேங்காயை அவர் கைகளில் கொடுத்து,

''என் சகோதரி ஹம்ஸாபாயை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான்.

லாகா சிங் சிரித்துக் கொண்டே தாடியை உருவியவாறு, ''தேங்காயை என் கையில் கொடுத்தீர்கள். உங்கள் சகோதரியை ஏற்க

வேண்டும் என்று என்னையே கேட்டுக் கொள்கிறீர்கள். கலியாணம் இந்தக் கிழவனுக்கா?'' என்றார்.

ரணமல்லும் அதை வேடிக்கையாகவே எடுத்துக் கொண்டு பட்டத்து இளவரசனான சண்டனைக் குறிப்பாக நோக்கினான். தனஞ்சயனும் சந்திரகுப்தனும் வாழ்ந்த நாடு இது என்பதைத் தனது தேகப் பொலிவாலேயே நினைவூட்டும் சண்டன் தனது ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான். ரணமல்லை நோக்கினான்; தந்தையையும் நோக்கினான். இவர்களுடைய விளையாட்டு அவனுக்கு வினையாகப்பட்டது. 'தந்தையின் எண்ணத்தில் ஏன் திருமணத்தைப் பற்றிய எண்ணம் நிழலாட வேண்டும்?'

''தந்தையே! தங்கள் வாயிலிருந்து வந்த எதுவும் உண்மையாக நடக்குமாறு செய்யத்தான் நான் இருக்கிறேன். தங்கள் எண்ணம் எதையும் நிறைவு செய்யத்தான் நான் இருக்கிறேன். திருமணத்தைப் பற்றிப் பேசி விட்டீர்கள். தங்களுக்கு மண்டோர் இளவரசியைத் திருமணம் நடத்திப் பார்ப்பதுதான் இனி என் விருப்பம். பூஜ்ய ரணமல் இணங்கினால் அப்படியே செய்து விட ஆட்சேபம் ஏதுமில்லை'' என்றான்.

மகாராணாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''சண்டா! எனக்காவது கலியாணமாவது! மரணலட்சுமியைத்தான் நான் மணக்க வேண்டும். அவள் வெகு விரைவிலேயே விவாகம் செய்து கொள்ள வந்துவிடுவாளோ, என்னவோ? அதற்குள் த்ரிஸ்தலியை மீட்க வேண்டும் என்றுதான் துடிக்கிறேன். இந்தத் துடிப்புக்கு நடுவிலே சிறிது சிரித்தேன், ஹாஸ்யம் செய்தேன். அதைப் பெரிதுபடுத்தாதே. உனக்காகத்தான் ரணமல்ஜி வந்திருக்கிறார் கண்ணே!'' என்றார்.

''எனக்கா? அது எப்படி இயலும் தந்தையே? நான் ஹம்ஸாபாயைச் சற்றுமுன் என் தாயாகப் பாவித்து விட்டேனே? அந்தப் புனித உணர்வை எப்படி மாற்றிக் கொள்ள முடியும்? முடிந்தாலும்கூட, ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்?'' என்றான் சண்டன்.

ரணமல் தன் பெயருக்கேற்ப ரணமல்லனாகவே மாறிவிடுவான் போல் முகம் சிவந்தான். அவனது மீசை துடித்தது. உதடுகள் படபடத்தன.

திருமண நிமித்தமாகத் தேங்காய் தந்து அதைத் தந்தையும் மகனும் அவமதிப்பதென்றால், அதைவிட ஒரு ராஜபுத்திரனுக்கு வேறென்ன மானக்கேடு வேண்டும்? தன் தங்கை இப்படியா சீர் கெட்டுப் போய் விட்டாள்?

மகாராணா லாகா தேர்ந்த புத்திமான். ரணமல்லனின் உள்ளக் கொந்தளிப்பைப் புரிந்து கொண்டார். பெருந்தன்மையுடன் அவனை நோக்கி, ''உங்கள் உணர்ச்சியை நான் மதிக்கிறேன். அதே போதில் சண்டனின் உணர்ச்சியையும் மதிக்கிறேன். இவனுடைய தம்பி ராகவதேவன் மட்டும் இன்னும் சிறிது பெரியவனாக இருந்தால் அவனுக்கு உங்கள் சகோதரியைப் பாணிக்கிரகணம் செய்து கொள்வேன். ஆனால் நடக்காத விஷயத்தைப் பேசிப் பயனென்ன? தேங்காயை மறுதலிக்கும் பாபத்துக்கு நான் ஆளாகாதிருக்க வேண்டுமாயின் ஹம்ஸாபாயை நானே மணப்பதன்றி வேறு வழியில்லை....'' என்று கூறி வந்தவர் மனவெழுச்சி அடைந்து ''விசுவநாதா, வேணிமாதவா..... விளையாடுகிறீர்களே!'' என்று அரற்றிக் கொண்டே சிம்மாசனத்தின் சாய்மானத்தில் தலையை உருட்டலானார்.

ரணமல்லுக்குத் தன் சகோதரியிடம் விசேஷமான வாஞ்சை கிடையாது. மேவார் மகாராணாவின் சம்பந்தத்தை அவன் நாடியது, ஹம்ஸாபாயை ராஜஸ்தான சக்கரவர்த்தினியாக்கிப் பார்ப்பதற்காக அல்ல. இந்தத் தொடர்பின் மூலம் தனது செல்வாக்கையும், ராட்டோர்களின் செல்வாக்கையும் உயர்த்த வேண்டும் என்பதே அவனது நோக்கம். சிசோதிய ராணாக்கள்* மத்ய பதம் என்கிற மைய ஸ்தானத்தை அடைந்ததிலிருந்து ராட்டோர்கள் நலிவுற்று விட்டனர். சோகை பிடித்த ராட்டோர் ரத்தத்துக்குப் புத்துணர்ச்சி தந்து சோபை ஊட்ட வேண்டும் என்பதே ரணமல்லின் லட்சியம். தனது சொந்த கௌரவத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஆசையும் அவனுக்கு உண்டு. எனவே, தன் சகோதரிக்கு வரனாக இளைய ராணாவைப் பெறுவதும் கிழ ராணாவைப் பெறுவதும் அவனைப் பொறுத்த மட்டில் ஒன்றாகவேதான் இருந்தது. இதில் அவனுக்கு 'இடறியது' ஒன்றுதான். லாகாசிங் சற்றுமுன் கூறியது போல் மரணலட்சுமி அவரை விரைவிலேயே மணந்து விட்டால், மறுபடியும் ராட்டோர்களின் செல்வாக்குக் குன்றிவிட வேண்டியதுதான். அவ்வாறாகாமல் நிலைப்படுத்திக் கொள்ள ஒரு வழி காண வேண்டும். அதென்ன வழி?


''கார்த்திகேயனைக் கேட்கப் போய்ப் பசுபதியையே பெற்றது போல் இளையராணாவைக் கேட்க வந்த எனக்குத் தங்களையே அளித்துக் கொண்டது என் பாக்கியம். ஆனால்....'' என்று இழுத்தான் ரணமல்.

அவன் மனத்திலிருந்ததைப் புரிந்து கொண்டான் பட்டத்திளவரசன் சண்டன். அந்தக் கணத்தில் அவன் சந்தனு குமாரனை பீஷ்மராகவே மாறினான். ராஜஸ்தானியர் என்றென்றும் பெருமைப்படும்படியாக அருமையாகப் பேசினான்:


''தந்தையே! பூஜ்ய ரணமல் தயங்குவதற்குக் காரணத்தை நான் புரிந்து கொள்கிறேன். இறைவன் அருளால் தங்களுக்கு ஹம்ஸாபாயிடம் புத்திரப்பேறு உண்டானால் அந்தப் பிள்ளைக்கே அடுத்த பட்டம் என்று வாக்குறுதி தாருங்கள். ரணமல் தமது தங்கையை உங்களுக்குத் தருவார். தேங்காயை மறுதலித்த அபக்கியாதி நமக்கு நேராமற் போகும். இதற்கு என்னால் ஒருபோதும் இடையூறு நேராது. ஏனெனில் நான் திருமணம் செய்து கொள்ளாமலே என் காலத்தை முடிப்பேன்'' என்றான்.

வாக்குறுதி கொடுக்கும் நிலையில் லாகாசிங் இல்லை. வாக்கே குழறிப் போகும் உணர்ச்சி பர

* மத்யபதம் என்பதுதான் 'மேட்பட்' என்றும், 'மேபட்' என்றும் 'மேவட்' என்றும் திரிந்து இறுதியில் 'மேவார்' ஆயிற்று என்பார்கள்.



LIFEBUOY
for health
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்
லைப்பாய் ஸ்நானம் - உற்சாகப் பெருக்கு . உல்லாச ஊற்று..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்
ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
லின்டாஸ்-L. 51-140 TM



"நான் கார் டிரைவிங் கற்றுக்கிட்டு வரேன். எப்படிச் சைகை காட்டணும்கிற அபிநயம் மட்டும் சொல்லிக் கொடுங்க போதும்!"

வசத்தில் இருந்தார் அவர். தனக்கு வந்த பெண்ணைத் தந்தைக்கு ஈந்ததோடு, தன் அரசுரிமையையும், இல்லற சுகத்தையும் அலாக்காகத் தியாகம் செய்யும் இந்த சத்புத்திரனைப் பெற என்ன பேறு செய்தோமோ என்று அவரது மனம் விம்மியது.

ரணமல்லைப் பார்த்தான் சண்டன். இடையில் சொருகியிருந்த வாளை உருவி, அதன் முனையால் தன் இதயத்தைத் தொட்டபடியே, "மேவார் ராஜ்யத்தின் அதிபதியான கைலாசபதி ஏகலிங்கரின் மீது ஆணை! நான் விவாகம் செய்து கொள்வதில்லை; மேவார் சிம்மாதனத்தில் ஏறுவதில்லை. மார்வார் இளவரசிக்கும் என் தந்தைக்கும் பிறக்கப் போகும் மகனையே மன்னனாக்கி அவனுக்கு நான் காவல் நிற்கவே இந்த வாள் எனக்குத் துணை புரியுமாக!" என்றான்.

ஏகலிங்கர் ஆலயத்தில் அதே சமயத்தில் ஆலாட்ச மணி ஒலிக்க, தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. திருவனந்தபுரத்தில் பதுமநாபர்போல், மேவாரில் ஏகலிங்கர்தான் மன்னராகக் கருதப்படுபவர். அவரது திவானாகவே ராணா ஆட்சி புரிவதாக ஐதிஹ்யம்.

வளர்த்துவானேன்? ஹம்ஸாபாய் லாகா சிங்கின் மகிஷியானாள்; சித்தோர் மகாராணியானாள். அவளோடு தாம்பத்யம் நடத்துமாறு தந்தையிடம் பிடிவாதம் பிடித்து வென்றான் சண்டன். கிழ ராணாவுக்கும் இளைய ஹம்ஸாவுக்கும் மோகல் என்றொரு பிள்ளை பிறந்த அன்றுதான் சண்டன் மன நிறைவு எய்தினான். சந்ததி வாய்த்தவுடன் தமது கடமை தீர்ந்தது என்று திருப்தியுடன் தீர்த்தலியை மீட்க மீட்டும் கயைக்குப் புறப்பட்டார் லாகா. அப்போது சண்டனே மோகலை அரியாசனத்தில் அமர்த்தி, தான் அவனுக்கு அடங்கிப் பணி புரிவதாக விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டான்.

'கயா' என்றால் 'செல்வது' என்று ஒரு பொருள். கயை சென்ற லாகா சென்றவர் தான். திரும்பவேயில்லை. திரும்பாத உலகுக்குச் செல்லு முன் — போர்க்களத்தில் இன்னுயிரை விடுமுன்—லாகா சிங் தம் வாழ்வின் லட்சியத்தைப் பூர்த்தி செய்து விட்டார்! தீர்த்தலியை முகமதியர்களிடமிருந்து விடுவித்துவிட்டார்!

மோகலின் ஆட்சி தொடங்கியது. அவனுக்குத் துணைநின்ற சண்டனின் மீதும் பாழும் உலகம் பழி சுமத்தியது. அரசு கட்டில் ஏறுமலே, சண்டன் சகல அதிகாரங்களையும் வகித்துத் தன் விருப்பப்படி மோகலை ஆட்டி வைப்பதாக ரணமல்லும் மற்ற ராட்டோர்களும் புரளி செய்யலாயினர்.

மனம் நொந்த சண்டன், தானாகவே நாட்டை விட்டு வெளியேறி, தனது பழங் கால நண்பனான மாளவ சுல்தான் முகமத் கில்ஜியிடம் சென்று விட்டான். செல்லும் போதும் மோகலை நல்ல முறையில் வளர்க்கும் பொறுப்பை மறவாமல், தனது தம்பி ராகவதேவனை அவனுக்கு உறுதுணையாக வைத்து விட்டே வெளியேறினான்.

யமதருமனுக்கு முன் யாருடைய துணையும் பயன்படாதல்லவா? மோகல் பதின் மூன்றே ஆண்டுகள்தான் ஆட்சி புரிந்தான். காலனின் வலை ஒரு கோரக் கொலையாக அவன் மீது வந்து விழுந்து மாண்டான். இதற்கு ஓர் உட்பூசலே காரணமாக அமைந்தது.

மோகலுக்குச் சிற்றப்பன் முறையாக வேண்டிய சாசா, மைரா என்ற இருவரும் படைத் தலைமையில் முக்கியமான அந்தஸ்து பெற்றிருந்தனர். இவர்களின் அந்தஸ்தைக் கண்டு சிலருக்குப் பொறாமை உண்டாயிற்று. சாசா, மைரா ஆகியவர்களின் தாய் க்ஷத்திரிய ஸ்திரீ அல்ல, அவள் ஒரு மரத் தச்சனின் மகள் என்பதை அறிந்திருந்த இவர்கள் ஒரு நீசத்தனமான சதிச் செயலைப் புரிந்தார்கள்.

குஜராத் சுல்தானுடன் போரிடுவதற்காக மோகல் சிங் படையெடுத்துச் சென்றிருந்த போது அவனுடன் இந்தச் சதிகாரர்களும் சென்றிருந்தனர். வழியில் கண்ட ஏதோ ஒரு விருட்சத்தைப் பற்றி வேண்டுமென்றே பேச்சை எழுப்பினர். "இந்த விருட்சத்தின் பெயர் தெரியுமா?" என்று கேட்டான் ராணா மோகல். உடனே சதிகாரர்கள், "இதெல்லாம் சாசா சாகேபுக்கும், மைரா சாகேபுக்கும்தான் நன்றாகத் தெரியும். அவர்களைக் கேட்டுப் பாருங்கள். ஆனால் அவர்களுக்கு இவ்விஷயம் தெரியும் என்று நாங்கள் சொன்னதாக வெளிப்படுத்தி விடக் கூடாது" என்றனர். சூது வாது தெரியாத மோகல் படைத் தலைமை வகித்த இருவரையும் அழைத்தான். "இந்த மரத்தின் பெயரென்ன?" என்று கேட்டான். அவர்களுக்கு அது மானபங்கமாகத் தோன்றியது. தாங்கள் தச்சர் குடி வழிவந்தவர்கள் என்பதால்தான் ராணா தங்களை அவமானப்படுத்த வேண்டு


மென்றே படை முகப்பிலிருந்து இந்த அற்ப காரியத்துக்காகக் கூப்பிட்டிருக்கிறான் என்று நினைத்தனர். சினத்தை அடக்கிக் கொண்டு, ''எங்களுக்குப் போர் முறைதான் தெரியும்; மரத்தைப் பற்றிய விஷயம் தெரியாது'' என்றனர். விவரமறியாத மோகல் அப்படியும் விடாமல், ''காகாஜி (சிற்றப்பா அவர்களே!) நீங்கள் அப்படிச் சொல்லிவிட்டால் நான் நம்பி விடுவேனா? போர் முறைகளைவிட மரத்தைப் பற்றிய மகாபாரதங்கள்தான் உங்களுக்கு அதிகம் தெரியும் என்று நான் அறிவேனே!'' என்றான்.

சாசாவுக்கும், மைராவுக்கும் வெஞ்சினம் மூண்டது. விளைவு? குஜராத் படையெடுப்பை நடத்த வேண்டிய அவ்விரு சேனாதிபதிகளும் தங்கள் மன்னர் மீதே படையெடுத்தனர். அன்றிரவு மோகல் தன் முகாமில் உறங்கிக் கொண்டிருக்கும்போது, மஹிபா என்ற சிற்றரசனின் துணையுடன் சாசாவும் மைராவும் கூடாரத்தைச் சூழ்ந்து கொண்டனர். மோகலும், அவனது ராணிகளில் ஒருத்தியும், விசுவாசம் மிகுந்த தோதியாவும் (காவலாள்) கொல்லப்பட்டனர். இளவரசன் கும்பா மட்டும் தப்பி ஓடிவிட்டான். அவனால் நடக்கவேண்டிய காரியங்கள் பலப்பல இருந்தனவே!

சாசாவையும், மைராவையும் கேள்வி கேட்குமாறு மோகலைத் தூண்டிய சதிகாரர்கள் இப்போது ரண்மல்லிடம் சென்றனர். ''தங்கள் அருமைச் சகோதரி ஹம்லா பாயின் மருமகன் மோகல்சிங் மகாராணாவை சாசாவும் மைராவும் கொலை செய்து விட்-

பாப்பா மலர்

தாத்தா!





வீட்டு வாசல் திண்ணையில்
வீற்றி ருக்கும் தாத்தாவைப்
பாட்டுப் பாடி வணங்கவே
பாப்பாக் களே வாருங்கள்

வாழ்ந்து வாழ்ந்து அனுபவ
வைரம் பாய்ந்த பெரியவர்
வாழும் வழி நமக்கெலாம்
வகுத்துக் காட்ட உரியவர்

குழந்தை போலக் குணத்தையும்
குறைவில் லாத திறத்தையும்
பழத்தைப் போலக் கனிவையும்
பக்கு வமாய்ப் பெற்றவர்

கடவுள் மீது பக்தியும்
கதைகள் சொல்லும் உத்தியும்
குடும்பம் காக்கும் சக்தியும்
குறைவில் லாமல் கொண்டவர்

மொத்த மாகக் கூறினால்
முதிர்ந்த தாத்தா இனத்தினர்
நித்த நித்தம் நாமெல்லாம்
நினைந்து பணியத் தகுந்தவர்.

- ரா. பொன்ராசன்

டார்கள். மஹிபா அவர்களுக்குத் துணை புரிந்திருக்கிறான். இந்த அக்கிரமத்துக்குப் பழி தீர்த்துக்கொள்வது தங்கள் கடமை'' என்று தூபம் போட்டனர்.

ரண்மல்லின் நெஞ்சு கொதித்தது. சாசா, மைரா, மஹிபா ஆகியோரை அழிப்பதைத் தன் ஜன்மப் பிரதிக்ஞையாகச் செய்து கொண்டான். மோகலின் மைந்தன் கும்பாஜியின் பட்டாபிஷேகத்துக்கும்கூட ஃபெண்டா எனப்படும் துக்கம் காக்கிற ஆடையுடன்தான் வந்தான் ரண்மல். ''மோகலைக் கொன்றவர்களைப் பழிதீர்க்கும்வரை எனக்குத் துக்க நாள் நீங்காது'' என்று காரணம் கூறினான்.

கும்பாஜியும் தன் தந்தையைக் கொன்ற காதகர்களைப் பழி தீர்ப்பதில் உக்கிரமாக இருந்தான். சிசோதியர், ராட்டோர் என்ற வித்தியாசமின்றி வீரர் அனைவருமே தங்களது பழைய ராணாவின் மரணத்துக்குக் காரணமானவர்களை அழிப்பதற்குத் துடித்தனர். இச்சமயத்தில் தனது சிசோதியத் துவேஷத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெகு சாமர்த்தியமாக இருவருக்கும் தலைமை தாங்கிச் சாசாவையும், மைராவையும் கொன்றான் ரண்மல். அன்றே தன் துக்க வஸ்திரத்தைக் களைந்து கலியாணக் கோலம் பூண்டான். சாசாவின் சவத்தைத் திருமணப் பலகையாக்கி அதன் மீது அமர்ந்து கொண்டே சாசாவின் மகளை மணந்து கொண்டான் அந்தக் கிழ வீரன்! மஹிபா மட்டும் தப்பித்துக் கொண்டான். அவன் மாளவ சுல்தானைத் தஞ்சமடைந்தான்.

சிசோதியரிடம் ரண்மல் கொண்டிருந்த வெறுப்புத் தீக்குப் பூர்ணாஹுதி செய்வது போல் ஒரு காரியம் நடந்தது. சாசா சிறைப் பிடித்து வைத்திருந்த ஐந்நூறு பெண்களை ராட்டோர்களுக்குப் பரிசாகத் தர உத்தேசித்திருந்தான் ரண்மல். சண்டனின் தம்பியான ராகவதேவனால் இதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அப்பெண்களை அவன் விடுவித்துவிட்டான். 'அரசுரிமையை இழந்த ராகவதேவன் சிசோதியனாக இருக்கும் ஒரே காரணத்தால் தனக்கு மாறாக நடக்க முடிகிறதே' என்று ஆத்திரமடைந்தான் ரண்மல்.

ஆத்திரத்தை வெளிக்காட்டிக் கொள்வதனால் பயன் இராது என்று அவன் அறிந்திருந்தான். ஏனெனில் சித்தோர் முழுதுமே சிசோதியரின் கோட்டைதான். அதிலும், தனக்கு அரசுரிமை இல்லாதபோதும் தன் ஒன்றுவிட்ட தம்பி மோகலின் மகன் கும்பாஜிக்கு உதவி புரியும் உத்தமன் ராகவதேவனிடம் சிசோதியர்களெல்லாம் தேவதா விசுவாசம். எனவே, ராகவதேவனை எதிர்த்துப் படையெடுப்பது இயலாத காரியம் என்று ரண்மல் அறிந்திருந்தான். தனியாக அவனுடன் துவந்த யுத்தம் செய்யும் யாராலும் வெல்ல முடியாது; அவனது கைகளைக் கட்டிப் போட்டாலொழிய அவனோடு போர் புரிய முடியாது என்பதையும் அறிந்திருந்தான். தந்திரத்தின் மூலம்தான் ராகவதேவனை அழிக்க முடியும் என்று கண்டான். அவனை விருந்துக்கு அழைத்தான்.

விருந்துக்கு உட்காரு முன், ''என் அன்பளிப்பாக இந்தப் புத்தாடையை அணிந்து கொண்டு உண்ண வரவேணும்'' என்று கூறி ராகவ தேவனிடம் ஒரு மேலங்கியை நீட்டினான் ரண்மல்.

ராகவதேவன் அதை எடுத்து அணிந்து கொண்டான். கழுத்தை அதற்குரிய துவாரத்தில் விட்டுக் கொண்டாயிற்று. கைகளையும் அவற்றுக்குரிய இரு குழாய்களில் விட்டுக் கொண்டான். 'ஆகா, இதென்ன, விரல்கள் வெளிவரக் காணுமே!'

எப்படி வெளிவரும்? அந்த ஜிப்பாவின் கைகள் முனையில் தைக்கப்பட்டிருந்தன. இதைப் புரிந்து கொண்டு ராகவ தேவன் தன் கைகளைப் பின்னே எடுத்துக்கொள்ள முயலுவதற்குள் ரண்மல் அவசரம் அவசரமாக ''சிசோதிய சிகாமணிக்குக் குளிர் உதவாது; கழுத்தை நானே மூடுகிறேன்'' என்று கூறிக் கொண்டு கழுத்துப் பட்டையிலிருந்த சுருக்கை முடிந்து விட்டான்.

ராகவன் எப்படி அங்கியைக் கழற்ற முடியும்? அவன் கையைச் செயலற்றதாக்கினால் தான் அவனைக் கொல்ல முடியும் என்று கருதித் தந்திரம் செய்த ரண்மல் வென்றான். ராஜபுத்திர ரத்தினமான ராகவனின் ரத்தத்தைப் பீறியடித்தது ரண்மல்லுடைய அடியாளின் அருவாள்.

இந்தக் கொலை விவரம் எப்படியோ வெளியாகி விட்டது.

இதன் பின் ராட்டோர் — சிசோதியத் துவேஷம் மறைந்து நிற்க முடியவில்லை. அருமைச் சோதரன் ராகவதேவனின் மரணத்தால் மனம் குமுறிய சண்டனும் சிசோதியர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களின் தலைவராக மாளவத்திலிருந்து சித்தோருக்கு வந்து சேர்ந்தார். அந்த வீரத் தியாகியை மகாராணா கும்பா அன்போடு வரவேற்று ஆதரித்தார். ரண்மல்லின் ஆத்திரம் மிகுந்தது. இரு குலங்களிடையே பகை ஓங்கியது.

மண்டோர் அரசுடன் நெருங்கிய தொடர்புள்ளதும், ராட்டோர் குலத்தைச் சேர்ந்ததுமான மேர்தாவும் இந்தப் பகைப் பூசலில் தலை கொடுக்க நேர்ந்தது.

போர் முழக்கமும், யுத்த ஆயத்தங்களும் மிகுந்தாலேனும் அதிலோர் அழகுண்டு. ஆனால் இந்தப் பூசலோ ரகசியமான முறையில் சதிபோலவே வளர்க்கப்பட்டது. மேர்தா வீரர்கள் 'கசமுச'வென்று பேசிக்கொண்டதிலிருந்து ஏதேதோ ஊகித்தனர் ராஜகுலப் பெண்டிர். டாகுர் துவாரத்தை விடுத்து, போர்க் கடவுளாகிய துர்க்கா தேவியைச் சரணடைந்து கணவர்களுக்காகப் பிரார்த்தித்தனர்.

அப்படிப் பிரார்த்திக்காத ஒரே ஒரு ஸ்திரீ சந்திரமுகிதான். ஏனெனில் அவளுடைய கணவன் மட்டும் இந்தக் கசமுசப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவில்லை. வாட்டி எடுக்கும் வருத்தத்தில் வதைப் பட்டுக்கொண்டு அரண்மனையிலேயே அடைந்து கிடந்தான் ரத்தன் சிங். அவன் உள்ளம் மகள் மீராவைப் பார்த்துக் குமுறிக் குமுறி ரத்தம் கக்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



சிறு சேமிப்பில் முதலீடு செய்யுங்கள்

"வீரமணி! உன் மனம் எனக்குப் புரிகிறது. எல்லா விஷயத்திலும் உன் விருப்பத்தை மதித்து நடக்கக் கடமைப்பட்டவன்தான் நான். இருந்தாலும்........."

குமரனை மேலே பேச விடாமல் இடைமறித்தான் வீரமணி.

"குமரன், என்னிடம் நீ அப்படியெல்லாம் பேசலாமா? நீயாவது எனக்குக் கடமைப் படுவதாவது!" என்றான்.



முதல் பரிசு நாவல்

"ஏன் உன்னைப் போன்ற ஒரு நண்பன் எல்லோருக்கும் கிடைத்து விட முடியுமா?"

"அப்படியே வைத்துக் கொள்வோம். அதற்காக நீ எனக்குக் கடமைப்பட்டிருக்க வேண்டுமென்று அர்த்தமா?" என்று சிரித்தான் வீரமணி.

"உனக்கு இல்லாவிட்டாலும் உன் தகப்பனாருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்க வேண்டியவன் தானே நான்! அவருடைய ஆதரவு இல்லையென்றால் நான் இப்படி ஓர் ஆளாகத் தலையெடுத்திருக்க முடியுமா? அவருடைய நினைவுக்காகவாவது அவருடைய பிரதிநிதியான உன் வார்த்தைக்கு நான் மதிப்புக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்?" என்றான் குமரன்.

"இந்த வாதத்தையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது, குமரன். என் தகப்பனார் உன்னை வளர்த்து ஆளாக்கினார் என்றால் எதற்காக? உன் தகப்பனாருடைய வக்கீல் என்ற முறையில் அவர் ஒப்புவித்துப் போன பொறுப்பைப் பழுதில்லாமல் நிறைவேற்றினார். அவ்வளவுதானே? உன் தகப்பனார் வைத்து விட்டுப்போன தொகையில் அவரது உயிலில் கண்ட நிபந்தனைப்படி தனக்குச் சேர வேண்டிய ஊதியத்தை அவ்வப்போது கழித்துக்கொள்ளவும் என் தந்தை தவறவில்லையே?"

"தமது தொழிலில் அவர் அவ்வளவு கண்டிப்பும் நேர்மையும் உள்ளவராயிருந்ததால்தான் நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வர முடிந்தது. அவருடைய நேர்மைக்கும் அன்புக்கும் மட்டுமல்ல, அவருடைய கண்டிப்புக்கும் நான் தலை வணங்குகிறேன்" என்று குமரன் உண்மையான உணர்ச்சியுடன் நெஞ்சு தழுதழுக்கக் கூறினான்.

இருவரும் சம்பா நீர்த் தேக்கத்துக்குச் செல்லும் இருளடர்ந்த மோட்டார்ப் பாதையில் கொஞ்ச தூரம் நடந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். கனகா தலைவலி என்று சொல்லிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் வீட்டிலேயே தங்கி விட்டாள். இருவரும் தனியாகச் செல்லும் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாதென்றுதான் வீரமணி குமரனிடம் கனகாவின் திருமண விஷயமாகப் பிரஸ்தாபித்தான்.



''கனகாவுக்குத் தகுந்த இடத்தில் கணவனைத் தேடி மணம் முடித்து வைப்பதைத் தவிர வேறெந்தப் பொறுப்பையும் அப்பா எனக்கு வைத்துவிட்டுப் போகவில்லை. அவள் விஷயமாக நீண்ட நாட்களாக என் மனத்தில் குடிகொண்டிருந்த விருப்பத்தைத்தான் இன்று உன்னிடம் வெளியிட்டேன்.''

''ஆனாலும் ஒரு விஷயத்தை நீ மறந்து விட்டாயே, வீரமணி. கனகாவும் நானும் இது வரை எப்படிப் பழகி வந்திருக்கிறோம் என்று உனக்கே தெரியும். அவளை என் தங்கையாகவே இத்தனை வருஷங்களும் கருதி வந்திருக்கிறேன். வேறு விதமாக அவளைக் கற்பனை செய்து பார்ப்பதற்கே என் மனம் கூசுகிறது'' என்றான் குமரன்.

வீரமணி ஒன்றும் பேசாமல் சற்று நேரம் தலையைக் குனிந்தபடியே நடந்து கொண்டிருந்தான். பின்பு கூறினான்: ''உண்மைதான், குமரன். அதைப் பற்றி நான் சிந்தித்துப் பார்க்கவே இல்லை.''

''கனகாவும் என்னை 'அண்ணா, அண்ணா' என்று அழைத்து அவ்விதமே என்னிடம் பழகியும் வந்திருக்கிறாள். உன் மனத்தில் நீ கட்டிக் கொண்டிருந்த கோட்டையைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்றான் குமரன்.

''நீ நினைப்பது சரிதான். நான் கனகாவிடம் இதைப் பற்றி ஒன்றுமே கூறியதில்லை. முதலில் உன் அபிப்பிராயத்தை அறிய நினைத்தேன். உன் அபிப்பிராயம் இப்படி இருக்கிறது.''

''இதோடு இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் நல்லது. கனகாவிடம் ஒன்றுமே சொல்ல வேண்டாம். எப்போதும் போல் அவள் தன்னை என் தங்கையாகவே பாவித்துக் கொண்டிருப்பதுதான் பொருத்தமானது'' என்றான் குமரன்.

வீரமணி பெருமூச்செறிந்தான்.

''சரி, கனகாவின் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதோ, பார்க்கலாம்'' என்றான்.

''உன்னைப் போன்ற அண்ணன் இருக்கும் போது அவள் அதிர்ஷ்டத்துக்கு என்ன குறைச்சல் இருக்க முடியும்?'' என்று சிரித்தான் குமரன்.

''சற்று முன் கூறியதை மறந்து பேசுகிறாயே. நம்மைப் போன்ற அண்ணன்மார் என்று உன்னையும் சேர்த்துக் கொண்டல்லவா சொல்ல வேண்டும்?'' என்று அவனை மடக்கிய உற்சாகத்தில் வீரமணியும் சிரித்தான்.

இருவரும் வீட்டை நெருங்கிய போது போலாநாத் தனது கூனல் முதுகைக் குலுக்கியவாறு அவர்களை நோக்கி ஓடிவந்தான்.

''என்ன போலா?''

''அந்தப் பொண்ணு வள்ளி வந்திருக்கு. அவள் அண்ணனைப் புலி அடிச்சிடுச்சாம்'' என்று போலாநாத் கூறியதும் குமரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.



''என்ன.... புலி எப்படி அடித்தது? இந்த உச்சிக்கடவுப் பகுதியிலே புலி வருவதே இல்லே என்று கேள்விப்பட்டிருந்தேனே!''

''இவன் கூத்துப் பார்க்க முள்ளி மலேக் காத்தான் கடவுக்குப் போயிருக்கு. அங்கேதான் இது நடந்திச்சாம். நம்ம வஸ்தாத் ஒண்டி ஆளா நின்னு புலியைக் கோடாலியாலே மார் டாலா!''

''அடப் பாவி !''

''நம்ம ஆளுக்கு அப்படி ஒண்ணும் பலமான காயம் இல்லே. இடது தோள் பட்டையிலேதான் அடியாம். நாலு நகம் நல்லா பதிஞ்சு கிழிச்சிருக்காம். எலும்பும் அந்த எடத்திலே கொஞ்சம் புரண்டு போயிருக்குன்னு அந்த வள்ளிப் பொண்ணு சொல்லிச்சு'' என்று விவரித்தான் போலா.

வீட்டு வாசலில் வள்ளி கவலே தோய்ந்த முகத்துடன் நின்றிருந்தாள்.

''அண்ணனுக்கு இப்போ எப்படி இருக்கு வள்ளி?'' என்று பரபரப்புடன் கேட்டான் குமரன்.

''கவலேப்படும்படி ஒண்ணும் இல்லே, ஆனல் காத்தான் கடவு ஆளுங்க காலேயிலே அண்ணனேத் தூக்கிக்கிட்டு வீட்டு வாசல்லே வந்து நின்னபோது நான் பயந்தே போயிட்டேன். அண்ணனுக்கு அப்போ சுயநினேவுகூட இல்லே. காயத்திலேயிருந்து ரத்தம் பெருகாமல் தடுக்கறதுக்கு ஏதேதோ பச்சிலேயெல்லாம் வைச்சுக் கட்டியிருந்தாங்க. அதுக்கு நல்ல பலன் இருந்திச்சு. வீட்டுக்கு வந்து சேந்த கொஞ்ச நேரத்துக்குள்ளேயே அண்ணன் கண்ணே முழிச்சுப் பேச ஆரம்பிச்சிருச்சு.''

''இருந்தாலும் எழுந்து நடமாட இன்னும் கொஞ்ச நாட்கள் ஆகுமில்லேயா ?'' என்று கேட்டான் குமரன்.

''அப்படித்தான் தோணுது. அண்ணனுக்கு டேட்டியைப் பத்தித்தான் கவலேயெல்லாம். கண்ணே முழிச்சதுமே, 'டேட்டிக்கு நேரமாயிடுச்சே, நான் எழுந்திருந்து போகணுமே'ன்னு தவிக்க ஆரம்பிச்சுடுச்சு.''

''அதுக்கு நான் வேறே ஏற்பாடு செய்து கொள்கிறேன். முதலிலே காளி, உடம்பு சரியாகி எழுந்திருக்கட்டும். அது வரைக்கும் மொத்த டேட்டியையும் சேர்த்து மாயாண்டியையே கவனித்துக் கொள்ளச் சொல்கிறேன்.''

''மாயாண்டி அண்ணனுக்குச் சேதி தெரிஞ்சதுமே வந்து பாத்திச்சு. டேட்டியைப் பத்திக் கவலேப்படாதே, நான் போய்க் கவனிச்சுக்கிடறேன்னு சொல்லிட்டு அங்கேதான் போயிருக்கு. அந்தத் தகவலே ஐயாவுக்குச் சொல்லணும்னுதான் நான் வந்தேன்.''

இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டு கனகா அங்கே வந்தாள். ''ஓ, இந்தப் பொண்ணு? இவளுக்கு இங்கே என்ன வேலே?'' என்று கேட்டாள் குமரனேப் பார்த்து.

''இவளுடைய அண்ணனேப் புலி அடித்து விட்டதாம். எனக்குத் தகவல் கொடுப்பதற்காக வந்திருக்கிருள்.''

''அதற்கு இவள்தான் வரவேண்டுமா?''

''அண்ணனேப் பற்றிய விஷயத்தை வேறு யாரிடமும் சொல்லியனுப்புவது மரியாதையாயிருக்காதே! அதனலே தான் நானே நேரிலே வந்தேன்'' என்ருள் வள்ளி, அந்தக் கேள்வியிலிருந்த குத்தலேக் கவனிக்காமல்.

''போலா! இந்த வழியே உச்சிக்கடவுக்கு ஜீப் ஏதாவது போகிறதா பாரேன். வள்ளியை ஜீப்பிலே அனுப்பி வைக்கலாம்'' என்ருன் குமரன்.

''பரவாயில்லே சார். நான் நடந்தே போய்க்கிடறேன்'' என்று சங்கோசத்துடன் கூறிஞள் வள்ளி.

''வள்ளி! இதிலே என்ன சங்கோசம்? தாத்தா இருக்கும் போதா உன்னே நடக்க விட்டு விடுவார்னு நினேச்சே ?'' என்ருன் போலா.

ஆனல் கடைசியில் வள்ளி நடந்து தான் போக வேண்டியதாயிற்று. அவளும் போலாவுமாக அரை மணி நேரம் சாலேயில் நின்று பார்த்தும் சம்பா நீர்த் தேக்கப் பகுதியிலிருந்து ஜீப் எதுவும் உச்சிக்கடவுக்குச் செல்லும் வழியாயில்லே.

''தாத்தா! இனிமேல் நின்னு பிரயோசனமில்லே. வெய்யில் ஏறிக்கிட்டிருக்கு'' என்ருள் வள்ளி.

''சரி வள்ளி, அண்ணனே நல்லாக் கவனிச்சுக்க. சுத்த முரடு... சுத்த முரடு... டேட்டி முடிஞ்சதும் நேரே வீட்டுக்கு வரக்கூடாது! முள்ளிமலேக் கூத்து இவன் போகாட்டி நடக்காது!'' என்று போலா உணர்ச்சி வேகத்தில் குற்றியல் உகரத்தை அளவுக்கு மிஞ்சியே நீட்டிக் கூறிஞன்.


வள்ளி வீட்டுக்குத் திரும்பியபோது வீட்டு வாசலில் மங்கா உட்கார்ந்திருந்தாள்.

''அண்ணன் எப்படி இருக்கு மங்கா?''

''கொறட்டை விட்டுத் தூங்கிக்கிட்டிருக்கு. புலி அடிச்ச சொரணே கொஞ்சமாவது இருந்தாத்தானே ? பூனே பிராண்டிஞக்கூட நம்மாலே தாங்க முடியாது. உங்கண்ணன்



Graphic Col



Nital

MEDICATED PIMPLE CREAM

(நிடால் முகப்பரு க்ரீம்)

விலை ரூ. 1/90

7 நாட்களில்

கிருமிநாசினி கலந்த நிடால் உங்களுடைய சருமத்தை சிரமமின்றி சுத்தப்படுத்துகிறது. டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது. இனிமையான மணம் நிறைந்தது.

மருந்து கலந்த நிடால் முகபபரு க்ரீம் உங்கள் சருமததில் தோன றும் பருக்களை ஒருவித அபாயமுமில்லாமல அகற்றி விடுகிறது சருமத்துக்கும் பாதுகாபபளிக்கிறது சருமததின அடித்தளமவரை யில் இறங்கி கிருமிகளை நாசம் செய்து விடுகிறது. பருககள உலர்ந்து உதிர்ந்து விடுகின்றன. சொட்டையோ தடமோ பினபு எதுவும் இருககாது.

யௌவனத்தின் பொலிவை மிகைப் படுத்துவதாலும், சருமத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்து பிரகாசப் படுத்துவதாலும் நிடால் முகப்பரு க்ரீம் ஆணகளோ, பெணகளோ, யாவருக்கும் மிகவும் ஏற்றது.

இலவசம்

தயாரிப்பாளருக்கு எழுதி விவரங்களடங்கிய சிறிய புத்தகமொன்றை இலவசமாக பெறுங்கள்.

தயாரிப்போர்:

கொச்சின் பாம் பிரைவேட லிட
நவரத்ன ஹவுஸ், மந்த்ரா ரோடு
கொச்சி. 2

சென்னை, மைசூர் மற்றும் ஆந்திர பிரதேசத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

M/s. கணபதி & கோ., 103-104, லிங்கி செட்டித் தெரு, த.பெ.நெ. 1986, சென்னை-1

என்னடான்னு புலி அடிச்சாத்தான் என்ன, சிங்கம் அடிச்சாத்தான் என்ன? ஏதாவது உடம்பிலே உறைச்சாத் தானே? ஹூம்! கட்டை, வைரம் பாஞ்ச கட்டை....''

மங்கா இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போது உள்ளிருந்து காளியண்ணன் வலி தாங்காமல் புலி கத்துவதைப் போலவே வாய் விட்டுக் கத்துவது கேட்டது.

''என்ன அண்ணே!'' என்று பரபரப்புடன் வள்ளி உள்ளே ஓடினாள். காளியண்ணன் வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தான்.

''தூக்கத்திலே காயத்தைப் பத்தின கவனமில்லாமல் புரண்டு படுக்கப் போயிட்டேன். அப்பப்பா....என்னவலி... கையே கழண்டு விடும் போல இருக்கு.''


''அண்ணே.... கீழூர் ஆசுபத்திரி டாக்டருக்குச் சொல்லியனுப்பட்டுமா? இந்தப் பச்சிலை வைத்தியம் எவ்வளவு தூரம் பலிக்கும்னு தெரியலியே.''

''உனக்கென்ன தெரியும்? பச்சிலை வைத்தியம்னு எளப்பம்னு நினைச்சயா? இருளருங்க இதிலே கைதேர்ந்தவங்களாச்சே. எந்த ஆசுபத்திரி டாக்டரும் இதுங்கிட்டே ஒண்ணும் பேசிக்க முடியாது..... ஆமாம் — ஆ!'' என்று மீண்டும் வலி தாங்காமல் கத்தினான் காளியண்ணன்.

அவன் துன்பப்படுவதைப் பார்த்து வள்ளியின் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது.

''எதுக்காக அண்ணே, இந்தத் துன்பத்தை இழுத்து விட்டுக்கிட்டே? முள்ளிமலைக்குப் போகாட்டி என்ன? நேத்து டூட்டி முடிஞ்சதும் நேரே வீட்டுக்கு வந்திருந்தா ஒரு துன்பமுமில்லையே!'' என்றாள் விம்மலுடன். காளியண்ணன் சிரித்தான்.

''ஏ, வள்ளிக்குட்டி, அப்படியா நெனைச்சுக்கிட்டிருக்கே? நேத்து நான் வீட்டுக்கு வந்திருந்தால் இங்கே என்ன நடந்திருக்கும் தெரியுமில்லே. பெரிய ரகளையே நடந்திருக்கும். முள்ளிமலையிலே சிறுத்தைப்புலி என்கோடாலிக்குப் பலியாச்சு. ஆனா இங்கே நானே கோவம்ங்கிற புலிக்குப் பலியாயிருப்பேன். இந்த நோவு தழும்பா மாறிடும். ஆனா அந்த நோவு ஆறாத புண்ணா, என் மனசைப் போட்டு அரிச்சுக்கிட்டே இருக்கும்'' என்றான்.



அவனுடைய வெள்ளை மனத்திலிருந்து வந்த வெளிப்படையான பேச்சைக் கேட்டு வள்ளியின் மனம் பூரித்தது. அவளுடைய முகத்தில் அவளது இயல்பான இள நகை அரும்பியது.

''அப்படிச் சொல்லாதே, அண்ணே! உன் கோவம் எப்படிப்பட்டதுன்னு எனக்குத் தெரியாதா? இடி இடிக்கிற வேகம்தான் மழையும் பெய்யும். இடியைக் கண்டு எல்லாரும் பயப்படறாங்களேன்னு மேகம் தலைகாட்டாமலே இருந்தால் எப்படி ?'' என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டு அஞ்சலையத்தை அங்கே வந்தாள்.

''நம்ம வள்ளிக்குட்டி போற பேச்சைக் கேட்டயா அத்தே? எட்டாவது வகுப்போட படிப்பை நிறுத்தினது எவ்வளவு தப்புன்னு இப்ப தெரியுது. மேலே படிச்சிருந்தா கலெக்டர்கூட இதுக்கு எதிரே நின்னு பேச முடியாது. ஆமாம்'' என்றான் காளி பெருமையுடன்.

''உன் தங்கையைப் பத்தி நீ பெருமைப்படாமல் வேறு யாரு பெருமைப்படுவாங்க?'' என்று கூறிச் சிரித்தவாறே கையிலிருந்த கஷாயத்தை அவனிடம் நீட்டினாள் அஞ்சலை.

''ஐயையோ.... கஷாயமா?'' என்றான் காளியண்ணன் மூக்கைமூடியவாறு.

''திப்பிலி, சித்தரத்தை, நறுக்குமூலம் எல்லாம் போட்டுக் காய்ச்சியிருக்கேன். உடம்பு வலிக்கு ஔஷதமாயிருக்கும்'' என்றாள் அத்தை.

கண்ணை மூடிக் கொண்டு கஷாயத்தைக் குடித்துத் தீர்த்தான் காளியண்ணன்.

''சேச் சேச் சே....இந்தக் கஷாயத்தைக் குடிக்கணும்னு தெரிஞ்சிருந்தா புலியோடே சண்டை போட்டே இருக்க மாட்டேன்'' என்றான் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

''அது சரி அண்ணே, கூத்து நடக்கிற எடத்துலே புலி எப்படி வந்திச்சு?'' என்று கேட்டாள் வள்ளி.

''எல்லாம் அந்த மங்கா செய்து வச்ச கூத்துத்தான்.... வேறென்ன?''

''மங்காவா?....முள்ளிமலைக்கு அதுவுமா வந்திருந்திச்சு?''

''அது வராத எடம்தான் எது? அடக்கி வைக்க ஆள் இருந்தாத் தானே?'' என்றான் காளியண்ணன்.

மறைவில் நிலைப்படியருகே உட்கார்ந்திருந்த மங்காவின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்ததும் அவள் சீறியெழுந்தாள்.

''யோவ்.... யாரை யாரைய்யா அடக்கி வெக்கறது? என் இஷ்டம், எங்கே வேணும்னாலும் போவேன், எப்படி வேணுமானாலும் கத்துவேன். யாரு கேக்க முடியும்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டே அவன் எதிரில் வந்தாள்.

அஞ்சலையத்தை இடைமறித்தாள். ''ஏன் மங்கா, நானே கேக்கறேன். பாதி ராத்திரி நேரத்திலே அந்த முள்ளிமலைக் காட்டு வழியா காத்தான் கடவுக்குப் போயிருக்கயே, என்ன துணிச்சல் உனக்கு?''

''துணிச்சல் இருந்ததினாலேதான் போனேன். எனக்கென்ன பயம்? காட்டு வழியென்ன என்னைக் கடிச்சு முழுங்கிடுமா?''

''ஆமாம்.... வீராப்பிலே கொறைச்சல் இல்லே. 'புலி! புலி! காப்பாத்துங்க, காப்பாத்துங்க!' அப்படின்னு கதறிக்கிட்டு வந்து விழுந்தியே, அப்ப இந்த வீராப்பெல்லாம் எங்கே போயிருந்திச்சு?'' என்றான் காளி.

''ஏய்யா, அப்படி நான் வந்திருக்கலேன்னு புலியைக் கொன்ன சூரப்புலின்னு உனக்குப் பட்டம் வந்திருக்குமாய்யா?'' என்று மங்கா பளிச்சென்று கேட்டதும் வள்ளி 'களுக்'கென்று சிரித்து விட்டாள். காளியண்ணனாலும் சிரிப்பை அடக்கி வைக்க முடியவில்லை.


மங்கா கூறினாள். ''இதைக் கேளு, வள்ளியக்கா, காத்தான் கடவுலே கூத்து நடக்குதுன்னு கேள்விப்பட்டதிலேயிருந்து எனக்கு வீட்டிலே இருப்புக் கொள்ளலே. ஆத்தா அசந்து தூங்கற வரைக்கும் காத்திருந்தேன். கொறட்டைச் சத்தம் கேட்டுதோ இல்லையோ பிச்சுக்கிட்டேன். ஆனா இருட்டுநேரம். வானத்திலே நிலாக்கூட இல்லே. முள்ளிமலைக் காட்டிலே வழி தப்பிருச்சு. ஆனா நான் பயந்துக்கிடலே. நேத்திக் கூத்திலே உங்கண்ணன் வள்ளியோட அண்ணனும். அது பாடின பாட்டு இருக்கே..... பாட்டா அது? இடி இடிக்கிற மாதிரி குரல்லே ஒரே கத்தல். அந்தக் கத்தல் வர திசையிலே தான் காத்தான் — கடவு இருக்குதுன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. அதையே குறி வைச்சு நடந்தேன்.''


காளியண்ணன் தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டான்.

''வள்ளியக்கா, சாக்கிரதை... உங்கண்ணன் இங்கேயும் கத்திப் பாட ஆரம்பிச்சுடப் போகுது. அந்தக் கத்தலை மறுபடியும் கேட்டா செத்த புலியே சீறிக்கிட்டு வந்தாலும் வந்திடும். நேத்து அந்தப் புலி என்னைத் துரத்த ஆரம்பிச்சதே அதனாலேதான். அந்தக் கத்தலுக்கு நான்தான் காரணமோன்னு சந்தேகம் வந்திடுச்சு அதுக்கு. கத்தினது யாருன்னு காட்டிக் குடுக்கத்தான் நான் அந்தப் புலியைக் கூத்துத் திடலுக்கு அழைச்சிக்கிட்டு வந்தேன்.''

''வள்ளி! மறுபடியும் என் பாட்டைக் கத்தல்னு சொல்றவங்களை என்ன செய்வேன், தெரியுமா?'' என்று கத்தினான் காளி.

''புத்தி..... புத்தி'' என்று கிண்டலாகக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள் மங்கா. தொடர்ந்து கூறினாள்: ''ஐயோ, வள்ளியக்கா! உங்கண்ணன் புலியோட சண்டை போட்ட அழகை நீ உன் கண்ணாலே பார்த்திருக்கணுமே. அதை இப்ப நினைச்சிக்கிட்டாலும் எனக்குச் சிரிப்பு வருது. பாறை மேலே புலி. தரையிலே பத்தடி தூரத்திலே இந்த இளைய ராசா. நீவட்










டினோபால் வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது.

துவைத்த துணிகளைக் கடைசியாக அலசுவதற்கு முன், தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்த்துப் பாருங்கள். உங்கள் வெள்ளைத் துணிகளெல்லாம் எப்படி மேலும் வெண்மை பளிச்சிடுகின்றன! சட்டைகள், புடவைகள், டவல்கள், விரிப்புகள் எல்லாம் எப்படி அதிகரித்த வெண்மை துலங்க விளங்குகின்றன!

இந்த அதிகரித்த வெண்மைக்கு ஆகும் செலவுதான் என்ன? துணி ஒன்றுக்கு ஒரு பைசாவுக்கும் குறைவுதான்! கால் தேக்கரண்டி அளவு டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய்கிறது.

விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட டினோபாலை எப்பொழுதும் உபயோகியுங்கள். அதனால் துணிகளுக்கு ஒருவிதமான கெடுதலும் ஏற்படுவதில்லை.




டினோபால் இப்பொழுது ஸீல் செய்யப்பட்ட அலுமினிய ரேக்குப் பேக்கெட்டுகளிலும் கிடைக்கிறது. ஒரு பேக்கெட் டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய் கிறது. சிறிதும் வீணாவதில்லை, உபயோகிக்கச் சுலபமானது, தொந்தரவற்றது.

டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்சர்லாந்து அவர்களின் பதிவுபெற்ற வியாபாரச் சின்னமாகும்.
சுஹ்ரித் கெய்கி லிட், த.பெ. 965, பம்பாய் 1 பி.ஆர்.

Shilpi SG 223 A Tam

டியை ஆட்டி ஆட்டிக் கோடாலிக்குப் பலியா வரச் சொல்லிக் கூப்பிட்டுக்கிட்டிருந்த நேர்த்தி இருக்கே, அடாடா! எத்தனை நேரம்தான் அதைப் பார்த்துக்கிட்டு நிக்க முடியும்? நான் பொறுமை இழந்திட்டேன். புலியைக் குறி பார்த்து விட்டேன், ஒரு கல்லு!'' என்று கூறிய மங்கா இடி இடி யென்று சிரிக்க ஆரம்பித்தாள்.



அடுத்த பக்கம் பார்க்க

''அடி பாவி.... நீ எறிஞ்ச கல்லு தானா அது?'' என்று கத்தினான் காளி.

''பின்னே என்ன? இல்லேன்னா நீ அந்தப் புலியைக் கொல்றதேது? விடிஞ்சு போயிருக்கும். புலியும் காட்டுக்குத் திரும்பிப் போயிருக்கும்.''

''என்ன துணிச்சல் இந்தப் பெண்ணுக்கு!'' என்று அதிசயித்தாள் அஞ்சலையத்தை.

''ஏன் மங்கா, கல்லையெறிஞ்சு புலியை உசுப்பி விட்டியே. அண்ணனுக்கு ஏதாவது ஆகியிருந்தா?'' என்று பதறினாள் வள்ளி.

''என்ன ஆகியிருக்கும்? அதுக்குக் கூடச் சாமர்த்தியம் இல்லாத ஆளு கோடாலியையும் தீவட்டியையும் வைச்சுக்கிட்டு அங்கே நிற்கவேண்டிய அவசியமென்னன்னு கேக்கறேன். எங்கேயாவது போய்ப் பதுங்க வேண்டியது தானே!''

''மங்கா, என் கோவத்தைக் கிளப்பாதே!'' என்று பல்லைக் கடித்தான் காளியண்ணன்.

''கோவம் என்னய்யா, கோவம். நீ சூரப்புலின்னு ஊரெல்லாம் கொண்டாடுதே, அது எப்படி நடந்ததுன்னு இவங்களும்தான் தெரிஞ்சுக்கட்டுமே!'' என்றாள் மங்கா.

''ஏன் மங்கா! ராவு நேரத்திலே முள்ளிமலைக்குப் போனியே, உங் காத்தா உன்னை ஒண்ணும் சொல்லலையா?'' என்று கேட்டாள் அஞ்சலை.

''ஆத்தாவுக்குத் தெரிஞ்சாத்தானே? அது தூக்கம் கலையறதுக்கு முந்தியே நான் ஓசைப்படாமே உள்ளே போய்ப் படுத்துக்கிட்டேன். அது வேலைக்குப் புறப்பட்டுப் போகிற நேரம் வரைக்கும் என் தூக்கம் கலையலே'' என்று சிரித்தாள் மங்கா.

''நல்ல வேளை!'' என்று பெருமூச்செறிந்தாள் அத்தை.


''அப்படியே ஆத்தாவுக்குத் தெரிஞ்சாத்தான் என்ன? வெறகுக் கட்டையாலே நாலு போடுமாக்கும். போடட்டுமே... இந்த உடம்பு அதைத் தாங்கிக்கும்'' என்றாள் மங்கா.

வெளியே கார் நிற்பது தெரிந்தது. காரிலிருந்து குமரனும் இன்னொரு மனிதரும் இறங்குவதைப் பார்த்த வள்ளிக்கு வியப்புத் தாங்கவில்லை. அந்தப் புதிய மனிதரின் கைப்பெட்டியும், கழுத்தில் தொங்கிய ரப்பர்க் குழாயும் அவர் டாக்டர் என்பதைப் பறைசாற்றின. அவர்தான் கீழூர் ஆஸ்பத்திரி டாக்டர் என்பதை அறிந்து கொள்ள வள்ளிக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

வீரமணியும், கனகாவும் காரிலேயே உட்கார்ந்திருந்தனர் என்பதை வள்ளி கண்டுகொள்ள முடிந்தது.

''காளி! உடம்பு எப்படி இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே குமரன் எத்தனையோ தடவை அந்த வீட்டுக்கு வந்து பழகினவன்போல் உரிமையுடன் உள்ளே வந்தான்.

யாரோ வேற்று மனிதர் உள்ளே வருவதைப் பார்த்ததும் அஞ்சலையத்தை தடுமாற்றத்துடன் அடுப்பறைக்குச் சென்றாள். அவளைத் தொடர்ந்து சென்ற மங்கா, அவள் காதில், ''இதுதான் அந்தப் புது ஐயா! எஞ்சினீயரய்யா. வள்ளியண்ணனுக்கு மேலதிகாரி'' என்று கூறியதும் அவள் விழிகள் ஆச்சரியத்தால் அகன்றன.



"எவ்வளவு பெரிய மனசு. பேதமில்லாம நம்ம வீட்டைத் தேடி வந்திருக்காரே!" என்று அதிசயித்தவாறு அஞ்சலையத்தை அவர்களுக்குத் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பைப் பற்ற வைத்தாள்.

"டாக்டர்! நடந்த சமாசாரத்தை நான் உங்களுக்குச் சொல்லி விட்டேன். காயம் பலமென்பது கட்டைப் பார்த்தாலே தெரிகிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இந்த ஆளைப் பழையபடி வேலைக்கு அனுப்புவது உங்கள் பொறுப்பு" என்றான் குமரன்.

"காயத்தில் ஏதேதோ பச்சிலையை வைத்துக் கட்டியிருக்கிறார்கள். முதலில் அந்தக் கட்டை அவிழ்த்தாக வேண்டும்" என்று கூறிய டாக்டர் கட்டை அவிழ்ப்பதற்காகக் குனிந்தார்.

"நிறுத்துங்க சார்!" என்று கத்தினான் காளி. "கட்டு என் உடம்பிலே போட்டிருக்கு. அதை அவுக்கறதுன்னு என்னை ஒரு வார்த்தை கேக்க வேண்டியதில்லையா?"

"காளி! இவர் யார் தெரியுமில்லே? கிழூர் ஆஸ்பத்திரி டாக்டர். உனக்காகத்தான் அங்கிருந்து காரில் வந்திருக்கிறார்" என்றான் குமரன்.

"காரிலே வந்தாலும் சரி, பிளேன்லே வந்தாலும் சரி, எனக்கு இந்த இங்கிலீஷ் வைத்தியமெல்லாம் பிடிக்காது சார்!" என்றான் காளி முரட்டுத்தனமாக.

"அண்ணா!" என்று கூவினாள் வள்ளி.

"ஏ, வள்ளி, நீ உள்ளே போ. எங்க பேச்சுக்குக் குறுக்கே நீ ஏன் பேச வர்றே?" என்று வள்ளியின் மீது எரிந்து விழுந்தான் காளியண்ணன்.

வள்ளி வெலவெலத்துப் போய்த் தலையைக் குனிந்தவாறு உள்ளே சென்றாள்.

டாக்டர் இப்போது பேசினார். "இதோ, பாரப்பா, இங்கிலீஷ் வைத்தியம்னு என்னமோ ஏதோன்னு நினைக்காதே. ஒரு தொந்தரவும் இல்லாம உனக்கு உடம்பு குணமாயிடும்."

"என்னைத் தொந்தரவு செய்யாதீங்க சார். எனக்கு உங்க வைத்தியத்திலே நம்பிக்கை கிடையாதுன்னு சொல்லிட்டேனே!"

"காயம் சீக்கிரமா ஆற வேண்டாமா காளி? அப்பத்தான் எப்போதும் போல நீ வேலைக்கு வர முடியும்" என்றான் குமரன்.

"ஆமாம். நான் சீக்கிரம் வேலைக்கு வந்தாத்தானே நீங்க போக வர என் மண்டையிலே குட்டிக்கிட்டு இருக்க முடியும்."

"காளி! என்னைப் பற்றி நீ இன்னமும் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றான் குமரன்.

"வேறே விதமா நினைக்கிறதுக்கு நீங்க இடம் வெச்சாத்தானே?" என்று சீறினான் காளியண்ணன்.

குமரன் ஒரு நீண்ட பெருமூச்சுடன் திரும்பினான்.

"சரி, காளி! உன் இஷ்டம். வாங்க டாக்டர், அனாவசியமாக உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன். என்னை மன்னிச்சிடுங்க" என்று கூறி டாக்டருடன் வெளியேறினான்.

உள்ளிருந்து அவர்களுக்காகத் தேநீர் எடுத்து வந்த வள்ளி இருவரும் திரும்பிச் செல்வதைப் பார்த்ததும் அப்படியே திகைத்து நின்றாள்.

"ஏன் போயிடறாங்க?"

"அவங்களாப் போகலே. நான்தான் திருப்பியடிச்சேன்" என்றான் காளி, வெறி கொண்டவன் போல் கண்களை உருட்டியவாறு.

இதைக் கேட்டுக் கொண்டு உள்ளிருந்து வந்த மங்கா, ஏளனமாக வாயை நெட்டையிட்டாள் — "நல்ல மனுசங்க மனசை நோகப்பண்ணி அனுப்பிட்டாரில்லே, பெரிய வீரர்னு நினைப்பு" என்று கூறியதும் காளிக்குப் பொறுக்கவில்லை.

"ஏ, மங்கா! இப்போ இங்கேயிருந்து போறயா இல்லையா நீ?" என்று கத்தினான்.

"போறேன், போறேன். உன் எதிரே நிக்க யாருக்குப் பிடிக்குது?" என்று கூறியவாறு அங்கிருந்து நடந்தாள் மங்கா.

(தொடரும்)

ஒரு வீர புருஷர்

சித்ரா எஸ். நாராயணசுவாமி

செப்டம்பர் 26ந் தேதி நண்பகலில் டாக்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் லண்டன் மாநகரத்தில் தமக்கு மிகவும் பிடித்தமான 'லண்டன் கிளப்' விடுதியில் திடீரென்று காலமானார் என்ற செய்தி சம்மட்டியினால் அடிப்பது போன்றதொரு கடுமையான சோகச் செய்தி. பேரிடியினால் தாக்கப்பட்டால் எப்படிக் கலக்கம் ஏற்படுமோ அத்தகைய கலக்கத்தையும் அதிர்ச்சியையும் இந்தச் செய்தி நாட்டில் பலருக்கு உண்டாக்கியது. இதை நம்புவதே என் போன்ற பலருக்குக் கஷ்டமாயிருந்தது. பூரண வாழ்வு வாழ்ந்து, தமது 87வது வயதில் காலமான பெரியவரைப் பற்றிய மரணச் செய்தியைச் செவியுற்றதும் ''காலமாய் விட்டாரா? உண்மையாகவா?'' என்று கேட்டுக் கேட்டு அதிர்ச்சியைத் தாங்கி மனத்துக்கு நிச்சயத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டியிருந்ததென்றால் அதற்குக் காரணம் உண்டு. பதினைந்து நாளைக்குமுன், அவருடைய பேச்சுக்களின் வேகத்தையும், விறுவிறுப்பையும் சுவை குன்றாத அழகையும் கேட்டவர்கள், அவருடைய சுறுசுறுப்பான நடையைப் பார்த்தவர்கள், அவரை 87 வயதான முதியவர் என்று நினைக்கவேயில்லை. அவருடைய கட்டுரைகளின் சிந்தனைத் தெளிவும், பொருள் செறிவும், வாசகக் கோவைகளின் இனிமையும், பலருடைய மனத்தில் பசுமையாகவே உள்ளன. நண்பர்களுடன் அவர் பழகிய பண்பும், கண்ணியமும் அவருடைய சம்பாஷணைகளின் மாதுர்யமும் இன்னமும் மனக்கண் முன்னே நிற்கின்றன. இதை நேரில் அனுபவித்தவர்களெல்லாம் சி. பி. இன்னும் பல்லாண்டு நம்மிடையே வாழப் போகிறார், அவருடைய உற்சாகத்தையும் அநுபவத்தையும் நமக்குத் தொடர்ந்து அளித்து வருவார் என்றுதான் எண்ணியிருந்தார்கள். 'இறவாமலிருப்பதற்கே பிறந்த குயில்' என்று ஆங்கிலக் கவி கீட்ஸ் எழுதிய கவிதை ஒன்றில் வருகிறது. சி. பி.யும் அத்தகைய ஒரு குயில் என்றுதான் நானும் பலரும் எண்ணினோம். இந் நிலையில் செப்டம்பர் 26ந் தேதிச் செய்தி எங்களை நிலைகுலைய வைத்ததைப் போல நாட்டு மக்கள் பலருக்கும் அதிர்ச்சியைத்தான் தந்தது.



கனமான மலர் மாலை அணிந்திருக்கும் கம்பீரத் தோற்றம்.

சேத்துப்பட்டு பட்டாபிராம ராமஸ்வாமி அய்யர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வந்தவாசி என்ற ஊரில் 1879, நவம்பர் 12ந் தேதி பிறந்தவர். அவரது தந்தையார் சி. ஆர். பட்டாபிராம அய்யர் அப்போதே சிறந்த வழக்கறிஞர். தஞ்சையில்தான் தொழில் நடத்தி வந்தார். புகழ் பெற்ற ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார், ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், தஞ்சையை விட்டுச் சென்னை மாநகரத்துக்கு வந்து தமது வழக்கறிஞர் தொழிலை நடத்தப் பட்டாபிராம அய்யர் தீர்மானித்தார். அப்போதிருந்த சூழ்நிலையில் அது ஒரு தீரமான முடிவு என்றே கருதப்பட்டது. அவருடைய ஒரே புதல்வன் ராமஸ்வாமி, தமது படிப்பை வெஸ்லி காலேஜிலும், பின்னர் பிரஸிடென்ஸி கல்லூரியிலும் மேற்கொண்டு கணிதப் பகுதியில் பட்டமும், பல பரிசுகளும் பெற்றுப் பிரகாசித்தார். தமக்கு விருப்பமில்லாவிட்டாலும், தகப்பனாரின் வற்புறுத்தலினால், உயர் படிப்புக்காகச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து, சட்டக் கல்வியையும் பூர்த்தி செய்து கொண்டார். பெரும் புகழ்பெற்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரிடம் 'அப்ரண்டீஸா'கப் பயிற்சி பெற்று, பின்னர், 1902ம் ஆண்டில் தமது தந்தையார் காலமான பின், தாமும் வழக்கறிஞராகவே தொழில் நடத்தத் தீர்மானித்து, இத்துறையில் முழுமூச்சுடன் முனைந்தார். இந்தக் காலத்தில் முன்னணியிலிருந்த யார்ட்லி நார்டன், ஜே. எல். ரொஸாரியோ, ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் போன்ற பெரியோர்களிடம் சி. பி. ராமஸ்வாமி அய்யருக்குப் பெருமதிப்பு உண்டு. அவர்களுடைய பண்புகளும், அறிவாற்றலும் இவரைப் பெரிதும் கவர்ந்தன. அந்த மரபி

லேயே தமது போக்கையும் அமைத்துக் கொண்டார் என்றுகூடக் கருதலாம்.

1920ம் ஆண்டில், வழக்கறிஞர் வட்டாரத்தில் இவருக்கிருந்த செல்வாக்குக் காரணமாக அட்வொகேட் ஜெனரல் என்ற சர்க்கார் உயர் உத்யோகம் இவருக்கு அளிக்கப்பட்டது. 1923ம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தில் சட்ட அங்கத்தினராகப் பதவி வகித்தார். அந்தக் காலத்தில் அரசியலமைப்பில் இது அமைச்சர் பதவிக்குச் சமம். 1928 வரையில் இப்பதவியை அவர் மிகத் திறமையுடன் நிர்வகித்தார்.

இந்த ஆண்டுகளை, அவருடைய வாழ்க்கையிலும், நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் ஒரு பொற்காலம் என்று கருத வேண்டும். ஏனெனில் அந்த இளம் பிராயத்திலேயே அரசியலில் நிர்வாக சாமர்த்தியம் பெற்று அநுபவஸ்தராக சி. பி. மாற உதவிய காலம் இது. பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்ற தீவிர எண்ணம் இந்தக் காலத்தில்தான் அவருக்கு உண்டாயிற்று. தேர்தல்களிலும், பிரசாரத்திலுமே உற்சாகம் கொண்ட அரசியலார்க்கு, இம்மாதிரி ஒரு புதுத் துறையில் பற்றுதல் ஏற்பட்டது நாட்டுக்கு நன்மையாகவே முடிந்தது. மேட்டூர் அணைத் திட்டமும், பைகாரா திட்டமும் தரிசு நிலங்களை யெல்லாம் வளப்படுத்தின. பல விவசாயக் குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளித்தன. ஆனால் மந்திரி சபையில் இருந்த சக ஆட்சியாளர்களையும், மத்திய அரசாங்கத்தையும் இவரது இந்த முன்னேற்றகரமான நடவடிக்கைகள் சங்கடத்தில் ஆழ்த்தி மனக் கசப்பைத் தோற்றுவித்தன. சி. பி.யின் பொருளாதாரத் திட்டங்களைக் கண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பீதி அடைந்து, இவருடைய முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டது. எனினும், சி. பி.யின் அப்பழுக்கற்ற அந்தஸ்தும், [வ]ற்புறுத்திச் சொல்லும் வாதத் திறமையும், கம்பீரமான தோற்றமும், மாசற்ற நல்லெண்ணமும், எந்த ஆட்சேபங்களையும் வெற்றிகரமாகவே முறியடித்து விட்டன.

வைஸ்ராய் கவுன்சிலில் அங்கத்தினராகவும் (இப்போதைய மத்திய அரசாங்க அமைச்சர் பதவிக்குச் சமம்) 1931, 1932 ஆண்டுகளில் பதவி வகித்தார். சட்டத் துறையும் தொழில் துறையும் இவருடைய ஆதிக்கத்தின் கீழ்



சிரித்துப் பேசி மகிழும் சிந்தனையாளர் இருவர்.

கல்வி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவமும், ஸ்ரீ சி. பி. ராமஸ்வாமி அய்யரும்.



கொஞ்சம் பிதற்றல் போதுமே!

என்னுடைய வழக்கறிஞர் தொழில் வாழ்க்கை தொடங்கிச் சில ஆண்டுகளுக்குப் பின் சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிபதி பதவி எனக்கு வழங்கப் பட்டது. ஆனால் அதை வேண்டாம் என்று நிராகரித்து விட்டேன். இது பற்றி அப்போதிருந்த உயர் நீதிபதிக்கு நான் எழுதிய கடிதம் பிரபலமடைந்து விட்டது. அதில் "நான் முழுவதும் மற்றவர்களின் பிதற்றலையே கேட்டுக் கொண்டிருப்பதை விட, நாளைக்குச் சில மணி நேரம் மட்டுமே பிதற்றுவதை நான் விரும்புகிறேன். ஆகையால் உயர் நீதிபதி அவர்கள் என்னை மன்னித்து விடவும்-' என்று நான் எழுதியிருந்தேன்.

சி. பி. ராமஸ்வாமி அய்யர்


அக்காலத்தில் இருந்தன. ஆனால் இது மிகவும் குறுகிய காலப் பதவியே. திருவிதாங்கூர் மகாராஜாவுக்கு அரசியல் ஆலோசகராகவும் சட்ட ஆலோசகராகவும் 1931லிருந்து 1935 வரையில் பதவி வகித்துப் பின்னர் 1936ல் சமஸ்தானத்து திவானாகப் பதவி ஏற்றார். 1947 வரையில் இவ்வுயர் பதவியில் நிகரற்று விளங்கினார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சரித்திரத்தில் இவர் திவானாகப் பதவி வகித்த காலம் ஆக்க வேலைகளும் அபிவிருத்தியும் நிரம்பிய காலம். அந்த ராஜ்யத்தைத் தொழில் வளம் மிகுந்த பிரதேசமாகச் செய்தார். மற்ற சமஸ்தானங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாகவும் ஏன், பொறாமையை உண்டுபண்ணக்கூடிய அளவுக்கும் அதனை உன்னத நிலைமைக்கு உயர்த்திய பெருமை சி. பி.யைச் சாரும். இவற்றைச் சாதிக்க அவர் ஓய்ச்சலின்றி, ஒழிவின்றி உழைத்தார். அவர் செய்து விட்டுப் போன நற்காரியங்களைப் பிற்காலத்தில் மேலும் தொடர்ந்து விஸ்தரிக்கச் செய்யாதது துரதிர்ஷ்டமே.

ஸர் சி. பி. செய்துள்ள உலகச் சுற்றுப் பயணங்கள் கணக்கிலடங்கா. கிரேக்க நாட்டு ஹோமரைப் போன்றதொரு கவிஞர் இக்காலத்தில் தோன்றி இதிகாசம் புனைய எண்ணங் கொண்டால் சி. பி.யின் உலகப் பயணங்கள் அவருக்கு உகந்த கருவூலங்களாக அமையத் தகுதி உள்ளவை. ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் அவருக்கிருந்த புலமை அபாரம். மேல்நாட்டுக் கலாசாரங்கள், கீழ்நாடுகளின் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியில் பல்வேறு கட்டங்களைப் பற்றியும் அவருக்கிருந்த ஞானம் அந்தந்தத் துறையில் நிபுணர்களாக விளங்கும் பல வெளிநாட்டு அறிஞர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

காசி, அண்ணாமலை, திருவிதாங்கூர் ஆகிய மூன்று சர்வகலாசாலைகளிலும் உப-அத்யக்ஷகராக சர் சி. பி. ஆற்றிய பணி மகத்தானது. திருவிதாங்கூர் சர்வகலாசாலையை ஸ்தாபித்தவர் சர் சி. பி.; ஹிந்து அறநிலைய மானியக் கமிஷன் தலைவர் என்ற முறையில் அவர் சமர்ப்பித்துள்ள யாதாஸ்து இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்தது. பெரும் பிரயாசையுடன் சிறு விஷயங்களிலும் கவனம் குறையாது தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கையில் சமயத் துறையில் சி. பி.க்கிருந்த உண்மையான ஆழ்ந்த அநுதாபம் பூரணமாகப் பிரதிபலிக்கிறது. நீதிபதி ராஜாத்யக்ஷாவின் தலைமையில் இயங்கிய பத்திரிகைத் தொழில் கமிஷனில் அங்கத்தினராக ஸர் சி. பி. ஆற்றிய பணி ஒரு சிறப்புப் பணி. இந்தக் கமிஷனிலேயே ஸர் சி. பி. யைப் போலப் பத்திரிகை உலகுடன் நெருங்கிய நீண்ட காலத் தொடர்பு கொண்டிருந்தவர் வேறு ஒருவரும் இல்லை.

அவருடைய வாதத் திறமையும், சொல் வன்மையும் பிரசித்தம். இவற்றை விவரித்துச் சொல்லத் தேவையில்லை. ஐ. நா. சபையில் காஷ்மீர் விவகாரம் விவாதிக்கப்பட்டபோது இந்தியாவின் சார்பில் ஸர் சி. பி. அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்டதே இவருடைய வாதத் திறமைக்கு ஒரு சான்று. ஆனால் அவருடைய வாழ்க்கையில் அரசியல் துறையிலாகட்டும், நிர்வாகத் துறையிலாகட்டும், பல எதிர்ப்புக்களைச் சமாளித்துக் கொண்டே முன்னேறவேண்டியிருந்தது. இதுவும் அவர் விஷயத்தில் விதியின் விளையாட்டு என்றே கொள்ள வேண்டும். தொடர்ந்து அபவாதத்தையும், துஷ்பிரசாரத்தையும் எதிர்த்துப் போராடினார். ஒரு சுதந்திர நாட்டில், அரசியல் காரணங்களினால் ஏற்படும் ஆதாரமற்ற எதிர்ப் பிரசாரங்களிலிருந்து தங்களுக்கு விலக்களிக்கப்பட வேண்டும் என்று ஆக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட எதிர்பார்க்க முடியாது. டாக்டர் சி. பி.யின் அசாதாரணமான சக்தியும் ஆற்றலும் பல துஷ்பிரசாரங்களிலிருந்து அவரைக் காப்பாற்றியதுடன், நாட்டையும் பொருளாதாரத் துறையில் முன்னேறச் செய்ய உறுதுணையாக உதவின. அவர் மேட்டூர் பைகாரா திட்டங்களை உருவாக்கிய போதும், திருவிதாங்கூர் சமஸ்தான திவானாகப் பணியாற்றிய காலத்திலும், ஏன், நூற்றுக்கு நூறு காந்திஜியின் இட்டமான ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசப் பிரகடனம் செய்தபோதும் கூட, ஸர் சி. பி.யைப் பற்றிப் புறம் கூறியவர்கள் இருக்கவே செய்தனர். இவற்றையெல்லாம் மதியாது முன்னேறிய தீரர் ஸர் சி. பி.


முதன் முதலாக நிறைவேறிய சாதனைகள் என்று கணக்குப் பார்த்தால் பல விஷயங்கள் டாக்டர் சி. பி.யின் புகழுக்குக் கட்டியம் கூறுகின்றன. மரண தண்டனையைச் சட்டத்தினின்று முதலில் அகற்றியது திருவிதாங்கூர் சமஸ்தானம்தான்; முதன்முதலில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை அநுமதித்ததும் திருவிதாங்கூர்தான்; ரசாயன உரத் தொழிற்சாலையை இந்தியாவிலேயே முதலில் ஆரம்பித்து வைத்தது ஸர் சி. பி. தான். ஒரு கோடி ரூபாய் ஒரு தொழிலில் அரசாங்கம் முதலீடு செய்வது என்பது முதன்முதலில் இவரது திருவிதாங்கூர் ராஜ்யத்திலேதான் நடைபெற்றது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு உணவுப் பற்றாக்குறையினால் மக்கள் பட்டினியால் பாதிக்கப்படக்கூடாது என்று "ப்ரொக்யூர்மெண்ட்" மூலம் தானியச் சேகரிப்பு செய்ததும் திருவிதாங்கூர்தான். மக்கள் நன்மையில் நாட்டமுள்ளவர் எல்லாம் இவர்



ஸ்டோர்வெல்
வீட்டிற்கோர்
அணிகலம்



ஸ்டோர்-
வெல்
சிறந்த ரீதி
யில் உழை
க்கிறது.




வாழ்நாள்
முழுவதும்
போற்றப்படும்
ஸ்டோர்வெல்
அதற்கீடான
பரிசு வேறொ
ன்றில்லை.

பத்திரமாயும், ஒழுங்கான முறையில் சாமான்களை வைக்கக்கூடியதும், திருடர்களிடமிருந்தும், நெருப்பிலிருந்தும் பாதுகாப்பு அளிப்பதுமான சாதனம் கருங்கக்கூறின் — ஸ்டோர்வெல் ஆகும்.

உங்களுக்கு இன்றி யமையாதது

துருவைத் தடுக்கும் ஒப்பற்ற பாதுகாப்புடையதும், பிரத்தியேக அம்சங்கள் பொருந்தியதும் பிரம்மாண்ட அளவில் தயாரிக்கப்படுவதுமான இந்த அற்புத சாதனத்தை, நியாயமான பேரம் எனக் கருதப்படும் விலைக்கு நீங்கள் பெறலாம்

ஸ்டோர்வெல்




1981 மி.மீ. உ. x 914 அ x 483 மி.மீ. ஆ
(78" உ. x 36" அ x 19" ஆ)

காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு ஸ்டோர்வெல் மாடல்களை கோத்ரெஜ் காட்சிசாலையிலாவது அல்லது இந்தியா முழுவதுமுள்ள ஸ்டாக்கிஸ்ட்களிடமாவது பார்வையிடுங்கள்.

Godrej

கோத்ரெஜ்

ST.1/A TAM.


சக்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்-விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதில் உள்ளன. மிகச்சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்-விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

றைப் பெரிதும் பாராட்டினர். ஆனால் சில உள்ளூர்ப் பத்திரிகைகள் சீறி எழுந்து, நிர்வாகத்தில் குறை காணுது, தனிநபர் மீது வசைமாரி பொழிந்தன. இதனால் ஸர் சி. பி. தமது உற்சாகத்தை இழக்க வில்லை. தமது சாதனைகளைப் பிற்கால வரலாறு உண்மையாக மதிப்பிடும் என்று நம்பி, எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலே செயலாற்றினார். பத்தொன்பது ஆண்டு களுக்குமுன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். அதனால் அவர் அந்த சமஸ் தானத்துக்குச் செய்த நன்மைகளை மக்கள் இன்று உணர்ந்து பாராட்டுவதைத் தமது ஆயுட்காலத்திலேயே கண்டு களிக்கும் பாக் கியத்தைப் பெற்றார். ஆங்கில நாட்டு அமைச்சர் கிளாட்ஸ்டனைப் போல், தாம் ஒரு சரித்திர புருஷராகத் திகழ்வதைத் தமது ஆயுட் காலத்திலேயே ஸர் சி. பி. கண்டார்.

வாழ்க்கையில் பல துறைகளில் அவ ருடைய மேன்மை துலங்கியது. தொட் டதை யெல்லாம் அழகுறச் செய்யும் அபூர்வ சக்தி கொண்டவர் ஸர் சி. பி. கடுமையாக உழைப்பதில் அசாதாரண சாமர்த்தியம் உள்ளவர். அவருடைய ஞாபக சக்தி அபார மானது. பசைக் காகிதத்தைப் போன்று அதில் நினைவுகள் ஒட்டிக் கொள்ளும். வாழும் சுற்றுப்புறம் அழகுடன் மனோகரமாக இருப் பதை அவர் மிகவும் விரும்பினார். அவருடைய உதகை பங்களா இதற்கு நிரந்தரமான சான்று. நட்பை வளர்த்துக் கொள்வதில் அவருடைய ஆற்றல் மிகச் சிறப்பு வாய்ந் தது. அவருடைய கணக்கற்ற நண்பர்கள் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருக் கின்றனர். அவர்கள் எல்லோருடனும் உவப்புடன் கடிதப் போக்குவரத்து வைத் துக் கொண்டிருந்தார். மூன்று ஆண்டு களுக்குமுன், ஆங்கிலேய முன்னாள் பிரதமர் ஆட்லி பிரபு, ராஜாஜி மண்டபத்தில் ஒரு கூட்டத்தில் பேசினார். அக்கூட்டத்துக்கு ஸர் சி. பி. தலைமை வகித்தார். அவருடன் கைகுலுக்கிக் குசலம் விசாரித்த ஆட்லி பிரபு ''சி. பி. உங்களை நான் லண்டனில் பார்த்த தற்குப் பின், இப்போது பத்து வருஷங்கள் இளமையாகக் காணப்படுகிறீர்கள்'' என்று சுற்றியிருந்த ஏழெட்டு பேர்கள் காதில் கேட்கும்படி உரக்கவே உண்மை மகிழ்ச்சி யுடன் கூறினார். சம்பிரதாயமாகக் கூறிய வார்த்தைகள் அல்ல இவை என்பதை நாங்கள் நன்றாகவே உணர்ந்தோம். அதே போலத்தான், ''டாக்டர் சி. பி. — இந்த இளம் சென்னை 'லாயர்' — ஆங்கிலேய நீதி மன்றங்களில் பிரமிக்கத்தக்க வெற்றியுடன் தொழில் நடத்தக்கூடிய சாமர்த்தியம் உள்ளவர். இவர் என்னை வாதத்தில் அறவே கட்டிப் போட்டு விட்டார்'' என்று மாண்டேகு தமது 'டயரி'யில் மனம்விட்டு உண்மையை எழுதினார்.

ஸர் சி. பி.யின் வள்ளல்தன்மை இருமுனை கொண்டது. பல பேர்களுக்குப் பணம் வாரி வழங்கியுள்ளார். ''பெறுபவர் கலங்கும்வரை யில் அள்ளிக் கொடு'' என்பது ஆங்கிலத்தில் மிகைப்படக் கூறப்படும் ஒரு கேலி வாசகம். ஆனால் ஸர் சி. பி. இதைச் செய்து காட்டியவர். வழக்கறிஞராக உன்னத நிலையிலிருந்த போது தமது வருமானம் முழுவதையும் தான தருமங்களில் செலவிட்டிருக்கிறார். மற்றவர் களையும், அவர்கள் செய்யும் காரியங்களை யும் மதிப்பீடு செய்வதில் அவர் பரந்த மனப்பான்மையுடனும் அனுதாபத்துடனுமே நடந்து கொண்டார். பழைய நண்பர்கள் நொடித்துப் போனாலோ, நோய்வாய்ப்பட் டிருந்தாலோ, அவர்களைக் காணத் தவற மாட்டார். ஜம்பத்தை விரும்பாதவர். ஜம்பத்தை விரும்புகிறவர்களையும் அவருக் குப் பிடிக்காது.

இப்பேர்ப்பட்ட மகாபுருஷர், புலமையும் செயல் திறனும் அசாதாரணமாக இணைந்து அமையப்பெற்ற ஒருவர், நாட்டுப் பொது வாழ்வில் அரைநூற்றாண்டு காலம் மாபெரும் மனிதராகக் கம்பீரமாக உலாவிய பெரியவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்பதை நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கிறது. அவர் பிரிந்து போன விதம்கூட அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்த விருப்பத் தின்படி நிகழ்ந்தது ஆச்சரியம். நோய் வாய்ப்பட்டுத் தாமும் கஷ்டம் அநுபவித்து, மற்றவர்களுக்கும் கஷ்டம் கொடுத்துக் கொண்டிருப்பதை அவர் விரும்பியதே இல்லை. ''அனாயாஸேன மரணம்'' என்ற நிலைமையும் அவருக்குக் கைகூடிற்று. நிறைவு பெற்ற கர்மவீரனாகத் திகழ அவர் ஆசைப் பட்டார். ஆசை நிறைவேறிற்று.

பல 'பல்பு'களுடன் கூடிய அற்புதமான வேலைப்பாடுகள் அமைந்த ஒரு கண்ணாடிச் சர விளக்கு திடீரென்று விழுந்து உடைந்து போய்விட்டது. புதிய 'பல்பு'களை வேறு மாறுதல் போட்டுவிடலாம். ஆனால் வண்ண ஜாலம் காட்டி ஜ்வலித்துக் கொண்டிருந்த கலையழகுடன் கூடிய அந்தச் சர விளக்குக்கு எங்கே போவது?

தமிழில் பேசினார்!


பல ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் ஒரு காங்கிரஸ் மகாநாடு நடந்தது. அதில் நானும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் பங்கு கொண்டோம்; சி. பி. ராமஸ்வாமி அய்யரும் பெஸன்டு 'ஹோம்ரூல்' இயக்கத்தில் ஈடுபட்டி ருந்தார். திருநெல்வேலி மகாநாட்டில் அவரும் கலந்து கொண்டார். இந்த மகாநாட்டில் தான் சி.பி. ராமஸ்வாமி அய்யர் முதல் தடவையாகத் தமிழில் பேசினார். முதலில் அவர் தயங்கினார். எப்படி இருக்குமோ என்று அச்சம். நான் தான் அவரை ஊக்குவித்தேன். பகிஷ்கரிப்புத் தீர் மானத்தில் அவருக்கு எதிராக நான் பேசின லும், அவருக்கும் எனக்கும் இருந்த நட்பின் காரணமாக, தமிழில் பேச வேண்டும் என்று அவரைத் தூண்டினேன். அவருடையப் பேச்சுத் தமிழ் என்னுடைய ஆங்கிலத் தமிழை விட நன்றாகவே இருக்கும் என்றேன். என் ஆலோ சனையை ஏற்றுக் கொண்டு மிக அழகான தமி ழில் பேசினார். அவருக்கே அது ஆச்சரியமாக இருந்தது!

அவருடைய தைரியமும், நிர்வாகத் திறமை யும் புலமையும், தேசிய அபிமானமும் எப் போதும் உயர் நிலையிலேயே இருந்தன.

- ராஜாஜி

* பஞ்சதந்திரக் கதைகள்
* இதிகாசம், வேதம், புராணங்களிலிருந்து சிறுகதைகள்
* விஷ்ணு புராணம்
* ஆழ்வார்களின் ஜீவிய சரித்திரங்கள்
* ஆச்சாரியார்களின் ஜீவிய சரித்திரங்கள்
* ஸ்தல புராணங்கள்
* ஸ்ரீ அழகிய சிங்கரின் அருள் மொழிகள்
* விசிஷ்டாத்வைதத்தின் விரிவுரை (ஆங்கிலத்தில்)

மற்றும் பல தொடர்கட்டுரைகளுடன்
வெளி வந்து கொண்டிருக்கிறது



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அஹோபில மடத்தின் தமிழ் மாதப் பத்திரிகை

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் சிறுகதைகள், வேதம் மற்றும் புராணங்களிலுள்ள சிறந்த கருத்துக்களை போதித்து அறிவுச் செல்வத்தை வளம் பெறச் செய்யும் பத்திரிகை ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா.

இப்பொழுது நகர்புறங்களில் வாழ்ந்து நமக்கும் குழந்தைகளுக்கும் தெய்வீக, ஆன்மீக விஷயங்களை உணர்த்த நம் தாத்தா பாட்டி கூடயில்லாத குறையை இப்பத்திரிகை நீக்குகிறது. இப்பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வருவதால் பொழுதுபோக்காக மட்டும் அமையாமல் அறிவு வளர்ச்சி பெறுவதுடன் மறந்து கொண்டுவரும் நம் பூர்வீக கலாசார வாழ்வின் சிறப்பும் நமக்குத் தெளிவாய் புலப்படும்.

இன்றே உங்கள் சந்தா தொகையை
மணி ஆர்டர் மூலம் அனுப்புங்கள்.

வருடச்சந்தா ரூ. 10/-
ஆறுமாதம் ரூ. 5/- தனிப்பிரதி ரூ. 1/-

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
7, டாக்டர் ரங்காச்சாரி ரோடு,
சென்னை-18

நம் கலாச்சார ஒழுக்கத்திற்கு
புத்துயிர் அளிக்க
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா வாசியுங்கள்



சாங்கோபாங்கமாக...

'ஊரூர்' என்ற பழம் பெயரை உதறி யெறிந்துவிட்டு, 'சாஸ்திரி நகர்' என்ற புதுப் பெயரைச் சூட்டிக் கொண்டிருக்கும் நகர்ப் புறக் 'காலனி' ஒன்றின் நவீனமான வீட்டில் போய்ப் படியேறி, கதவைத் தட்டுகிறோம். வேலைக்காரி ஒருத்தி வந்து கதவைத் திறக்கிறாள். ஒரு பெயரைச் சொல்லி "இருக்கிறாரா?" என்று கேட்கிறோம். தலையசைக்கும் வேலைக்காரி, முன்ஹாலில் நம்மை உட்கார வைத்துவிட்டு, நம் பெயர்ச் சீட்டை வாங்கிக் கொண்டு மேலே போகிறாள்.

அந்த ஹாலை ஒரு முறை நோட்டம் விடுகிறோம். "பளபள" வென்று மூன்றடி இடத்தை அடைத்துக் கொண்டு நிற்கும் ரேடியோகிராம்; இந்தப் பக்கம் திரும்பினால் ஒரு கண்ணாடி பீரோ, பல கலைப்பொருள்கள் அதிலே இடம் பிடித்துக்கொண்டிருக்கின்றன. மேல் தட்டிலே ஒரு நவீன பாணி சிற்பமும் காணப்படுகிறது. சுவர்களிலே அப்போது தான் பறித்து வந்த மலர்களைப் 'பிரேம்' போட்டு மாட்டி வைத்திருக்கிறார்களோ என்று எண்ணும்படி மலர்களின் படங்கள் கண்ணைக் கவர்கின்றன. தோட்டத்துப் பக்கமிருந்து வரும் பூங்காற்று ஜன்னல் திரையைச் சீண்டி விட்டு விட்டு நம்மை வந்து தழுவுகிறது. காலுக்கு இதமாகத் தரை விரிப்பு; கண்ணுக்கு இதமாகக் காட்சிகள்; மனத்துக்கு இதமாகச் சூழ்நிலை. இவற்றில் நாம் வியந்திருக்கும் போதே வணக்கம் தெரிவித்துக் கொண்டே மாடியிலிருந்துஇறங்கி வருகிறார் ஒருவர்.

ஆறடி உயரமும், சந்தன நிறமும், முகத்தில் புன்னகையுமாக நிற்பவர் வீட்டு வசதி போர்டின் தலைவரான திரு பாங்கோ என்பதுடன் அவர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதையும் தோற்றத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

பஞ்சாப் பல்கலைக் கழக எம். எஸ். ஸி. (விலங்கியல்) பட்டதாரியான திரு பாங்கோ 1956ல் முதன் முதலாகப் பணியேற்றது சிம்லாவில். வேலை: கல்லூரி விரிவுரையாளர். அந்த ஆண்டிலேயே ஐ. ஏ. எஸ். தேர்வு எழுதி வெற்றி கண்ட இவர் ஆரம்பகாலப் பயிற்சிக்குப் பிறகு பதவி யேற்றதோ, கடலூரில், உதவி கலெக்டராக. அந்த ஸ்தானத்தைக் கிட்டத்தட்ட மூன்றாண்டு காலம் வகித்த பின்னர், மதுரையில் முனிசிபல் கமிஷனராகவும் இருந்துவிட்டு, இங்கே வந்திருக்கிறார் இவர்.

எத்தனை பெரிய நல்ல வேலையிலிருந்தாலும் 'என்ன வேலை இது! சனியன்!' என்று அலுத்துக் கொள்கிற ஆசாமிகள் யாரேனும் இருந்தால் அவர்கள் திரு பாங்கோவை ஒரு முறை போய்ப் பார்த்துவிட்டு வந்தார்களானால் அடியோடு மாறிப் போவார்கள் என்பது நிச்சயம். சப்-கலெக்டராக இருந்த போதும் சரி, முனிசிபல் கமிஷனராக இருந்த போதும் சரி, அவருக்கு இருந்த உற்சாகம் இன்று 'ஸ்கீம்'களையும், 'லே-அவுட்'களையும் கையாளும் போதும் கொப்பளிக்கிறது அவரிடம். வீட்டு வசதி போர்டாரின் சாதனைகளெல்லாம் அவரது நாவின் முனையில் காத்திருக்கின்றன. எந்த 'ஸ்கீமை'ப் பற்றிய விவரங்கள் வேண்டும் உங்களுக்கு? 'எல். ஐ. ஜி.'யா, 'எம். ஐ. ஜி.'யா? அல்லது வீட்டு வசதி போர்டார் எங்கெங்கே எவ்வளவு நிலத்தை வளைத்துப் போட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வேண்டுமா? 'கேளுங்கள், கொடுக்கப்படும்' என்கிறார் இவர்.

'எட்டடிக் குச்சுக்குள்ளே எத்தனை நாட்கள் குடியிருப்பேன்?' என்று முனகிக் கொண்டு வருபவர்களை யெல்லாம் பதிவு செய்து கொண்டு, சீட்டுக் குலுக்கிப் போட்டு வீடுகளைப் பங்கிட்டுத் தரும் முறையை அவர் விளக்கிக் கொண்டிருக்கும்போதே 'டாடி!' என்று அழைத்துக் கொண்டே ஓடி வரும் துறுதுறுப்புக்காரப் பயல் ஒருவன், திரு பாங்கோவின் மடியிலேறி அவர் கழுத்தை அணைத்துக் கட்டிக் கொள்கிறான். "கோ டு மம்மி!" என்று அவர் அன்பாகக் கூறி அவனை இறக்கி விடுகிறார். அந்தப் பயலோ இரண்டு பத்துப் பைசா நாணயங்களை மேலே தூக்கிப் போட்டு அம்மானை யாடுகிறான். கூடை நாற்காலிகளைப் பலத்த ஓசையுடன் இப்படியும் அப்படியுமாக நகர்த்துகிறான். வேறு சில நவீன மடக்கு நாற்காலிகளை 'மடே'ரென்று அடித்து மூடுவதுடன் இலேசாக அடியும் பட்டுக்கொள்கிறான். அவனை அன்புடன் அணைத்துச் சமாதானப்படுத்திக் கொண்டே அவர் சொல்கிறார்:

"பொழுது போக்கா? அப்படி ஒன்றுமே கிடை

திரு பாங்கோ



யாது...ஆபீஸ் விட்டால் நேரே வீடு! ரொம்பவும் அவசியமானாலொழிய பார்ட்டி, டின்னர், என்று போவது கூடக் கிடையாது...காரணம் என் குழந்தைகள் மீதிருக்கும் அன்புதான்!''

முன்பெல்லாம் பொருளாதாரம், அரசியல் தத்துவம் ஆகிய இரு பிரிவுகளையும் சேர்ந்த எந்தப் புத்தகமாக இருந்தாலும் கரைத்துக் குடித்துவிடும் ஆர்வம் கொண்ட இவர் இன்று அதற்கு நேரமில்லையே என்று வருத்தப்பட்டாலும் தமக்குப் பிடித்தமான தோட்டக் கலையில் ஈடுபடுவதற்காவது நேரம் கிடைக்கிறதே என்று சந்தோஷப்படுகிறார்.

திருச்சி, ஸ்ரீரங்கம், பழனி, மதுரை, ராமேசுவரம், தஞ்சாவூர், திருப்பதி முதலிய ஊர்க் கோயில்களுக்குச் சென்றிருக்கிறார். எனினும் ''கடலூரிலேயே இருந்தும் சிதம்பரம் கோயிலுக்குப் போக முடியாமல் போய் விட்டதே!'' என்று வருத்தம் தெரிவிக்கிறார்.

தமிழ் நன்றாகப் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டிருக்கும் திரு பாங்கோ, தமிழ்ப் படங்களையும் பார்த்து ரசித்திருக்கிறார். ஆனால் இப்போதெல்லாம் அவ்வளவாகப் பார்ப்பதில்லை. காரணம்: 1. தமிழ்ப் படங்களின் நீளம்; 2. உணர்ச்சிமிக்க வசனம் என்ற பெயரில் நடிக–நடிகையரின் கூச்சல்.

'சேருவது இனம்' என்ற கொள்கை இவருக்குத் துளிக்கூடப் பிடிக்காது. வடக்கேயிருந்து இங்கே வருபவர்கள் ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு ஒரு கூட்டுப் பறவைகளாக இருப்பதும், தெற்கேயிருந்து வடக்கே போகிறவர்கள் 'மதராஸி அஸோஸியேஷன்' அமைத்துக் கொள்வதென்பதும் இவருக்குப் பிடிக்காத ஒன்று. ''நாம் எங்கே வசிக்கிறோமோ, அந்த இடத்து மக்களின் மொழியைக் கற்றுக் கொண்டு, அவர்களுடன் ஒட்டி உறவாட முயல வேண்டுமே தவிர, ஒதுங்கி நிற்கக் கூடாது'' என்கிறார்.

''கட்டுரையுடன் பிரசுரிக்க உங்களுடைய போட்டோ ஒன்று வேண்டுமே?''

''பார்த்தீர்களா, மறந்தே போய்விட்டேன்.... போட்டோ எடுத்துக் கொள்வதென்பது எனக்குப் பிடிக்காத 'அயிட்டங்'களில் ஒன்று...''

இருக்கலாம், ஆனால் பத்திரிகையாளர்கள் 'சரி' என்று கேட்டுக் கொண்டு சும்மா வர முடியுமா?

—முருந்தன்



சர்வதேச மன்னிப்புச் சங்கம்

'சென்யா பாலவ்'வை மேற்கு நாட்டு மருத்துவர் ஒருவர் பரிசோதிக்க, சோவியத் அரசு அநுமதிக்க வேண்டும் என்று, 'சர்வதேச மன்னிப்புச் சங்கம்' கேட்பது மிகவும் திமிரானது என்று ரஷ்ய நாட்டு அரசாங்கப் பத்திரிகை 'இஸ்வெஸ்தியா' எழுதியது. யார் அந்த சென்யா பாலவ்? என்ன அந்தச் சர்வதேச மன்னிப்புச் சங்கம்?

செ ன் யா பாலவ் கோசிஜினுக்கும், பிரஸ்நோவுக்கும் ஜ ன நா ய க ம் பற்றி அறிவுரை கூறிக் கடிதம் எழுதப் போக, அதற்காகப் 'பைத்தியம்' என்று முடிவு கட்டப்பட்டு இன்று பைத்தியக்கார விடுதியில் வாடுகிறார்.

உண்மையிலேயே அவர் பைத்தியமா என்பதைக் கண்டறிய மேற்கு நாட்டு மருத்துவர் ஒருவரை அநுமதிக்க வேண்டும் என்று கேட்கின்ற சர்வதேச மன்னிப்புச் சங்கத்தின் கொள்கை இதுதான்: மனத்துக்குச் சரி என்று பட்ட கருத்தைப் பலாத்காரத்துக்குத் தூண்டாத வகையில் வெளிப்படுத்திய காரணத்துக்காகப் பல நாட்டுச் சிறைகளில் வாடும் கைதிகளின் விடுதலைக்காகப் பாடுபடுவது.

பீட்டர் பெனன்ஸன் என்ற 45 வயது பாரிஸ்டர் தலைமையில் லண்டன்மாநகரைத் தலைமைப் பீடமாகக் கொண்டு இயங்கும் இந்தச் சர்வதேச மன்னிப்பு சங்கம் ஆண்டொன்றுக்குச் செலவிடும் தொகை 50,000 டாலர்கள். 1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இச் சங்கத்துக்கு இருபதுக்கு மேற்பட்ட நாடுகளில் 430 தொண்டர் படைக் குழுக்கள் உள்ளன.

இச்சங்கத்தின் முக்கிய வழக்குகளில் சில:

1. கொலைக் கருவிகளை ஏந்துவது பாவம் என்று கருதுகின்ற 'நாசரேன்' என்ற மதத்தைச் சேர்ந்தவன் 'பிலிஜோசெ பிலிப்போவிக்' என்ற 21 வயது இளைஞன். அவன் யுகோஸ்லாவிய ராணுவத்தில் சேர மறுத்தான். அதனால் 'கோலி ஓடக்' என்னும் தீவுச் சிறையில் அடைக்கப்பட்டு வாடுகிறான்.

2. கினி நாட்டு ஜனாதிபதியின் கல்விக் கொள்கையை 'கௌமாண்டிய கெய்டா' என்ற பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவர் விமர்சனம் செய்தார். அதற்காக 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ளார்.

3. 20 ரோமன் கத்தோலிக்கப் பாதிரிகளையும், 50 தொழிலாளர்களையும் 'சர்க்காருக்கு எதிராக'ப் போராடியதற்காக ஹங்கேரி அரசாங்கம் கைது செய்துள்ளது. இவ்விஷயம் குறித்து ஹங்கேரியக் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் விவாதிக்க 'லார்ட் ஜிப்போர்ட்' என்பவரை இச்சங்கம் அனுப்பியது.


4. ரொடீஷியாவை விட்டு வெளியேறும்படி 'லண்டன் அப்சர்வர்' நிருபருக்கு ரொடீஷிய அரசு உத்தரவிட்டபோது அதை எதிர்த்து வழக்காட இச் சங்கத்தின் தலைவர் பீட்டர் பெனன்சன் ரொடீஷியா சென்றார்.

செக்கோஸ்லோவாக்கிய நாட்டில் 14 ஆண்டுகள் வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டிருந்த 'ஜோசப் பெரான்' பாதிரியாரின் விடுதலை இச் சர்வதேச மன்னிப்புச் சங்கத்தின் வெற்றியாகும். — ஆதாரம்: 'டைம்'

தகவல்: இராசமாணிக்கம், பி.ஏ.,பி.எல்.




ஆவலைத்
தூண்டும்
சுவை!
காமதேனு
வனஸ்பதி
ஒரு சிறந்த சமையல் சாதனம்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
Criterion-MC-912



திருமுருக கிருபானந்தவாரியார்

21. திண்ணப்பர் கண்ணப்பரானார்

வைகறையில் புள்ளினங்கள் ஒலித்தன. கண் துயிலாத வீரராகிய திண்ணனார் அது கேட்டு, ''இனி எம்பெருமானுக்கு அமுது கொண்டு வருவோம்'' என்று சிறிது இருள் இருக்கும்போதே வள்ளலைத் தொழுது நீங்கினார்.

கதிரவன் உதயமானான். நாடோறும் சிவாகம நெறிப்படி திருக்காளத்தியப்பரை வழிபாடு புரியும் சிவகோசரியார், முறைப்படி முழுகி, திருமஞ்சனநீர், மலர், திருவமுது முதலியவைகளைச் சுமந்து கொண்டு, தேவ தேவர் முன் வந்தார். பெருமான் திருமுன் வெந்த இறைச்சியும் எலும்பும் இருப்பதைக் கண்டு நடுநடுங்கினார். ''எம்பெருமான் திருமுன் இந்த அநுசிதங்களைச் செய்தவர் யாரோ?'' என்று பெரிதும் வருந்தினார். இறைச்சித் துண்டுகளையும், செருப்படியையும் திருவலகால் மாற்றினார். பொன்முகலி நதிக்குச் சென்று மீண்டும் முழுகி வந்தார். இறைவர் சந்நிதியில் பழுது நேர்ந்தது குறித்துப் பவித்திரம் புரிந்தார். பூசனை செய்து தொழுதார். பின்னர் தமது தவ வனம் சென்றார்.

வானவர் போற்றும் கானவர் பெருமானாகிய திண்ணனார் தனியே வேட்டையாடினார். பன்றி, மான், கடமை முதலிய விலங்கினங்களை எதிர்த்தும், ஒளிந்து நின்றும், அவைகளின் குரல்போல் கூப்பிட்டும் கொன்று குவித்தார். தேக்கிலைகளைத் தைத்துக் கல்லைகளாகச் செய்தார். தீக்கடைக் கோலால் தீயை வளர்த்தார்; கொன்று குவித்த விலங்கினங்களின் தசைகளை அம்பில் கோத்துக் காய்ச்சி நாவினால் சுவை கண்டு அவைகளைக் கல்லையிலிட்டார்; கோற்றேனை அதில் பிழிந்தார். திருமஞ்சன நீரும், திருப்பள்ளித் தாமமும் முன்பு போல் வாயிலும் தலையிலும் கொண்டு, திருக்காளத்தி மலை ஏறினார். அங்கு அந்திவண்ணர் சந்நிதியில் முன்பு போல் மலர்கள் சிந்தியிருப்பதைக் கண்டார். அவற்றைத் திருவடியால் நீக்கினார்; சுவாமிக்கு வாய் நீரால் திருமஞ்சனம் செய்தார்; தலைமயிரில் உள்ள பூவை உதிர்த்தார்; ஊனமுது கல்லையுடன் வைத்து, ''சுவாமி! இது முன்னையிலும் நல்லது. பன்றி, மான், கடமை முதலியவற்றின் இறைச்சி; அடியேனும் சுவை பார்த்தேன். தேன் கலந்தது; தித்திக்கும்; அமுது செய்யும்'' என்று வேண்டினார்.

இவ்வாறாக, திண்ணனார் பகலில் வேட்டையாடி இரவில் காவல் புரிந்து இறைவருக்கு நாடோறும் பூசனை புரிய வரும் சிவகோசரியார் அங்கு அநுசிதம் செய்யப் பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்துவார்; அவற்றை அகற்றிப் புண்யாகவசனம் புரிவார்.

திண்ணனார் ஊனமுது படைத்ததும், வாய்நீர் உமிழ்ந்ததும், செருப்பணிந்த காலால் சிவலிங்கத்தைத் தீண்டியதும் தவறாகாவோ என்று வினவலாம். பேய் பிடிபட்டார் செயல் யாவும் பேயின் செயலாவது போல், அன்புமயமாகிய திண்ணனாருடைய செயல் யாவும் சிவன் செயலேயாகும்.

திண்ணனாரின் செயலைக் குறித்து நாணனும் காடனும் நாகனிடம் முறையிட்டனர். தனக்கு நெடுநாட்கள் மகவின்றித் தளர்ந்த வயதில் கந்தவேள் கருணையால் அவதரித்த புதல்வன் இவ்வாறு தேவ மயக்கம் கொண்டதையறிந்து நாகன் மிகவும் வருந்தினான். தேவராட்டியுடனும் ஏனைய பரிவாரங்களுடனும், திருக்காளத்திமலை வந்து திண்ணனாரைக் கண்டான். திண்ணனாரோ இவர்களைக் காணவில்லை. அவருடைய நாட்டம் முழுதும் இறைவர் மீது பதிந்திருந்தது. ''மகனே! என் செல்வமே! இது என்ன மயக்கம்? உன் அன்னை அழுகின்றாள். நீ வேடர் குலத் தலைவன் அல்லவா? ஊருக்கு

வா'' என்று பலப்பல கூறி அழைத்தான். ஆனால் அவர் கூறியவை யாவும் திண்ணனார் செவியில் விழவில்லை. அவனைக் கண்ட நாகன், ''இவன் நம் வசமாக மாட்டான்'' என்று தன்னுடன் அழைத்துச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு அங்கிருந்து நீங்கினான். ஏனைய பரிவாரங்களும் அவனைத் தொடர்ந்து சென்றன. திண்ணனாரோ உடல் ஒன்று உண்டு என்ற அறிவும் இருவினையும் மும்மலமும் நீங்கி அன்பின் பிழம்பாய்த் திகழ்ந்தார்.

நான்கு நாட்கள் சென்றன. அன்புமயமாய திண்ணனார் ஐந்தாவது நாள் அதிகாலை வேட்டையாடச் சென்றார். வழக்கம் போல் சிவகோசரியார் வந்து பவித்திரஞ் செய்து சிவாகம விதிப்படி பூசனை புரிந்தார். பூசை முடிந்த முடிவில், ''ஆலமுண்ட நீலகண்டரே! இவ்விடம் நாடோறும் உமது திருமுன் எலும்பும் இறைச்சியும் இட்டு அநிதம் செய்பவர் யாரோ? அவர் இன்னார் என்று அறியமுடியவில்லை. இதனைத் தேவரீர் திருவுள்ளம் பொறுத்துக் கொண்டிருப்பது முறையோ? எம்பெருமானே! இத் தீமையை ஒழித்தருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்து கொண்டார்.

அன்றிரவு சிவகோசரியார் கனவில் சிவபெருமான் தோன்றினார். ''அன்பனே! நம்மிடம் வந்து பூசிப்பவனை வேடன் என்று எண்ணாதே. அவனுடைய செயல்களைக் கூறுவோம்; கேள்.


அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலைஇவ்வா
றறிநீ''என் றருள்செய்வார்

''அவனுடைய வடிவம் முழுவதும் நம்மிடத்து வைத்த அன்பே. அவனுடைய அறிவு முழுவதும் நம்மையறியும் அறிவே. அவனுடைய செயல்கள் எவையாயினும் அவை நமக்கு இனியனவே. திருமலையிலே அவன் வந்து பூசை செய்யு முன் நம்மீதுள்ள பழங்களையும், பூக்களையும் நீக்கும் பொருட்டு, அன்பு வெள்ளம் கால் பெருகியது போல், விழும் செருப்படி குமரனது மலரடியினும் இனிமையாக இருக்கின்றது. உருகிய அன்பு ஒழிவின்றி நிறைந்த அவன் வாயினிற் கொணர்ந்து உமிழும் தண்ணீர் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களினும் புனிதமானது. அவன் தலைமயிரில் செருகிக் கொண்டு வந்து சாத்தும் மலருக்கு மாலயனாதி வானவர் சாத்தும் எம்மலர்களும் இணையாகா. வெந்த ஊனைச் சுவை பார்க்கும் பொருட்டு மென்று பார்த்து இனியன என்று தேர்ந்து அவன் கொணர்ந்து இடும் ஊனமுது யாக அவியினும் எனக்கினியது. அவன் கூறும் அன்புமொழிகள் முனிவர்கள் கூறும், வேதம் மந்திரம், துதி முதலியவற்றினும் இனியவை. நாளை அவனுடைய செயலை உனக்குக் காட்டுவோம். நீ ஒருபுறம் ஒளிந்திரு. அவனுடைய அன்பு முழுவதையும் காண்பாய்'' என்று அருள் புரிந்து மறைந்தருளினார்.

அருணோதயமாயிற்று. சிவகோசரியார் பொன்முகலி நதியில் முழுகி, திருக்காளத்தி மலைமிசை ஏறிப் புரம் எரித்த புண்ணியரைப் பூசித்தார். அதன் பின் இறைவர் கனவில் தோன்றி அருளியவாறே பின்புறமாக ஒளிந்திருந்தார்.

அன்று திண்ணனார் வேட்டையாடி, ஊனமுதும் திருமஞ்சன நீரும், பூவும் வழக்கம் போல் எடுத்துக் கொண்டு திருக்காளத்தி அண்ணலிடம் வந்து கொண்டிருந்தார். ''இன்று அதிக நேரம் தாமதித்து விட்டேன். எம்பெருமான் பசித்திருப்பாரே?'' என்று எண்ணி விரைவாக வந்து கொண்டிருந்த அவருக்குப் பல தீய சகுனங்கள் எதிர்ப்பட்டன. ''அந்தோ! எம்பெருமானுக்கு என்ன தீங்கு நேரிட்டதோ?'' என்று வருந்தி ஓடி வந்தார். சிவபெருமான் தமது ஒரு திருக்கண்ணில் உதிரம் பெருகுமாறு செய்து கொண்டார். அதனைத் தொலைவிலேயே கண்ட திண்ணனார் ஓடி வந்தார். சுவாமியின் திருக்கண்ணிலிருந்து உதிரம் வருவதைக் கண்டு ''அந்தோ'' என்று அலறினார். மயங்கி வீழ்ந்தார். அவர் வாயினில் கொண்டு வந்த அபிஷேக நீர் சிந்தியது; கையிலிருந்த ஊனமுதும் வில்லும் வீழ்ந்தன; தலையிலிருந்த மலர்கள் சிதறின.

சிறிது நேரம் சென்றதும் உணர்ச்சி பெற்று எழுந்த திண்ணனார் பெருமான் உதிரத்தைத் துடைத்தார். ஆயினும் உதிரம் பெருகுவது நின்றபாடில்லை.



இரும்புப் பெட்டி பிடியில் தொங்கவிடப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கிறார்:

"உங்கள் கம்பெனி அரம், சுத்தி எல்லாம் பிரமாதம். உங்கள் கம்பெனி இரும்புப் பெட்டியை உடைக்க ஐந்தே நிமிடங்கள்தான் பிடித்தது. பணமும் கணிசமாகக் கிடைத்தது."

— பக்காத் திருடன்.

□ ■ □ ■ □ ■ □ ■ □ ■ □

திண்ணனார் அறிவிழந்து வீழ்ந்தார். பின்னர் தேறி எழுந்தார். "சுவாமிக்கு இத்தீமையைச் செய்தவர் யாரோ?" என்று நாலா பக்கங்களிலும் பார்த்தார். வில்லேயும் அம்பையும் எடுத்துக் கொண்டார். "இந்த மலேயில் எனக்கு மாருகக் கொடிய இச் செயலேச் செய்த வேடர்களும் இருக்கின்றனரோ? இச் செயலேச் சிங்கம் முதலிய பொல்லாத விலங்குகள் செய்தனவோ? யார் செய்த செய்கை என்று புரியவில்லேயே" என்று எண்ணி அந்தப்பெரிய குன்றின் சாரலில் நெடுந்தூரம் தேடிச் சென்ருர். ஆயினும் எங்கும் வேடரையோ விலங்குகளேயோ காணவில்லே. மீண்டும் இறைவர்பால் வந்தார். கரை காணுத கவலேயால் வாடிக் கண்ணுதலார் பாதம் பற்றித் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிந்து கதறினர். "சுவாமிக்கு ஏற்பட்ட இப் புண்ணுக்கு மருந்து தேடிக் கொண்டு வருவேன்" என்று கூறி மீண்டும் வெளி சென்ருர். வேறு வேறு வனங்களுக்குச் சென்று அரிதில் தேடிய மூலிகைகளேக் கொண்டுவந்து பெருமானுடைய கண்ணில் பிழிந்து வார்த்தார். மருந்தீசராகிய மணிகண்டர் கண்ணில் ஒழுகும் புண்ணீர் அம்மருந்திளுல் நிற்கவில்லே.

'ஊனுக்கு ஊன் உற்ற நோய் தீர்க்கும்' என்ற பழமொழி திண்ணனாரது நினேவில் தோன்றியது. 'என்னுடைய கண்ணே இடந்து அப்பினுல் எந்தை யார் கண்ணுக்கு மருந்தாகி உதிரம் நிற்கும்' என்று துணிந்தார். அம்பினே யெடுத்து தமது வலக் கண்ணே அநாயாசமாக அப்படியே அகழ்ந்து அதனேச் சுவாமியின் கண்ணிடத்தில் அப்பினர். உடனே வடிந்து கொண்டிருந்த குருதி நின்றது. அதனேக் கண்ட திண்ணனார் நிலத்தினின்றும் துள்ளிக் குதித்தார். மலே போன்ற தமது தோள்களேக் கொட்டிக் கொண்டார்; கூத்தாடினர். "நான் செய்த இந்த யோசனேயே நன்று; நன்று" என்று கூறிக்கொண்டு சிரித்து உன்மத்தரைப் போலானர்.

இறைவர், இப்போது தமது இடக் கண்ணில் உதிரம் வருமாறு செய்தார். திண்ணனார், "ஆ! கெட்டேன்; ஒரு கண்ணில் பெருகிய குருதி நின்றுலும், மற்றொரு கண்ணில் உதிரம் வருகிறதே! அதனுல் என்ன? இதற்கு நான் அஞ்சேன். ஏனெனில் மருந்தைத் தெரிந்து கொண்டேன். எனக்கு இன்னும் ஒரு கண் இருக்கிறது. அக் கண்ணேயும் இடந்து அப்பி விடுகிறேன்" என்று எண்ணினர். அவ்வாறு தமது கண்ணே இடந்தால் இறைவர் கண் இருக்குமிடம் தெரியாதே என்று சிந்தித்தவராய்த் தமது இடக் காலே இறைவருடைய கண்ணுக்கு அருகில் ஊன்றிக் கொண்டு, ஒரு கணேயை எடுத்துத் தமது கண்ணில் ஊன்றினர் திண்ணனார்.

செங்கண்வெள் விடையின் பாகர்,
திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர், திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அம்பால்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்கமுன் நடுக்கு 'நாக
கங்கணர் அமுத வாக்குக்
"கண்ணப்ப நிற்க" என்ற

கருணேயே வடிவான தருமவிடையுடைய தயாபரர் திண்ணனாருடைய திருக்கையைத் தகைந்து, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!" என் கூறித் தடுத்தருளினர்.

கண்ணனும் கண்ணப்பரும் கண்ணிடந்து கண்ணுதற் கடவுளை வழிபட்டவர்கள். திருமால் திருவீழிமிழலையில் ஆயிரம் தாமரை மலர்களால் நாள்தோறும் ஆயிரம் நாமங்களைக் கூறிச் சிவபெருமானை அன்புடன் அர்ச்சித்து வந்தார். சிவபெருமான், ஒரு நாள் ஒரு மலர் குறையுமாறு செய்தார். அதற்காகத் திருமால் வேறு ஒரு மலரைப் பிய்ச்சினாரில்லை. வாளா மந்திரம் கூறினாரில்லை. தமது ஒரு கண்மலரைத் தோண்டி எடுத்து, இறைவரை அன்புடன் அர்ச்சித்தார். அவருடைய அன்புக்கு மகிழ்ந்து ஐயன் திருமாலுக்குக் கண்ணன் என்ற நாமத்தையும் சக்கரத்தையும் தந்தார் என ஓர் ஐதிக்யம் உண்டு.

நக்குலா மலர் பன்னூறு
கொண்டுநன் ஞானத்தோடு
மிக்க பூசனைகள் செய்வான்
மென்மலர் ஒன்று காணு
தொக்குமென் மலர்க்கண் என்றங்
கொருகண்ணையிடந்தும் அப்பச்
சக்கரங் கொடுப்பர் போலுஞ்
சாய்க்காடு மேவினாரே- அப்பர்

திண்ணனாரும் கண்ணிடந்து அப்பி இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றார். அந்த அருளின் தன்மையையும் அப்பர் கூறுகிறார்.

குலப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலை இறைஞ்சிப் பாரம்
துவர்ப் பெருஞ் செருப்பாய்
நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணை யிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவினாரே!

கண்ணிடந்தப்பிய திருமால் கண்ணனாயினார். திண்ணனாரோ கண்ணப்பராயினார்.

திண்ணனார் கண்ணிடந்து அப்பியதையும், சிவபெருமான் நமது திருக்கரத்தால் தகைந்து, ''கண்ணப்பா!'' என்று அழைத்ததையும் சிவகோசரியார் கண்டார். மாலயனாதி வானவர் பூமழை பொழிந்தனர். மறைகள் ஆர்த்தன.



கானவர் பெருமானார்தம்
கண்ணிடந் தப்பும்போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்;
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப;

''கண்ணப்பா! என் வலத்தில் என்றும் மாறுபாடிலாது நிற்பாய்'' என்று அருள் புரிந்தார் காளத்தியப்பர். இதனினும் சிறந்த பேறு உண்டோ? கண்ணப்பர் காளத்தியப்பர் அருகில் நிலை பெற்று நிற்பாராயினார். (தொடரும்)



எங்கெங்கிருந்தெல்லாமோ அவை **வந்தன.** குழந்தைக்குப் பரிசுகளை ஏந்தி. 'என்னுடைய பலத்தை **உனக்குக்** கொடுக்கிறேன்' என்றது யானை. 'என்னுடைய சுறுசுறுப்பைத் தருகிறேன்' என்றது மான். 'வலுவான என் பற்கள்' என்று முன்வந்தது முயல். 'கூர்மையான பார்வை' என்றது மிஸ்டர் மியாவ். 'உறுதியான எலும்புகள்' என்று கர்ஜித்தது சிங்கம். 'நோய்களை எதிர்க்கும் சக்தி'யைத் தர முயன்றது கரடி.

'இந்த அதிசய அமுல் டின்னிலுள்ள ஆசிகள் அனைத்தையும் வழங்குகிறேன்' என்றது அறிவு முதிர்ந்த ஒரு குரல்.



அமுல் பால் உணவு குழந்தைகளுக்குத் தேவையான வைட்டமின்கள் நிறைந்தது.

இந்தியாவின் ஏகபோக விநியோகஸ்தர்கள்: VOLTAS வோல்டாஸ் லிமிடெட்.

ASP/ASF/51-TAM



வீணாகானம் தொடரட்டும்!

வி. ஆர். கிருஷ்ணய்யர்

“வீணாகானம் தொடரட்டும்” என்று ஆணையிட்டார் ஸ்ரீ ஜகத்குரு. கூடியிருந்த வேதியர்கள் அனைவரும் திகைப்புற்றனர். அப்போதுதான் ஸ்ரீசந்திரமௌளீசுவரரின் ஸ்படிக லிங்கத்துக்கு மகா சந்நிதானம் அபிஷேகம் செய்யத் தொடங்கியிருந்தார். வேதியர்கள் வேத மந்திரங்களை ஓத ஆரம்பித்திருந்தனர். அதுவரை அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வீணை இசையில் மனம் ஒன்றி அந்தத் திவ்வியநாதப் பிரம்மம் வழியாகப் பரம்பொருளின் அருளில் லயித்துக் கொண்டிருந்த ஸ்ரீ ஜகத்குரு அப்பேரின்பம் கலைய விரும்பவில்லை போலும்.

இது நடந்தது 1956ம் ஆண்டில். எங்களது இல்லத்துக்குச் சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் எழுந்தருளியிருந்தார். அன்று சுவாமிகளை மெய்ம்மறக்கச் செய்து வீணாகான மழை பொழிந்தவர் எங்கள் குருவாகிய பிரசித்திபெற்ற வீணை வித்துவான் திருவனந்தபுரம் ஸ்ரீ பரமேசுவர பாகவதர் ஆவார்.

பரமேசுவர பாகவதர் கேரளத்தில் புண்ணிய க்ஷேத்திரமாகிய வைக்கம் என்னும் ஊரில் 1888-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் தேதி ஒரு சங்கீத பாரம்பரியமுள்ள குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பாட்டனார் சுசீந்திரம் ஸ்தாணு பாகவதர், அஷ்டபதி, இராம நாடகப் பாடல்கள் முதலியவை பாடுவதில் புகழ் பெற்றவர். அவருக்கு அய்யா பாகவதர், பத்மநாப பாகவதர் என்று இரண்டு புதல்வர்கள். அய்யா பாகவதர்தான் இந்தக் குடும்பத்தில் முதலில் வீணையைக் கையாளத் தொடங்கினார். ஸ்ரீ பத்மநாப பாகவதர் தமையனாரிடம் கற்ற இசைக் கலையை மிகப் பெரிய வீணை வித்துவானாகிய ஸ்ரீ கல்யாண கிருஷ்ணய்யரிடம் நெருங்கிப் பழகி விருத்தி செய்து சாஸ்திர முறைப்படியானதும் சிறப்பும் அழகும் நிரம்பியதுமான ஒரு நடையினைக் கையாண்டு வந்தார். ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜாவால் வைக்கத்திலுள்ள பெருமை மிக்க மகாதேவர் ஆலயத்தில் வீணை சேவை செய்யும் பொருட்டு அமர்த்தப்பட்ட முதல் பாடகர் ஸ்ரீ பத்மநாப பாகவதரே. அவ்வூரில்தான் அன்னாரின் குமாரராகப் பிறந்தார் ஸ்ரீ பரமேசுவர பாகவதர்.

சங்கீத ஞானமும் ஆர்வமும் இளமையிலேயே பரமேசுவரரிடம் நிரம்பியிருந்தன. அவர் ஐந்து வயதிலேயே வீணைக் கலையைத் தம் தந்தையிடம் பயிலத் தொடங்கினார். இசைக் கலையின் மரபு, தூயநடை முதலியவற்றில் வழுவாது ஸ்வரங்களின் முழுமையிலும், தெளிவிலும் அதோடு இனிமையிலும் கவனம் செலுத்தி மிக விரிவாகவும் தீவிரமாகவும், ஒழுங்காகவும் பயிற்சி செய்து மூன்று காலங்களிலும் வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றார். தவிர, வைக்கத்தில் அஷ்டமித் திருவிழாவுக்கு வரும் முன்னணிப் பாடகர்களின் இசையைக் கேட்கும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டியது. பத்து வயதிலேயே வீணையில் ராகம், தானம், பல்லவி வாசிக்கும் திறமையை அடைந்து அந்தக் காலத்துச் சிறந்த பாடகர்களுக்கு இணையாக விளங்கினார். அவரது வீணை வாசிப்பில் பத்து கமகங்களும் மிகச் சிறந்த முறையில் இடம் பெற்றிருந்தன. வீணை இசையில் முக்கியமாகக் கருதப்படும் தானம் வாசிப்பதில் அவரது திறமை நிகரற்று விளங்கியது. சங்கீதத்தில் தம் உயர் நோக்கங்களையும் பாவனைகளையும் பழக்கத்தில் கொண்டு வந்து கேட்பவர் உள்ளத்தில் பக்தி நிரம்பிய ஓர் உணர்ச்சியை ஊட்டிப் பரவசம் அடையச் செய்தார் என்றால் மிகையாகாது.

ஸ்ரீ தியாகராஜரின் 'கொலுவமரெகதா', 'எதுடநிலிசிதே', 'எந்தவேடுகொந்து', 'எந்தரா நீதன', 'நினுவினு', 'நகுமோமு', 'சக்கனி ராஜ', வீணை குப்பையரின் 'கொனியாடின' ஸ்ரீ சுவாதித்திருநாள் மகாராஜாவின் 'பன்னகேந்திரசயன' என்ற இராகமாலிகை முதலிய பாடல்களை ஸ்ரீ பரமேசுவர பாகவதர் மிக அற்புதமாகக் கையாண்டு வந்தார். அவரது ஆற்றலை இசையுலகில் மாமேதைகள் பலர் புகழ்ந்துள்ளனர். பிரபல மேனாட்டு நாவலாசிரியர் ஸாமர்ஸெட்மாம் அவருடைய இசையின் இன்பலாகிரியில் ஆழ்ந்து மகிழ்ந்து பாராட்டி எழுதியுள்ளார்.


ஸ்ரீ பாகவதருக்குச் சீடர்களும் அன்பர்களும் நாடெங்கும் இருக்கின்றனர். பல குடும்பங்களிலும் இசை ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். போதனாமுறையின் சாஸ்திரிய கோட்பாடுகளை, வீணை இசைப் பயிற்சியிலும் அவர் கையாண்டு, அது ஒரு கடினமான படிப்பு என்னும் பயத்தை அகற்றி எளிதாகக் கற்றுக் கொள்ள முடியும் என்று நிரூபித்தார். இசைக் கலையின் நுட்பங்களைப் பற்றிய அவரது ஆழமான அறிவு, அவர் சங்கீத மாநாடுகளில் ஆற்றியுள்ள பல சொற்பொழிவுகளில் பிரகாசித்தது.

பாகவதர் சொந்தமாகச் சில அற்புதமான வர்ணங்களும் கீர்த்தனைகளும் இயற்றியுள்ளார். அவற்றுள் சில 'கதனகுதூகலம்', 'ஹம்சப்ரமரி' போன்ற அபூர்வ ராகங்களில் அமைந்திருக்கின்றன. தம் வீணைகளுக்கு மெட்டுப் பொருத்தும் நுட்பமான வேலையையும் மிகக் கவனத்துடன் தாமே செய்து உயிருக்குயிராய்ப் பாதுகாத்து வந்தார். அவர் ஒரு தடவை சீர்திருத்திய வீணை பதினைந்து வருடங்களுக்குக் குறையாமல் அப்படியே நல்ல நிலையில் இருக்கும்.

ஸ்ரீ பாகவதர் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர். நல்ல பழக்க வழக்கங்களும் நல்ல

பண்பும் அவரிடம் அமைந்திருந்தன. உள்ளமும் உடலும் எப்போதும் தூய்மையாக இருக்கும். வாழ்நாள் முழுவதும் வைக்கத்து அப்பனிடம் நீங்காத பக்தி கொண்டிருந்தார். இசையை ஒரு யோக சாதனையாகக் கொண்டவர் அவர். வாழ்வின் கடைசி நாட்களில் அவர் தம் கண் பார்வையை இழக்க நேர்ந்த போதிலும் வீணை வாசிப்பைக் கைவிடாமல் நடத்தி வந்தார். திருவனந்தபுரம் வானொலியில் வழக்கமாக நடைபெற்று வந்த அவரது வீணைக் கச்சேரி கடைசியாக 14–3–65 அன்று நிகழ்ந்தது. பின்னர் சில வாரங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார். 1–6–65 அன்று இறைவன் அவரைத் தம் அருகே அழைத்துக் கொண்டார். அன்னாரது புகழ் மங்காது காக்கும் பொருட்டு அவரது பாடல்களில் சிலவற்றின் ஒலிப்பதிவு நாடாக்களை நிரந்தரமாக எல்லாரும் கேட்டு இன்புற உதவும் வகையில் இசைத் தட்டுக்களாக்குவது இன்றியமையாததாகும். இப்பணியைச் செய்ய வானொலி அதிகாரிகளும் இசைத்தட்டுக் கம்பெனியாரும் முன்வருவார்களேயானால் அது, வீணையின் நாதத்தை உபாசிப்பவர்களுக்கும், ரசிப்பவர்களுக்கும் பேருபகாரமாய் இருக்கும். ஸ்ரீ பரமேசுவர பாகவதர் பரமனடியை அடைந்தாலும் அவர் விட்டுச் சென்ற மரபுப்படி என்றும் வீணாகானம் தொடரட்டும்.

தவறா...? இல்லை !



1942ல் நடந்த சுதந்திர இயக்கத்தின் பொழுது காந்தியடிகள் போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டு ஆகாகான் மாளிகையில் சிறைப்படுத்தப் பட்டிருந்தனர். அவர்களுக்குப் பொழுதே போகவில்லை. கவியரசி சரோஜினி தேவி, காந்திஜியிடம் சென்று, "பாபுஜி, பாட்மிண்டன் ஆட வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"பேஷா. வாருங்கள் விளையாடுவோம்" என்றார் காந்தியடிகள் மகிழ்ச்சியுடன்.

"உங்களுக்கு ஆடத் தெரியுமல்லவா?" என்றார் சரோஜினி தேவி.

"இதுவரை நான் பாட்மிண்டன் மட்டையைத் தொட்டதில்லை. ஆனால் மட்டை பிடித்து ஆடத் தொடங்கினால் தங்களை வெற்றி கொண்டு விடுவேன். சந்தேகமில்லை" என்றார் காந்தியடிகள்.

"அப்படியா? வாருங்கள் ஒரு கை பார்த்துவிடுவோம்!" என்றார் சரோஜினி தேவி.

உபகரணங்கள் வந்தன. விளையாட்டு மைதானம் தயாராகியது. இருவரும் கையில் மட்டையுடன் விளையாட்டு மைதானத்தை அடைந்தனர்.

அப்பொழுது சரோஜினி தேவிக்கு வலது கையில் சுளுக்கிக் கொண்டிருந்தது. அதனால் இடது கையில் மட்டையை ஏந்தியிருந்தார். அதைப் பார்த்துக் காந்திஜியும் இடது கையில் மட்டையைப் பற்றினார். சரோஜினி தேவிக்குச் சிரிப்பாக வந்தது. "உங்களுக்கு எந்தக் கையினால் மட்டையைப் பிடிக்க வேண்டும் என்று கூடத் தெரியவில்லையே! நீங்களா என்னை ஆட்டத்தில் ஜெயிக்கப் போகிறீர்கள்?" என்று கேலியாகக் கேட்டார்.

காந்தியடிகள் தம் கையையும் சரோஜினி தேவி கையையும் மாறி மாறிப் பார்த்தார். "ஏன், சரியாகத் தானே பிடித்திருக்கிறேன்? ஏன், நீங்களும்தான் இடது கையினால் பிடித்திருக்கிறீர்கள்!" என்றார்.

"எனக்கு வலது கையில் வலி. அதனால் இடது கையில் மட்டையை வைத்திருக்கிறேன்!" என்றார் சரோஜினி தேவி.

காந்திஜிக்கு வெட்கமாகத்தான் போய் விட்டது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் இடது கையினாலேயே ஆடத் தொடங்கினார்.

"இன்னும் நீங்கள் உங்கள் தவற்றைத் திருத்திக் கொள்ளவில்லையே பாபுஜி!" என்றார் சரோஜினி தேவி.

"சற்று முன்பு அது தவறாக இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது தவறில்லை. நீங்கள் இடது கையில் மட்டையை ஏந்தி வெகு சிரமப்பட்டு ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையில் நான் வலது கையில் மட்டையை ஏந்தி விளையாடினால், அது ஆண்மைக்கு அழகாகுமா? அப்படியே வெற்றியடைந்தாலும், அது வெற்றியாகுமா? ஒரு பெண்ணின் அசௌகரியத்தை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நான் ஒன்றும் விளையாட்டில் வெற்றி காண விரும்பவில்லை."

காந்தியடிகளின் இந்தப் பதிலைக் கேட்டுச் சரோஜினிதேவி வியப்பில் மௌனமானார்.

வெள்ளி விழா சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை 8

'இருள்'

மகரிஷி



"இந்தப் பூவைக் கொஞ்சம் தலையில் வச்சு விடுங்களேன்" — நாற்காலியில் உட்கார்ந்திருந்த கணவன் சாரங்களிடம் அந்த மல்லிகைச் சரத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய நிலையில் மண்டியிட்டு அமர்ந்தாள் வனஜா.

வெறுப்புத் தோய்ந்த விழிகளிடையே மனைவியின் தலையைப் பார்த்தான். பிறகு சுவாதீனமுள்ள வலது கையின் கண்டுவிரலால் விரல் அளவு மயிரிழையை இழுத்து அதனிடையே அவள் கொடுத்த பூச்சரத்தைச் சூட்டினான் சாரங்கன்.

கீழ்த் தாடையில் கையைக் கொடுத்துத் திருப்பி ஆசைதீர அந்த முகத்தைச் சில நிமிஷங்கள் பார்த்துப் பூரித்த நாட்களும் உண்டு. அது இப்பொழுது அல்ல. முன்பு அந்தப் பெருமையின் பூரிப்பு இன்று இருவரிடமும் இல்லை. அந்த நேசக் கரம் இன்று விரல் அளவு மயிரிழையைத் தொடுவதோடு நின்று விட்டது!

"ஆபீசுக்கு லேட்டாகலையா?" என்றான்.

"ஆமாம்."

"இவ்வளவு சீக்கிரமா?"

"மானேஜர் இன்னிக்குச் சாயங்காலம் வெளியூர் போகிறார். அதற்குள் அவருக்குத் தேவையான 'பைல்'களையெல்லாம் தயார் செய்து கொடுத்தாக வேண்டும்."

பற்றுதல் இல்லாத கேள்வி. பதிலும் ஏறத் தாழ அதே நிலையில் இருந்தது.

"உங்களுக்கு மத்தியானச் சாப்பாடெல்லாம் அதோ கூடத்தில் எடுத்து வச்சுட்டேன். தண்ணீர், தட்டு, மோர்... எல்லாம் இருக்கு. வெந்நீர் எடுத்து விளாவி வச்சுட்டேன். டவல், சோப்பெல்லாம் இருக்கு. நீங்கள் எதையும் தோய்க்கவேண்டாம். குளித்துவிட்டுக் குளியலறையிலேயே போட்டு விடுங்கள். சாயங்காலம் நான் வந்து தோய்த்து விடுகிறேன். இன்னிக்குக் கொஞ்சம் அவசரமாக ஆபீஸ் போக வேண்டியிருக்கு...."

பூவைத் தலையில் வைத்துக் கொண்ட வனஜா எழுந்து சுவர் ஓரமாக முன் வராந்தாவில் கிடந்த செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டே பேசினாள்.

அவள் பேசுவதை அவன்தான் கேட்டாக வேண்டும். காதில் படாதவன் போல் இருக்க முடியாது. ஏனென்றால், சிறியதான அந்தத் தனி வீட்டில் அவள் பேசுவதைக் கேட்க வேறு யாரும் இல்லை. மனத்தில் இருக்கின்ற வெறுப்புக்காக அவள் வார்த்தைகளை உதாசீனப்படுத்த அவனளவில் அவன் திராணியற்றவன்.

என்றுமே எதற்குமே அவனிடம் இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் பதில் வராது. இது அவளுக்கும் தெரியும். தூர நின்றோ, அல்லது நடுக் கூடத்தில் அமர்ந்திருக்கும் அவனுக்குப் பின்புறமாக நின்றோ அவளைச் சற்று நேரம் கண்கலங்கப் பார்ப்பான்.

நெடுந்தூர வாழ்க்கைப் பயணத்தில் இப்படி மறைவாக அவனுக்குள்ளே கண்ணீர் சிந்தக் கூடியதொரு நிரந்தரமான இருள் அவன் வாழ்வில் வந்தாகி விட்டது. இனி அந்த இருளில் அவன் ஒருத்தியாக மட்டுமே நடந்தாக வேண்டும். இந்த ஐந்தாண்டுகளில் வராத துணையா இனிமேல் வரப் போகிறது? இந்த ஐந்தாண்டுகளில் கூட வந்தவர்களை விட விட்டுச் சென்றவர்கள்தான் அதிகம். ஆதரவு காட்டியவர்களைக் காணோம். அனுதாபத்தோடு விடை பெற்ற வழிப் போக்கர்கள்தான் ஏராளம்.

ஒதுக்குப்புறமான வீடு. இனை று. பேச்சுத் துணைக்குக் கூட அருகில் நெருங்கி வர அஞ்சி ஓடுகிற அந்நியோந்நியம்! இந்த ஐந்தாண்டுகளில் எல்லாம் அவனுக்குப் புளித்து விட்டன; வெறுத்தும் விட்டன. வெறுத்தது இவை மட்டும்தானா? வாழ்வும் கூடத்தான்.

நிலையில் கணவன்வைத்து விட்ட பூவைத் தொட்டுச்



சரி செய்து கொண்டே வீட்டை விட்டு அலுவலகம் புறப்பட்டாள் வனஜா.

அலுவலகத்தில் அவள் நினைவெல்லாம் வீட்டைச் சுற்றியே இருந்தது. எப்பொழுதும் உள்ளதுதான் இது.

வாழ்க்கையில் வெறுப்பையும் வேதனையையும் அதிகரிக்கும் கணவன் மேல் இப்படியொரு பாசத்தின் தவிப்பு.

''மத்தியானம் சரியாகச் சாப்பிட்டீர்களா?'' — அலுவலகத்திலிருந்து வந்துவிட்ட வனஜா அறைக் கதவைச் சாத்திக்கொண்டு உடை மாற்றிய வண்ணம் உள்ளிருந்தபடியே கேட்டாள்.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைத் தாழ்த்தி, தன் கவனத்தை வெறுப்புடன் அவள் மறைந்து கொண்டிருந்தஅறைப் பக்கம் திருப்பினான்.

''என்னவோ சாப்பிட்டேன்'' என்றான். கண்களில் உள்ள பாவத்தைப் போலவே பதிலிலும் வெறுப்பு.

''சமையல் நன்றாக இருந்ததா? காலையில் ஆபீஸ் போகிற அவசரம்.'' பதிலுக்குக் காத்திராமல் பரபரவென்று பின்கட்டுக்குப் போய்விட்டாள்.

''ஆபீசுக்குப் போகிற அவசரமா உனக்கு? ஆபீஸுக்குப் போகிற திமிர்' என்று எண்ணிக் கொண்டே கையிலிருந்த புத்தகத்தைக் கீழே போட்டான் சாரங்கன்.

இரவு மணி பத்து இருக்கும்.

''வனஜா!'' என்று அழைத்துக்கொண்டு பகலில் இல்லாத குழைவோடு அருகில் வந்து நின்றான் சாரங்கன்.

எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் உடல்கள் தூர விலகி. ஒரே கூட்டினுள் இருந்து வாழ்ந்த போதிலும் இசைவுகளும், எண்ணங்களோடு இணைந்த மனங்களும் துருவங்களாக விலகிப் போய்க்கூட அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன.

''தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நான் என்னைத் தத்தம் செய்யத் தயாராக இருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் வாழ்வும் தாழ்வும் உங்களையே சார்ந்து நிற்கின்றன. ஆனால் இந்த நம் 'உறவு' நீடிப்பதன் முடிவைத்தான் என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.''

''எப்பொழுதும் புலம்புகிற உன் பழைய பிரலாபம்தான்'' — சாரங்கன் ஆத்திரப் பட்டான்.

''ஆத்திரப்படாதீர்கள். பழக்கம் என்பதைச் சுலபத்தில் அறுத்துக் கொள்ள முடியும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் சிரமப்பட்டாலும் சில பழக்கங்களைத் துண்டித்துக் கொண்டாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட பின் சபலத்துக்கு அடிமைப்பட்டுத் தவிப்பதை நான் வெறுக்கிறேன். இந்த ஜன்மத்து வாழ்வின நம்முடனேயே மாய்ந்து விடட்டும். நம் வம்சம் ஒன்று ஏற்பட்டு அதில் இது விட்ட குறையாகத் தொடர வேண்டாம்.'' — வனஜா தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் போய் உட்பக்கம் தாழ் போட்டுக் கொண்டு விட்டாள்.

வழக்கமாகக் கணவன் கையால் வைத்துக் கொள்ள வேண்டிய பூச்சரத்தை வைத்துக் கொண்டு எழுந்தாள் வனஜா.

''நான் போய் வரட்டுமா?''

சாரங்கன் பதிலொன்றும் பேசவில்லை. இரவு நிகழ்ச்சியின் சாயல் அவன் மனத்தை விட்டு அகலாத நேரம் அது.

''ஏன் இந்தப் போலி அன்பெல்லாம் என்னிடம் காட்டுகிறாய்? இப்படி என்னை வதைப்பதில் உனக்கொரு தனி ஆனந்தம். இல்லையா?'' சாரங்கன் ஏளனமாக நகைத்துக்கொண்டே கேட்டான்.

''போலி அன்பா?'' என்று கேட்ட வனஜா குமுறும் துயரத்தோடு அழுதுவிட்டாள். ''நான் காட்டுவது போலி அன்பா? எங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். அன்புக்கு அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? அன்பில் போலிக்கும் நிஜத்துக்கும் இருக்கிற வேறுபாடு எனக்குத் தெரியாது. ஆனால் உண்மையான அன்பென்றால் என்ன என்பது எனக்குத் தெரியும்'' என்றவள் அழுது கொண்டேதான் பேசினாள். இடையிடையே உள்நெஞ்சத்துக் குமுறல் சிரிப்பாக வெளிப் பட்டது.

''சரி, சரி. உங்களுடன் தர்க்கிக்க எனக்கு அவகாசமில்லை'' என்று சொன்னவள் கண்ணிரிடையே கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே மறுமொழி பேசாமல் புறப் பட்டு விட்டாள்.

இப்படி ஏற்படுகிற சந்தர்ப்பங்களில் எல்லாம் அவள் தன்னை அடக்கிக்கொண்டே பழக்கப்பட்டு விட்டாள். இப்படிப்பட்ட பழக்கம் இருப்பதால்தான் இன்றைய பரிதாபகரமான அவளது வாழ்வை ஓரளவு சீர்கெடாமல் காக்க முடிகிறது.

குமுற வேண்டிய இடங்களில் குமுறி, அடங்க வேண்டிய இடங்களில் அடங்கி, சிரித்து, சினந்து, குழைந்து குழைந்து சமாளிக்க வேண்டியவைகளைச் சமாளிக்க வில்லை யென்றால் சாரங்கனோடு அவள் நடத்துகிற வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்று விடுவாள். சாரங்கனுடன் நடத்துகிற வாழ்க்கைப் போராட்டத்தில் அவள் தோற்றாள் என்றால் அத்தோல்வி அவளுக்கு மட்டுமல்ல; அவனுக்கும் அது தோல்விதான்.

இறந்த காலம் என்பது இருவருக்குமே ஒரு வெறும் இன்ப நினைவுதான்.

நிகழ்காலம் என்பது அவளைப் பொறுத்த வரையில் அமைதியின்மை.

எதிர்காலம் என்பது அவர்கள் இருவரைப் பொறுத்தவரையில் சூனியம்.

''உண்மை அன்பாமே, உண்மை அன்பு. யாரிடம் கதைக்கிறாள்....'' குரூரமான நினைவுகளில் அதன் செயலும் சேர்ந்தது. மேஜை மேல் அவள் கொண்டு வந்து வைத்திருந்த தண்ணீர்ச் செம்பை ஆத்திரத்துடன் தள்ளிவிட்டான். தண்ணீரை நான்கு பக்கமும் சிதற அடித்துக் கொண்டு அது முற்றத்தில் போய் உருண்டு கிடந்தது. வில் வடிவத்தில் சிதறி இருந்த அந்த நீர்த் தாரை முற்றத்தில் விழுமுன் ஒரு சுழிப்புடன் முடிவடைந்திருந்தது. அதற்குள் தண்ணீர் தீர்ந்து விட்டதால் அதற்குப்பின் நீர்க்கோடு இல்லை.

அவள் தன்னை உதாசீனப்படுத்துவதாகச் சாரங்கன் நினைத்தான். இத்தவறான அநுமானத்தின் மேல் அவன் எழுப்பிக் கொண்டிருக்கிற கிலேசம் தோல்வி மனப்பான்மையின் முனைப்பில் ஜனித்ததுதான்.

அவளுடைய மௌனத்துக்கும், அவளுடைய ஆந்தரிகமான சோகத்துக்கும் ஆறுதல் வேண்டி அலைந்த காலங்களில் அவள் கண்ட தோல்விதான் அவளுடைய சோக மௌனத்துக்குக் காரணம்.

மனத்தில் மெதுவாக வந்து கவிழும் இருளை விலக்கி விட்டுக் கொண்டு வெளிச்சத்துக்கு வர முயன்றபோதெல்லாம் அவளது கரத்தைப் பிடித்து அழைத்து வர ஓர் இணையின்றித் தவித்துச் சோர்ந்து அயர்ந்தபின் உண்டான விரக்திதான் இதற்கெல்லாம் காரணம். உற்சாகமின்றித் தவிப்பதற்கும் அதுதான் காரணம். உறவின் நெருக்கத்தைவிடத் துயரின் நெருக்கம்தான் அவளுக்கு அதிகம். இதைச் சாரங்கன் உணர்ந்தவனாகத் தெரியவில்லை.

''ஏன், என்னமோ போல இருக்கே?''— அவளோடு வேலை செய்யும் அவள் சிநேகிதி சகுந்தலா கேட்டாள்.

''மனசு சரியில்லை'' என்று இரண்டு வார்த்தைகளில் பதில் வந்த போது இரண்டு

கண்களும் மனத்தின் சோக கனம் தாங்காமல் துடித்தன.

''வனஜா, சொல்லேன், என்ன விஷயம்? உன் கணவர் ஏதேனும் சொன்னாரா ?''

அலுவலகத்தில் பிற்பகல் இடைவேளை. மனம் சோர்ந்து போய் அமர்ந்திருந்த போது சிநேகிதை சகுந்தலாவின் வார்த்தைகள் அவளுடைய நைந்த உள்ளத்துக்கு அருகில் வருகிற மாதிரி தோன்றியது.

''ஆமாம்'' என்றாள் வனஜா.

''உன்னைப் பொறுத்தவரையில் சுகம், துக்கம் என்பதெல்லாம் நீயாகப் பார்த்து வைத்துக் கொள்ள வேண்டியதுதான். விழுந்தாலும் எழுந்தாலும் திரும்பிப் பார்க்கக்கூட நாதியில்லை. என்ன செய்வது? உன் கழி இப்படி..''

''சகுந்தலா! நான் அவரை எவ்வளவு நேசிக்கிறேன், தெரியுமா ? அதை வெளிக் காட்டிக் கொள்ளத் தெரியவில்லை. இப்பொழுதைக்கு மனம் பாழ்பட்டுக் கிடக்கு. வாழ்க்கையே வெறுப்பாத் தோணறது. இதற்கெல்லாம் மனசைப் போட்டு வாட்டிக் கொண்டு பின்தங்கி விட்டால் வாழ்க்கை நடத்த முடியுமா ? சொல்லேன். நான்கு பேருக்கு முன்னாலே அமர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கேடி? அதுக்காகவேனும் நாசூக்காக இருக்க வேண்டாமா? இதையெல்லாம் பார்த்து ஆத்திரப்பட்டால் ஆச்சா ? முதன் முதலில் விதிவசத்தால் இப்படி மனைவி வேலைக்குப் போய்க் கணவன் வீட்டோடு இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போச்சன்னு மனைவிமேலே இருக்கிற சந்தேகம் ஒழியணும். அப்புறம்தான் வீட்டிலே அமைதி நிலைக்கும்.''

''உன்னோட நல்ல மனசுக்கு இப்படியொரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்க வேண்டாம்.''

''நீ சொல்கிற மாதிரி இதை நான் துர்ப்பாக்கியம் என்றுகூட நினைக்கிறதில்லை. இது ஒரு விபத்து என்றுதான் மனசைத் தேற்றிக் கொண்டு வருகிறேன். நித்திய வாழ்வில் நம்மைச் சுற்றியிருக்கிற எத்தனையோ விபத்துக்களிலும், விபரீதங்களிலும் இதுவும் ஒன்று. சில விபத்துக்கள் மனிதனுக்கு உடனே எழுந்து உட்காரத் தெம்பைக் கொடுத்து விடும். சில விபத்துக்கள் வாழ்வுடன் பிணைந்து விடுகின்றன என்று நான் தேர்ந்து விட்டேன். நீயே சொல்லடி. அவருடைய இந்த நிலைக்காக நான் மனம் ஒடிந்து வீட்டிலேயே உட்கார்ந்து விடுகிறேன் என்று வைத்துக் கொள். அது எங்களுக்கு இன்னொரு பெரிய விபத்து இல்லையா?'' என்றவள் மிக மிக ஆழ்ந்த துயரத்தோடு கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள்.

''இயற்கையின் கூற்றைக் கண்டு மலைத்து நிற்கின்றவன் மனிதனேயல்ல சகுந்தலா ! தானும் அமைதியிழந்து பிறரையும் அமைதி இழக்கச் செய்கிறவர்கள் மேல் என்னதான் தாய், தந்தை, அண்ணன் தங்கை, தம்பி, கணவன் என்றிருந்தாலும் அநுதாபம் சீக்கிரம் பிறக்கவே மாட்டேனென்கிறது. என் கணவர்மேல் நான் பட்டுக் கொள்கிற குறையெல்லாம் இதுதான்......'' என்று



'' எசமான், கோபிக்கக்காதீங்க! அம்மா முகத்திலே வெள்ளையடிக்க எம்மாம் செலவு ஆகுது! வீடு பூரா வெள்ளையடிக்கணும்னு கொஞ்சம் அதிகமா ஆகாதுங்களா !''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

சொல்லிக் கொண்டே தன் இடத்துக்குப் போய் விட்டாள் வனஜா.

சுவரில் மாட்டப்பட்டிருந்த தன் திருமண போட்டோவையே பார்த்தபடி நின்றான் சாரங்கன். அதை இந்த இடத்திலிருந்து எடுத்துவிட எவ்வளவோ தடவைகளில் முயன்று தோல்வி கண்டிருக்கிறாள் வனஜா ! அமைதியை அது எவ்வளவோ வகையில் கெடுப்பதாக அவன் காட்டிய குற்றங்களை அவள் ஏற்கவில்லை.

''இந்த வீட்டில் எல்லாம் உன் இஷ்டப்படிதான் நடக்கின்றன. உன்னுடைய அபரிமிதமான அன்புப் பார்வையில்தான் இக் குடும்பத்தில் விளக்கு எரிகிறது என்பதை நான் மறுக்கவில்லை. அதை இந்தப் போட்டோவை அப்புறப்படுத்துவதிலும் காட்டிக் கொள்ள வேண்டாம்'' என்று குத்தலும் கோணலுமாக ஒருமுறை கூறியிருக்கிறான் சாரங்கன். அதிலிருந்து அவள் அதை அந்த இடத்திலிருந்து எடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டு விட்டாள். இன்று கூடத்தில் அபூர்வமாக அதையே பார்த்தபடி நிற்கும் கணவனைக் கண்டவள் அவனுக்குப் பின்னால் வந்து நின்று அவளும் பார்த்தாள்.

பின்னால் வந்து நிற்கும் வனஜாவைப் பார்த்து விட்டு அப்பால் நகர்ந்தான் சாரங்கன்.

நிழலும் நகர்ந்தது. நிழல் தோன்றியது. மணக் கோலத்தில் அவளும் சாரங்கனும், கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்குமுன் எடுத்துக் கொண்டது.

''பையன் பிரமாதமாக இருக்கிறானே ! வேலைகூட ஏதோ பெரிய கம்பெனியில் என்று கேள்விப்பட்டேன். வனஜா, நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி'' என்று திருமணத்துக்கு முன்பும், பின்னும் வந்து குவிந்த வாழ்த்துரைகள் !

''உனக்கு இருக்கிற அழகுக்கும், அறிவுக்கும் ஆண்டவனாகப் பார்த்துக் கொடுத்த நிதியடியம்மா இது. நன்னா இருங்கோ. குடியும் குடித்தனமுமா குடும்பம் தழைக்கட்டும். பதிவிசா இரு.'' — வாழ்த்து வளர்ந்து.



''உனக்கு, எந்தப் பொருளையும் சீக்கிரத்தில் நாசம் பண்ணுவதே வேலையாப் போச்சு. நாம ரெண்டு பேரும் ஒரே நாளில் தே பிரஷ் வாங்கினோம். என்னுடையது அப்படியே இருக்கு. உன்னுடையது நன்றாகத் தேய்ந்து விட்டது பார்.''

வளம் பெற்றுத் தளர்ந்த வயோதிக உள்ளங்களின் ஆசீர்வாதங்கள் —

இவை யொன்றும் அவள் வாழ்வில் நிலைத்து நிற்கவில்லை.

வாழ்வில் பெருமளவில் நம்பிக்கை மோசம் போய் விட்டாள் அவள் !

ஒரு நாள் காலை வேலைக்குச் சென்ற கணவன் அதன்பின் போகவேயில்லை. சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்தபோது ஒரு காகிதத்தை எடுத்துக் காட்டிவிட்டு மௌனமாகி விட்டான் அவன்.

அவன் வேலை போய் விட்டது. உடம்பை சொஸ்தமாக்கிக் கொண்டு வந்தால் மீண்டும் வேலை. அது எத்தனை காலமானாலும் சரி. இல்லை யென்றால் இல்லை.

கால வரையறைக்குள் தீர்க்கக் கூடிய பிணியா அது? ஊழிக் கூற்றை ஆழம் காண இந்த மனிதர்கள் யார் ? அவன் பேசுகின்ற இறுமாப்பிலே இதைக் கண்டு உணர முடியுமா அவளால்?

காலடியில் சுற்றி வருகின்ற கூற்றின் வலியக் கோர விளையாட்டைக் குனிந்து பார்க்க அவனுக்கு வாழ்க்கையில் நேரமில்லாமலே போய்க் கொண்டிருக்கிறதே !

வனஜாவின் கேள்விக்குச் சாரங்கனால் பதில் சொல்ல முடியவில்லை. அவன் எதைப் பதிலாகக் கூறுவான், அவனுக்கே தெரியாத போது.

ஏழைக் குடிலில் ராஜ வைத்தியம் நடந்தது. மருந்துகள் விதம் விதமாக ஏராளமாகக் குவிந்தன. எஞ்சியது, காலி மருந்து சீசாக்களும், காலி மனமுமேதான். தோல்வியும், தளர்வும்தான்.

பிறகு ஏற்பட்ட குடும்ப மாறுதல்களை நினைத்தால் இன்றுகூட வனஜாவுக்கு உடம்பு சிலிர்க்கும்.

நகைப்பு, நச்சரிப்பு, உதாசீனம். அவர்களைத் தனிமைப்படுத்த நடந்த இடையறாத சூழ்ச்சிகள். இவற்றை யெல்லாம் பார்த்துப் பார்த்து அவளிடத்தில் விளைந்த வைராக்கியம்.

''உன் வீட்டுக்காரனை அழைத்துக் கொண்டு நீ எங்கே வேண்டுமானாலும் போ'' என்று எழுந்த வார்த்தைகள்—அந்தச் சவாலை ஏற்று அவள் வெளியேறிய நெஞ்சுரம் — எல்லாம் சாரங்கனுக்கும் தெரியும். உரம் பெற்ற அந்த உத்தமியின் நிழலில் அவன் இதுவரை குறை கண்டதேயில்லை தான். ஆனால் இயல்பான மனித மனத்தின் சபலத்தால் அவன் ஆட்டி அலைக்கப்படுகின்ற நேரங்களில் ஏற்பட்ட சிறுசிறு புயல். அதனால் அலைப்புறும் அமைதி. விடுபட்ட உறவு நிலை. விடுபடாத உறவுமுறை. பார்த்த முகம். பார்த்துத் தழைந்த முகம். நினைத்த நினைவுகள். நினைத்த நினைவின் அறுந்த இழைகள்.

தொட்டு நின்ற நிலை. தொடாமல் விலகும் நிலை. நெருங்கிய உள்ளங்கள். நெருங்காத ஸ்தூலம்! அணைப்பில் சுகித்த இன்பம், அந்த நினைப்பில் ஏங்கும் துன்பம்.

குமுறும் நெஞ்சம்; கோபமுறும் நெஞ்சம்.

''வனஜா !''

கணவன் சாரங்கன் பின்னின்று அழைத்தான்.

நொய்மையின்றி அவன் நகைத்தான் !

''ஏன், என்னமோ போல இருக்கிறாய்?''

காலையில் நெருஞ்சி முள்ளாகக் குத்தியவன் மாலையில் நெருங்கி வந்து கேட்டான்.

இதைப் போலப் பேதலித்த செய்கைகளைத்தான் அவளால் மன்னிக்கவே முடியவில்லை.

''வெறியை அடக்குங்கள். வாழ்க்கையில் அமைதி பெறலாம்'' என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தாள்.

''நீ உன் உதாசீனத்தை நிறுத்து. வாழ்வில் அமைதி பெறலாம்'' என்றான் சாரங்கன்.

''தவறான கணக்கின் விடையும் தவறாகத் தான் வரும். சரியான முறையிலே ஒருவரையொருவர் உணரவில்லையென்றால் விடிவே கிடையாது'' என்றாள் வனஜா கொஞ்சம் சினத்துடன்.

''சம்பாதிக்கின்றேனும் என்ற திமிர் உனக்கு. என்னை நீ அலட்சியம் செய்கிறாய். ஏனென்றால் நான்.... நான்.....''

''வேண்டாம். தயவுசெய்து அப்படிச் சொல்லாதீர்கள். நான் உங்களை அலட்சியம் செய்யவேயில்லை. மனத்துக்குள் உங்களை நான் பூஜிக்கிறேன். காலையில் ஆபீஸ் புறப்படுமுன் உங்கள் கையால் மலர் சூடிக் கொள்ளும்போதுகூட நான் கடவுளிடம் என்ன வேண்டுகிறேன், தெரியுமா? 'இறைவனே ! இப்படிப் பூச்சூட்டிக் கொள்ளும் பாக்கியத்தையாகிலும் எனக்கு நிரந்தரமாக்கு' என்று. என் துடிப்பை நீங்கள் உணர மாட்டேன் என்கிறீர்கள். தயவுசெய்து நான் சொல்வதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுங்கள். மனசில் உள்ள அற்பமான ஆசைகளை விட்டொழியுங்கள். அதில் மட்டும் தான் வாழ்க்கை அடங்கியிருக்கிறதா? இல்லை, அது மட்டும்தான் வாழ்க்கையா ? நாம் மீதி நாட்களை அமைதியுடன் கடத்தாக வேண்டாமா ? எனக்கு உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? உங்களுக்கும் என்னைத்

தவிர வேறு யார்? உங்களுக்காக, உங்களை என் ஆயுள் உள்ளவரை காப்பாற்றிக் காக்க வேண்டியது என் கடமை என்று நினைக்க இடம் கொடுங்கள். வெளியில் சமுதாயத்துடனும், தூர விலகி நின்று வேற்றுமை காட்டும் உறவினருடனும் நான் எவ்வளவு போராட வேண்டியிருக்கிறது தெரியுமா? அந்த அலுப்பிலும் அசதியிலும் அயர்வோடு வீடு வரும் என்னை உங்களுடனும் போராடும்படியாக வைத்து விடாதீர்கள்.''

வனஜா துக்கத்துடன் நெஞ்சையடைக்க மேலும் பேசினாள்:

''நான் எதற்காக உங்களை அலட்சியப் படுத்த வேண்டும்? நான் இப்படியெல்லாம் சோர்வுடன் இருக்கிறேனே என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம். நீங்கள் இந்தமாதிரி கோபதாபங்களையும், அற்ப மோகங்களையும் விட்டு விட்டு இருங்கள். சொர்க்கத்தை என்றால் இங்கே கொண்டு வர முடியும். அதற்கு நீங்கள்தான் வழி செய்து தர வேண்டும். நான் சம்பாதிப்பதில் எனக்குச் சிரமமோ, அயர்வோ, வருத்தமோ கொஞ்சம் கூட இல்லை. ஆனால் என் பிரயத்தனங்கள் எல்லாவற்றையும் நீங்கள்தான் அடிக்கடி கலைத்து விடுகிறீர்கள்.

''என் அமைதி, என் அபிலாஷை, என்று எதையும் நீங்கள் மதிப்பதே யில்லை.''

அமைதியிழந்த வனஜா சாரங்கனிடம் தன் உள் நெஞ்சத்தைத் திறந்து கொட்டிக் கொண்டிருந்தாள்.

வனஜாவின் வார்த்தைகள் சாரங்கனுடைய புகை படிந்த இருட்டு நெஞ்சின் கதவுகளை மெதுவாகத் திறந்து கொண்டிருந்த வேளையில் அவன் அயர்வுடன் வெளியே சுற்றிக் கொண்டிருந்தான்.

தவறான வழியிலே வளர்த்துக் கொண்டு விட்ட தன் எண்ணங்களை நேர்வழிப்படுத்த அவன் இது நாள்வரையில் முயற்சி செய்யவில்லை. அந்தத் தவற்றை அவன் இப்பொழுது உணர்ந்தான்.

பையில் இரண்டு ரூபாய் நோட்டு இருந்தது. பிரகாசமான 'நியான் ஸைன்' விளக்குகளோடு எதிர்ப்பட்ட ஹோட்டலைப் பார்த்தான். அப்பொழுது இருந்த நிலையில் ஒரு கப் காப்பி அருந்த வேண்டும் போலிருக்கவே வேகமாக அவன் கால்கள் ஹோட்டலை நோக்கி விரைந்தன.

ஹோட்டல் உள்ளே அடியெடுத்து வைக்கு முன் கால்கள் பின்னி நின்றன. உள்ளே செல்ல மனம் கூசியது. நுழை வாயிலில் தொங்கிய சிறு அறிவிப்புப் பலகையைக் கண்ணுற்றான்.

''பெரும் வியாதியஸ்தர்கள் கண்டிப்பாக உள்ளே பிரவேசிக்கக் கூடாது.''


முகத்தில் அடித்தாற்போல் வெட்க உணர்வோடு திரும்பி விட்டான்.

வீட்டில் வனஜா ஒரு மூலையில் உட்கார்ந்து விசித்துக் கொண்டிருந்தாள்.

கண்களில் கண்ணீர் சுரந்து கொட்டக் கூடத்தில் வந்து நின்ற சாரங்கன், ''என்னை மன்னிச்சுடு, வனஜா. 'முன்மனிஜீ' இப்படியாகி விட்டது எனக்கு. வெளி உடம்புதான் இப்படியென்றால் மனமும்கூட ரொம்ப அழுகிப் போய்க் கொண்டிருந்த நேரத்தில்

பிரச்னை தீர்ந்ததா?

'யயாதி'



ஒரு பத்திரிகையாசிரியர் துண்டு விழுந்த ஒரு பத்தியில் அவசரத்தில், நாலு வரி விளம்பரம் வெளியிட்டார்: ''உங்கள் பிரச்னை எதுவானாலும் தீர்த்து வைக்கிறோம். உடனே எழுதுங்கள்'' என்று.

பிறகு அவர் பத்திரிகையில் இடம் துண்டு விழும் பிரச்னை ஒருபுறமிருக்கத் துண்டைத் தலையில் போட்டுக் கொண்டு எங்கேயாவது போய்விடலாமா என்று கூட அவர் எண்ண நேர்ந்தது! வந்த பிரச்னைகளில் ஒருசில அந்த லட்சணத்தில் இருந்தன.

1. எனக்கு 35 வயது. இன்னும் எனக்கு நல்ல வரன் அமையவில்லை. நானும் ஆபீஸில்தான் வேலை பார்க்கிறேன். கதை, கட்டுரைகளில் எழுதுகிற மாதிரி யாரும் காதலிக்க மாட்டேன் என்கிறார்களே!...

2. மூன்று குழந்தைகளும் ஏராளமான கடன் தொல்லைகளும் உள்ள நாங்கள் விவாக ரத்துச் செய்துகொள்ள விரும்புகிறோம். இந்தக் குழந்தைகளை நாங்களே கவனித்துக் கொள்கிறோம், கடன்களை ஏற்க ஏதாவது ஸ்தாபனம் முன் வருமா?

3. நானும் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க விரும்புகிறேன். மூலதனம் தரக் கூடியவர் யாருமுண்டா?... தாங்கள் முதல் கட்டுரை வழங்க முடியுமா?


4. நான் இப்போது பி.யு.சி. படிக்கிறேன். தினமும் காலேஜுக்குப் புறப்படும்போது பக்கத்து வீட்டுப் பையன் தொடர்ந்து வருகிறான். அவன் எஸ். எஸ். எல். சி. தான் படிக்கிறான். நான் இந்த வருடம் பெயிலாகிவிடட்டுமா?

அதை நீ பதப்படுத்தத் தயாராக இருக்கே. உடம்புதான் இப்படியாகி விட்டது. உன் ளத்தையாவது நீ எனக்குப் பாதுகாத்துக் கொடு. எனக்கேற்பட்ட ஒரு தொல்லை இன்னொன்றைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமாக ஈடு செய்து கொள்கிறேன்.''

நெடுஞ்சாண்கிடையாக அங்கே மாட்டியிருந்த சாமி படத்தின் முன்னால் விழுந்தான்.

இதைக் கண்ணுற்ற வனஜாவின் நெஞ்சம் புல்லரித்தது. ஆர்வத்துடன் அவள் அவனருகில் ஓடி வந்தாள். அவன் சிரித்துக் கொண்டே பின்னுக்கு நகர்ந்து கொண்டான்.

இருளில் அவன் வாழ்க்கைப் பயணம் பயமின்றித் தொடர்ந்தது.



உங்களுக்கு கட்டுபடியாகும் விலையில் அதி நேர்த்தியான தரமுள்ள துணிமணிகள்—அவைதான் டுவின் டஸ்கர்! உறுதியானவை, நீடித்து உழைப்பவை, பலமுறை வெளுத்த பிறகும் அவைகளின் புதுமைப் பொலிவும் கொவின் நேர்த்தியும் குன்றாதிருக்கவேண்டி சீரிய முறையில் தயாரிக்கப்பட்டவை.

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

மானேஜிங் ஏஜண்டுகள் :
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

ஹார்வி

டுவின் டஸ்கர்

பாப்ளின்
டிரில்
கேம்பிரிக்



நாடாவின் நிறம் என்ன?

கோமதி சுவாமிநாதன்

பல தொழில் இலாகா டைரக்டர் அவர்கள் சமூகத்துக்கு.

வணக்கம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பத்திரிகை விளம்பரம் வாயிலாகத் தாங்கள் கொடுத்திருந்த அறிவிப்புக்கு இணங்க, தங்கள் பொறுப்புக்கு உட்பட்ட சிறு பட்டறை இலாக்காப் பகுதி குமாஸ்தா உத்தியோகத்துக்கு நான் விண்ணப்பம் செய்து, நேரடிப் பேட்டிக்கும் உட்பட்டு, தங்களுடைய 4–8–60 தேதியிட்ட பல–சிறு தொழில் – காலி – உத்தரவின் மூலம் அந்த உத்தியோகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் உணர்ந்தேன். ஆனால் இன்று வரை அந்த உத்தியோகத்தில் வந்து சேரும்படி எனக்கு உத்தரவு வரவில்லை.

தயவுசெய்து அந்த உத்தரவைச் சீக்கிரம் அனுப்பி வைத்து எனக்கு வேலையைக் கொடுங்கள். நான் மிகவும் சிரமதசையில் இருக்கிறேன். பல கடிதங்கள் எழுதிப் பதில் ஏதும் கிடைக்காத நிலையில் இந்தக் கடிதத்தை இன்ஷியூர் தபாலில் அனுப்பி வைத்திருக்கிறேன். மன்னிக்கவும்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள கணபதிராயன்

(2)

பல தொழில் இலாக்கா காரியாலயம்.

ஆபீஸ் குறிப்பு: உதவி டைரக்டர் உன்மத்த நாதன் அவர்கள் பார்வைக்கு திரு கணபதி ராயனின் கடிதம். இப்போது அவர் குறிப்பிடும் உத்தியோகம் காலியாக இருக்கிறது. உத்தரவு போடலாம். உத்தரவுக்கான கையெழுத்துப் பிரதி கீழே இருக்கிறது.

தம்புசாமி,
தலைமைக் குமாஸ்தா. 21–2–62

3

ஆபீஸ் குறிப்பு: தலைமைக் குமாஸ்தா! இந்த உத்தியோகத்தைப் பூர்த்தி செய்ய ஏன் இவ்வளவு தாமதம்? உன்மத்தநாதன்,
உதவி டைரக்டர் – 1; 10–3–62

(4)

ஆபீஸ் குறிப்பு: விளம்பரம் கொடுத்தபோது காலி ஸ்தானங்களைச் சரியாகக் கணக்கிடவில்லை என்று தெரிகிறது. இப்போது ஓர் இடம் காலி. அதைப் பூர்த்தி செய்யலாம். தயவு செய்து நியமன உத்தரவில் கையெழுத்திடவும். தம்புசாமி
த.கு. 31–3–62

(5)

ஆபீஸ் குறிப்பு: காலி ஸ்தானங்களைக் கணக்கிடாததற்கு யார் பொறுப்பு? அவருடைய விளக்கக் கடிதத்தை வாங்கி அனுப்பவும்.

உன்மத்தநாதன்,
உ–டை1. 20–4–62

(6)

ஆபீஸ் குறிப்பு: தங்கள் ஆர்டர். அதற்குப் பொறுப்பான திரு குழந்தைசாமி நம் இலாக்காவிலிருந்து சென்ற மாதம் ரிடையர் ஆகிவிட்டார். அதனால் ஏற்பட்ட காலி ஸ்தானத்தை இப்போது பூர்த்தி செய்யலாம். தயவுசெய்து நியமன உத்தரவில் கையெழுத்துப் போடவும்.

தம்புசாமி
த.கு. 17–5–62

(7)

ஆபீஸ் குறிப்பு: மனுதார் கணபதிராயன் அனுப்பியிருப்பதாகச் சொல்லும் முந்திய கடிதங்கள் ஃபைலில் இல்லை. அவைகளையும் வைத்துத் திருப்பி அனுப்பவும்.

உன்மத்தநாதன்,
உ. டை-1 13–6–62

(8)

ஆபீஸ் குறிப்பு: மனுதார் குறிப்பிடும் முந்திய கடிதங்கள் இங்கு வந்து சேர்ந்ததாகத் தெரியவில்லை. உத்தியோக நியமனத்துக்கு இப்போது ஃபைலில் இருக்கும் சமீபத்திய கடிதமே போதுமானது

என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து கையெழுத்திடவும்.

தம்புசாமி,
த. கு. 2–7–62

9

ஆ. கு.: இந்த நியமன உத்தரவில் நான் கையெழுத்துப் போடலாமா?

உன்மத்தநாதன் உ.டை-1 14–8–62

10

ஆ. கு.: தாங்கள் போடலாம்.

20–8–62 தம்புசாமி த. கு.

11

ஆ. கு.: சிறு பட்டரை இலாக்கா சம்பந்தமான உத்தரவுகளை உதவி டைரக்டர்–3தான் கையெழுத்திட வேண்டுமென்று முன்னால் ஒரு ரூலிங் வந்திருப்பதாக நினைக்கிறேன். அதை இணைத்து பைலை அனுப்பவும்.

7–9–62 உன்மத்தநாதன், உ.டை.-1

12

ஆ. கு.: பிரஸ்தாப ரூலிங் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூலிங்கில் நியமன உத்தரவுகளில் கையெழுத்துப் போடுவதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. பொது விஷயங்கள் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ரூலிங் வருவதற்குமுன் இருந்த நிலைதான் இந்த உத்தரவு சம்பந்தப்பட்ட வரையில் நடைமுறையில் இருக்கிறது என்று நம்பப்படுகிறது. தயவுசெய்து கையெழுத்திடவும்.

22–9–62 தம்புசாமி–த. கு.

13

ஆ. கு.: இந்த பைலையும் உதவி டைரக்டர்–3க்கே அனுப்பவும்.

20–10–62 உன்மத்தநாதன் உ.டை.-1

14

ஆ. கு.: இந்த பைல் என்னிடம் வர வேண்டிய அவசியமில்லை. உதவி டைரக்டர் 1-க்கே அனுப்பவும். 5–8–59 தேதியிட்ட வேலை–பிரி– அதி ரூலிங்கைப் பார்க்கவும்.

17–11–62 வி.டி. கண்டன் உ.டை.3

15

ஆ. கு.: உதவி டைரக்டர் 3-ன் குறிப்பைக் காண்க. தயவுசெய்து உத்தரவில் கையெழுத்திடவும்.

25–11–62 தம்புசாமி த.கு.

16

ஆ. கு.: இதுபற்றி என்னுடன் பேசவும்.

6–12–62 உன்மத்தநாதன் உ.டை.-1

17

ஆ. கு.: இதுபற்றித் தங்களுடன் மூன்று தடவைகள் பேச முயன்றும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தயவுசெய்து உத்தரவில் கையெழுத்திடவும்.

7–1–63 தம்புசாமி த. கு.

18

ஆ. கு.: சிறுபட்டரை இலாக்கா நியமன உத்தரவுகளைக் கவனிக்க என்னுடைய இதர அலுவல்கள் அவகாசம் அளிக்கவில்லை. இதையும் உதவி டைரக்டர்-3க்கே ஒதுக்க வேண்டும். இதுபற்றி டைரக்டருக்கு ஒரு நோட் அனுப்பவும்.

8–2–63 உன்மத்தநாதன் உ.டை-1

19

ஆ. கு.: டைரக்டர் அமெரிக்க சர்க்கார் அழைப்புக்கிணங்க ஆறு மாத அநுபவ சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டு புறப்பட்டுப் போயிருக்கிறார். திரும்ப இன்னும் ஐந்து மாதங்களாகும்.

28–2–63 தம்புசாமி த. கு.

20

ஆ. கு.: டைரக்டர் வந்த பிறகு பைலை அனுப்பவும்.

10–3–63 உன்மத்தநாதன் உ.டை.-1

21

ஆ. கு.: சிறுபட்டரை இலாக்கா-கணபதிராயன் அவர்கள் நியமனம் தங்கள் 10-3-63 உத்தரவு. தாங்கள்தான் கையெழுத்துப் போட வேண்டுமென்ற டைரக்டர் ஆர்டரின் நகல்காண்க. தயவுசெய்து கையெழுத்திடவும்.

7–9–63 தம்புசாமி த. கு.

22

ஆ. கு.: திரு கணபதிராயனின் பூர்வோத்திரங்கள், நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டனவா?

25–9–63 உன்மத்தநாதன் உ.டை-1

23

ஆ. கு.: இந்த வேலைகள் 1960 ஆகஸ்டிலேயே முடிந்து விட்டன. உத்தரவில் தயவு செய்து கையெழுத்திடவும்.

6–10–63 தம்புசாமி த. கு.

24

ஆ. கு.: பைல் மேலட்டை கிழிந்து கிடக்கிறது. புது அட்டை போட்டு அனுப்பவும்.

28–10–63 உன்மத்தநாதன் உ.டை-1

25

ஆ. கு.: புது அட்டை மாட்டப்பட்டிருக்கிறது.

8–11–63 தம்புசாமி த.கு.

* * *

பல தொழில் இலாக்கா டைரக்டர்
அவர்களுக்கு,

தங்கள் 18–12–63 தேதியிட்ட சிறு பட்டரை இலாக்கா குமாஸ்தா நியமன உத்தரவு கிடைத்தது. நன்றி.

நிற்க, கடந்த இரண்டு வருடங்களாக ரிப்பன் வியாபாரத்திலே மொத்த அளவிலே ஈடுபட்டு, தங்கள் காரியாலயம் வாக்களித்த மாதச் சம்பளத்தைவிடப் பல மடங்கு அதிகமாகவே சம்பாதிக்கிறேன். தாங்கள் சீக்கிரம் நியமன உத்தரவு அனுப்பாததற்கு நன்றி.

சர்க்கார் காரியாலயங்களிலே சிவப்பு நாடா, சிவப்பு நாடான்னு எதையோ உபயோகிப்பதாகச் சொல்றாங்க. ஏன் சிவப்பு ரிப்பனையே அதற்கு உபயோகிக்கக் கூடாது? நீங்க அதை வாங்க டெண்டர் கோரினால் எனக்கும் ஒரு டெண்டர் பாரம் அனுப்பி வையுங்க. முதல்தர பவானி, நைலான் ரிப்பன்களைப் பேல் பேலாக அனுப்பி வைக்கிறேன்.

31–12–63 கணபதிராயன்

ரண சிகிச்சையின்றிப் புதுமுறையில் வலிமயமான மூலத்தைச் சுருக்குகிறது, நமைச்சலை நிறுத்துகிறது, வலிதணிக்கிறது

நியூயார்க்— தீவிரப் பிணிகளில் தவிர மற்றபடி ரண சிகிச்சை என்பதே தேவையில்லாமல் மூலத்தைத் சுருக்கி, நமைச்சலை நிறுத்தி, வலி தணிக்கும் அற்புத வல்லமையுள்ள புதுவித மருந்துப் பொருளை முதன்முறையாகக் கண்டுபிடித்துள்ளது விஞ்ஞானம்.

டாக்டர்களின் கண்காணிப்பில் நிகழ்த்தப்பட்ட பரிசோதனைகளே இதற்கு அத்தாட்சி— வலியும் நமைச்சலும் உடனடியாகத் தணிக்கப்பட்டன. இதமுடன் மெல்ல வலியாற்றிய அதேசமயம் உள்ளபடி சுருக்கமே ஏற்பட்டது.

அனைத்திலும் ஆச்சரியம் என்னவெனில், பத்து இருபது ஆண்டுகள் நீடித்திருந்த பிணிகளிலும் இந்த அபிவிருத்தி நிலைபெற்றதுதான்.

உலகப் புகழ்பெற்ற ஆராய்ச்சிக் கழகம் ஒன்றின் கண்டுபிடிப்பாகிய பயோடைன்* என்ற புதிய மருந்துப் பொருளே இதன் இரகசியம். இப் புதிய மருந்துப் பொருள் தற்போது பிபரேஷன் ஹெச் என்ற பெயருடன், களிம்பு வடிவிலே அளிக்கப்படுகிறது. மூலத்தைச் சுருங்க வைப்பதோடன்றி, மலப் பாதைக்கு மழமழப்பூட்டி, மலப்போக்கின் வலி அற்றதாக்குகிறது. பிபரேஷன் ஹெச், 30கி. மற்றும் 50கி. டியூப்களாக இடுகுழாயுடன், எல்லா உயர்தர மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.


மூல நோய் பற்றி விளக்கும் சிறு நூலை (ஆங்கிலம் அல்லது தமிழ்) இலவசமாகப் பெற இன்றே எழுதுக: டிபார்ட்மெண்ட்: 38, ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட்., போஸ்ட் பாக்ஸ் 976, பம்பாய் 1 பிஆர்.

*டிரேட் மார்க்

CMPH-2 TAM

நிர்க்கதியாக மனித சஞ்சாரமற்ற ஓர் இடத்தில் வந்து மாட்டிக் கொள்வோம் என்று டாக்டர் சிவசங்கரன் நினைக்கவில்லைதான்! சென்னையிலிருந்து பானுமதியுடன் கிளம்பும்போது என்னென்ன கனவுகள் கண்டான்!

"மாதவமேனன் மகா ரசிகன். கல்லூரியில் படிக்கும் நாளில் அவனுக்கு அழகை வழிபடத்தான் நேரம் இருந்தது. ஹாஸ்டலில் அவன் அறையைப் பார்க்க வேண்டும். ஏதோ கலைக் கூடத்துக்குள் நுழைந்துவிட்ட உணர்ச்சி ஏற்படும். கட்டைப் பிரம்மச்சாரியான அவன் தன் தேயிலை எஸ்டேட்டுக்குப் பக்கத்தில் ஒரு புது பங்களா கட்டியிருக்கிறானாம். வருந்தி வருந்திக் கூப்பிடும் அவன் அழைப்பை ஏற்று, ஒரு மாதம் அங்கு போய்த் தங்கினால் என்ன? பட்டினத்து



பெண்ணுக்குப் பெண்

ஜி.எஸ். பாலகிருஷ்ணன்

இரைச்சலை மறந்து கொஞ்ச நாட்களாவது நிம்மதியாக இருக்கலாம்...."

மழை ஏன் இப்படிப் பிரளயமாகக் கொட்டுகிறது? இதற்கு ஓய்வே கிடையாதோ?

இந்த 'எஸ்டேட்' பங்களாவுக்குள் காலெடுத்து வைத்த சற்றைக்கெல்லாம் மழை கொட்டத் தொடங்கியது. அப்போது மாதவமேனனும் கூட இருந்தான். பிறகுதான் அவன் அம்மாவுக்கு உடல் நலம் சரியில்லை என்று தந்தி வந்ததின் பேரில் கிளம்பிச் சென்றான். நீலப் படுதாவை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தபோது மழையில் நனைந்த மலைத்தொடர்கள்தான் கண்ணில் பட்டன. உள்ளத்திலே அலாதியான ஒரு கிளுகிளுப்புப் பிறந்தது. வானை நோக்கி வளர்ந்திருந்த 'யூகலிப்டஸ்' மரங்கள் காற்றில் மெல்ல அசைந்ததும், பெயர் தெரியாத நீலப் பட்சி மழையை வரவேற்றுக் குரல் எழுப்பியதும், பட்டினத்திலே வசித்துக் கசந்து போன தம்பதிகளுக்குப் பரவசமூட்டின.....

ஜன்னலை இழுத்து மூடி விட்டு தர்மா மீட்டருடன் கணவனை நெருங்கினாள் பானு. அவன் 'வேண்டா'மென்று கையசைத்தான். "டாக்டரான எனக்குத் தெரியாதா, இந்த ஜுரம் இலேசில் விடாதென்று! இது ஒரு தொத்துவியாதி... நீகூட என்னுடன் நெருங்கிப் பழகுவது ஆபத்து."

"நல்ல முகூர்த்தம் பார்த்துக் கிளம்பினோம்! இந்த எஸ்டேட்டில் ஒரு டாக்டர்கூட இல்லையாம். பத்து மைல்களுக்கப்பால் யாரோ ஒரு லேடி டாக்டர் இருக்கிறாளாம். ஆனால் மழை இப்படி விடாமல் கொட்டினால் அவளை எப்படி அழைத்து வருவது?"

"ஏன் அலட்டிக் கொள்ளுகிறாய்? மழை நிற்காமலா இருக்கப் போகிறது?"

"எனக்கென்னமோ நம்பிக்கையில்லை."

மீண்டும் ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான். எங்கிருந்தாவது யாராவது உதவிக்கு வர மாட்டார்களா என்ற நப்பாசை. சரமாரியாகப் பொழிந்துகொண்டிருந்த மழையில் மலைத் தொடர்கள்கூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை. பங்களாவைக் காவல் காக்கும் கூர்க்கா மட்டும் குஷியாகப் புகை பிடித்தபடியே 'அவுட் ஹவுஸி'ல் வீற்றிருந்தான்.

"கூர்க்கா!"

"மேம் ஸாப்... க்யா புலாரஹீ ஹை?"

"பத்து மைல்களுக்கப்பால் யாரோ லேடி டாக்டர் இருப்பதாகக் குறிப்பிட்டாயே...? அவளை அழைத்து வர முடியுமா? ஐயாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாயிருக்கிறது."

கொட்டும் மழையில் போக அவன் தயங்கினான் போலும்! அவனுடைய முணுமுணுப்பின் அர்த்தம் அவளுக்கு விளங்கவில்லை.

"சரி, ஐயாவை நீ பார்த்துக் கொள். நான் போய் அழைத்து வருகிறேன்" என்று கூறி, மழைக் கோட்டைத் தேடி எடுத்து அணிந்து கொண்டாள். சிவசங்கரன் 'வேண்டாம்' என்று தடுத்தான். கூர்க்கா ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் எதற்கும் செவி சாய்க்காமல் பானுமதி கிளம்பி விட்டாள்.

எவ்வளவு நேரம் தூங்கினோமென்று சிவசங்கரனுக்குத் தெரியவில்லை. இந்த ஏகாந்தமான இடத்துக்கு வந்த பின் மணியை அனுமானிக்கவே முடிவதில்லை.



சூடான காப்பியுடன் அவன் அறைக்குள் நுழைந்தாள் பானு.

"நீ எப்போது திரும்பி வந்தாய்? வெகு நேரம் தூங்கி விட்டேனா என்ன?"

அவன் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கவில்லை அவள். நெற்றியில் கை வைத்துப் பார்த்தபடி, "ஜுரம் இன்னும் தணியவில்லையோ?" என்றாள். தொடர்ந்து, "கொட்டும் மழையில் அவ்வளவு தூரம் போயும் டாக்டரைப் பார்க்க முடியவில்லை. அவள் பக்கத்துக் கிராமத்தில் ஏதோ பிரசவம் பார்க்கப் போயிருக்கிறாளாம். வேலைக்காரியிடம் சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்" என்றாள்.

''பாவம், உனக்கு ரொம்பச் சிரமம்'' என்று கூறி அவன் எழுந்திருக்க முயன்றான்.

''படுத்துக் கொள்ளுங்கள்...நான் டாக்டர் டெய்ஸி வருகிறாளா என்று பார்க்கிறேன்...''

''டாக்டர் டெய்ஸியா?''

''ஏன் உங்களுக்கு அப்படி யாரையாவது தெரியுமா?''

அவன் பதிலேதும் சொல்லவில்லை. அவளும் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. ஆனால் அந்த நாளில் அடிக்கடி பாடின பாடல் — வைத்தியக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் முணுமுணுத்த அடி — 'டெய்ஸி என்றொரு தெய்வ மலர்...' அவன் செவிகளிலே ரீங்கரித்தது. அது மட்டுமா? நெஞ்சத்திலே சொல்லவொண்ணாத வேதனையையும் எழுப்பியது.

பானுமதி படுதாவை விலக்கி டாக்டர் வருகிறாளா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். சிவசங்கரனும் ஒரு படுதாவை விலக்கிப் பின்னுக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனக் கண் முன் ஒளி விட்டன ஒரு ஜோடி நீலக் கண்கள்!

அந்தக் கண்களின் சொந்தக்காரியின் பெயர் டெய்ஸி. அழகான வண்ண மலரின் பெயரைத் தாங்கின ஆங்கிலோ — இந்தியப் பெண் அவள். படிப்பிலே மட்டுமா கெட்டிக்காரியாக இருந்தாள்? குறும்புப் பேச்சுக்குப் பெயர் போனவள். விஷமம் செய்வதில் அவளுக்கு நிகர் அவளேதான். பெரிய பெரிய பேராசிரியர்களைக்கூட 'ஏப்ரல் முட்டாள்' ஆக்கின பொல்லாத பெண். வைத்தியக் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் அவள் காந்தமாக இழுத்தாள்.... சிவசங்கரனையோ — அவனுக்குத்தான் டெய்ஸி ஒரு தெய்வ மலராயிற்றே!

தெய்வ மலர்! அவளிடமே ஒரு நாள் தான் புனைந்த கவிதையைப் பாடிக் காட்டினான் சிவசங்கரன். அதைக் கேட்டு அவள் குலுங்கிச் சிரித்தாள்....அந்த நீல விழிகளில்கூடச் சிரிப்பு சோப்பு நுரையாகக் குமிழியிட்டது. பக்கத்திலே தொங்கிக் கொண்டிருந்த ஓர் எலும்புக் கூட்டைக் காட்டினாள். அது ஒரு பெண்ணினுடையது. ''இந்த எலும்புக் கூடுகூட ஒரு காலத்தில் யார் யார் திருஷ்டியிலோ தெய்வ மலராகத் திகழ்ந்திருக்கும். இன்று பாருங்கள், அதன் அலங்கோலத்தை. நாளைக்கு நானும் கூட ஏதாவது மருத்துவக் கல்லூரியில் இது போல் ஊசலாடிக் கொண்டிருப்பேன்.....ஆம்! உங்கள் தெய்வ மலர்!''

வைத்தியக் கல்லூரி யூனியன் தேர்தல் என்றால் ஒரே அல்லோலகல்லோலம்தான்! நவநவமான தந்திரங்களைப் பிரசாரத்துக்காகக் கையாளுவார்கள், கற்பனா சக்தி படைத்த மாணவர்கள். அந்த வருஷம் டெய்ஸியை யூனியன் தலைவர் பதவிக்கு நிற்க வைத்ததே சிவசங்கரன்தான். அத்தனை மாணவர்கள் மனத்திலும் தெய்வ மலராக மணந்த டெய்ஸிக்குப் பிரசாரம் தேவையில்லைதான்! இருந்தும், 'மலர்ப் பெட்டியை ஆதரியுங்கள்' என்று இராப் பகல் கத்தினதுடன், வோட்டுப் போடச் செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் அன்றலர்ந்த ரோஜாப் பூ ஒன்றையும் வழங்கினான் சிவசங்கரன். 'மலரை மறக்காதேயுங்கள்' என்று அவன் வாய் வேண்டியது.

வெளியே மழை கொட்டுக் கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. வானம் பொத்துக்கொண்டு விட்டதா?

கடுமையான ஜுரம் இருந்தும் கூட, சிவசங்கரனின் உடல் வியர்த்துக் கொட்டியது. மதுவை உண்ட பின் மலரை வீசி எறிவது எத்தகைய நன்றி கெட்ட செயல்? தந்தையின் கோபத்துக்கு அஞ்சி அவளை நடுவழியில் நிர்க்கதியாக நிற்க விட்டுச் சென்றதை மூர்க்கத்தனம் என்று அழைப்பதா, இல்லை, வஞ்சனை என்று விளிப்பதா? மணந்துகொள்வதாக வாக்களித்ததையெல்லாம் மறுத்தது எத்தகைய நீசச் செயல்?... அவள் வயிற்றிலே வளர்ந்து வந்த பிண்டம்....நினைக்கவே வெட்கப்பட்டான். ஒரு ஜோடி நீல விழிகளிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடின காட்சி அவன் உள்ளத்தில் வேதனையைக் கிளப்பியது. அவன் தன்னையறியாமலே முனகினான்.

இதுகாறும் இரகசியமாகப் பதுக்கி வைத்திருந்த பாப மூட்டையை அவன் அவிழ்த்துப் பார்க்க விரும்பவில்லைதான். செத்து மடிந்த நாட்களைச் சவப் பரீட்சை பண்ணினால் மன அமைதி அடியோடு குலைந்து விடும் என்று அவனுக்குத் தெரியாதா, என்ன? தவிர, தன்னிடம் அதீதமான விசுவாசம் வைத்திருக்கும் பானுமதிக்கு மட்டும் உண்மை தெரிந்தால்? சிந்திக்கவே அஞ்சினான். இப்பொழுதுகூட ஒரு நம்பிக்கை இருந்தது. டெய்ஸி என்ற பெயர் ஆங்கிலோ இந்தியர்களிடையே சர்வ சாதாரணமாக வழங்கும் பெயர். தன்னைப் பார்க்க வரப்போகும் டெய்ஸி பூர்வாசிரமத்தில் தான் அறிந்த பெண்ணாக அல்லாமல் இருக்கலாமல்லவா?

டாக்டர் வந்துவிட்டாள்! அதற்குள்ளாகவா? தான் எத்தனை நேரம் கடந்து போன நாட்களிலே இலயித்திருந்தோம் என்று அவனுக்கு விளங்கவில்லை.

டெய்ஸியின் கரம் அவனைத் தீண்டியது. பழக்கமான ஸ்பரிசம்...ஆனால் முன்போல் இல்லை. ஓரக்கண் வழியாகப் பார்த்தான். டெய்ஸி முன்னைப்போலன்றி கடினமான உழைப்பால் மிகவும் மெலிந்து போயிருந்தாள். கண்களை நன்றாகத் திறந்தான். ஓர் எலும்புக் கூடு தென்பட்டது. ஆனால் நீலக் கண்கள் மட்டும் முன்போல் பளபளத்தன. அவற்றில்தான் என்ன தீட்சண்யம்? மீண்டும் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

டாக்டர் டெய்ஸி பானுமதியுடன் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள். ''இது ஒருவித தொத்து ஜுரம். நல்லவேளை, நீ என்னை வந்து அழைத்தாய். உடனே கவனிக்காவிட்டால் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்பட்டு விடும். உன்னால் தனியே அவரைக் கவனிக்க முடியாது. கவனித்தால் ஆபத்தும் கூட. உன்னை வியாதி நிச்சயம் பற்றிக் கொண்டு விடும். நானே இங்கு தங்கி அவரைப் பார்த்துக் கொள்ளுகிறேன்; நன்றி.''

''டாக்டர்... நான் எப்படி...?'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்த பானுமதியின் பேச்சைக் கத்திரித்தாள் அவள்.

''நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. டாக்டரான நான் என் கடமையைச் செய்கிறேன். உயிரைக் காப்பது தான் எங்கள் இலட்சியம்.''

டாக்டர் டெய்ஸியின் அன்பு மொழிகள் சிவசங்கரனின் மனத்தைக் குட்டையாகக் குழப்பின. அக்கறையுடன் அவள் செய்த சிகிச்சைகள் அவன் அகத்தில் சந்தேகத் தீயை வளர்த்தன. அவளுடைய நீல விழிகளில் சுடர் விட்டுப் பிரகாசித்த ஒளி, பழி வாங்கும் எண்ணத்தையா பறைசாற்றிற்று?- ஒரொரு சமயம் அவள் வறண்ட இதழோரத்தில் தோன்றிய புன்னகையில் 'வஞ்சம் தீர்க்கிறோம்' என்ற எக்களிப்பு இருந்ததா? அவள் பானுமதியிடம் ஏன் அன்பை மழையாகப் பொழிந்தாள்? சந்தர்ப்பம் வாய்த்தபோது உண்மையை வெளியிட்டுச் சூறாவளி ஒன்றைக் கிளப்பலாம் என்பதா அவள் நோக்கம்?

இஞ்செக்ஷன் குழாயுடன் அவள் தன்னை நெருங்கும்போதெல்லாம் அவள் விழிகளைப் பார்க்க அஞ்சிக் கண்களை மூடிக் கொண்டான் சிவசங்கரன். உடம்பில் ஊசி மருந்து ஏறுகையில் விஷம் ஏறுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

ஃ . ஃ ஃ

நீலப் படுதாவை விலக்கி நிர்மலமான ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் சிவசங்கரன். அஸ்தமன சூரியனின் அந்திக் கிரணங்கள் யூகலிப்டஸ் மரங்கள் மீது மாயாஜாலம் புரிந்து கொண்டிருந்தன.

பானுவின் கரம் அவனைத் தீண்டவும் விழித்துக் கொண்டான். அவள் அழுது கொண்டிருந்தாள். ''அசடு, எதற்காக அழுகிறாய்?'' அவன் கரங்கள் அவள் தலைமயிரை வருடின. மனத்தில் என்னென்னமோ சந்தேகங்கள் தோன்றின. டெய்ஸி ஏதாவது சொல்லி விட்டாளோ? ஆனால் அவளுக்கிருந்த ஜுர வேகத்தில் அவளால் பேசவா முடியும்?

''உங்களைப் பிழைக்க வைத்த டாக்டரை ஜுரம் தொத்திக் கொண்டு விட்டதே! அவள் பிழைப்பாளா?''

''எனக்கென்ன ஜோசியமா தெரியும்? அதுதான் மருந்து தந்திருக்கிறேனே''

''எவ்வளவு நல்லவள் தெரியுமா?''

''நீ போய் ஓய்வு எடுத்துக்கொள். நான் அவளுக்கு 'இஞ்செக்ஷன்' போட்டு விட்டு வருகிறேன்.''



டெய்ஸிக்கு ஊசி மருந்து ஏற்றுவதற்காக அவள் கரத்தைப் பற்றினான் சிவசங்கரன். அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். நீல விழிகள் எதையோ வைடுருவின. அடுத்த நிமிஷம், ''வேண்டாம் சங்கர்... கூடாது'' என்றாள்.

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் 'சங்கர்' என்று அவள் அழைத்தது இன்பத்தைத் தரவில்லை. வேதனையைத்தான் கிளப்பிற்று. ''டெய்ஸி...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

''முதலில் மருந்தை ஜன்னல் வழியாகத் தூக்கி எறியுங்கள். உயிரைப் பிழைக்க வைக்கும் டாக்டர் செய்யும் காரியமா இது?''

''என்ன பிதற்றுகிறாய்?''

''ஒன்றுமில்லை...நீங்கள் வெறும் கோழை. அன்று என்னைக் கைவிட்டுச் சென்றதற்குக் காரணம் என்ன? கோழைத்தனம். இன்று மீண்டும் என் உயிரைப் பழி வாங்க முயன்ற காரணம் என்ன? கோழைத்தனமேதான்...''

ஒரு கணம் அறையிலே பயங்கர அமைதி நிலவியது. நின்றுபோன கடிகாரம் மௌனத்தின் ஆழத்தை அதிகமாக்கியது. ஒரு ஜோடி நீலக் கண்கள் ஒளி வெள்ளத்தை உமிழ்ந்தன. சிவசங்கரன் சிலையாகி நின்றான்.

''உண்மையைச் சொல்லுங்கள். எங்கே உங்கள் மனைவியிடம் நான் பழைய கதையைச் சொல்லிவிடுவேனோ என்ற அச்சம் தானே உங்களை இப்படிச் செய்யத் தூண்டியது? ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள். நான் ஒருபோதும் அதை வெளியிட மாட்டேன். உங்கள் மீது ஏற்பட்ட அனுதாபத்தினாலல்ல. ஒரு காலத்தில் உங்களை நேசித்ததினாலுமல்ல. அவளும் என்னைப் போல் ஒரு பெண். அவள் அமைதியாக வாழ வேண்டும் என்பதே என் விருப்பம். பெண்ணுக்குப் பெண் செய்ய வேண்டியதைத்தான் நான் செய்கிறேன்.''

உடல் நலம் தேறி, கைப் பையுடன் 'யூகலிப்டஸ்' மரங்களைத் தாண்டிச் செல்லுகிறாள், டாக்டர் டெய்ஸி. பானுமதியும், சிவசங்கரனும் அவளை வழியனுப்பி விட்டு அவள் போவதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

கல்லூரியில் படிக்கும் போது டெய்ஸியைப் புகழ்ந்து பாடின பாடல் சிவசங்கரனுக்கு நினைவு வருகிறது. 'டெய்ஸி என்றொரு தெய்வ மலர்' என்ற வாக்கியத்திலே கற்பனைக்கு எட்டாத, உணர்வுக்கு மட்டும் விளங்குகிற அர்த்தத்தைக் கண்டு பிடித்த எக்களிப்பு அவன் முகத்திலே குமிழியிடுகிறது.

வட்டமேஜை

- இறைவன் இறந்துவிட்டானா?
- கைதிகளின் உடை என்ன?
- பாரதியின் அடிச்சுவட்டில்...
- தாத்தாப் பாட்டு

"இறைவன் இறந்து விட்டானா?" என்ற நாடகம் இன்றைய தினம் நாட்டின் நிலைமையை வெகு அழகாகச் சித்திரிக்கிறது. நாட்டின் இன்றைய நிலவரத்தை நோக்கும் பொழுது, இறைவன் இன்னும் இருக்கின்றானா அல்லது இறந்து விட்டானா என்று மக்களுக்கு ஏற்படும் எண்ணத்தை அல்லது சந்தேகத்தைத் திரு 'சோ' இந்நாடகத்தின் மூலமாக எடுத்துக்காட்டுகிறார். இந்நாடகம் இறைவன் இல்லை என்பதை நிரூபிக்கவில்லை. இறைவன் இருக்கின்றானா அல்லது இறந்து விட்டானா என்பதை நாடகம் பார்ப்பவர்களே முடிவு செய்யுமாறு அமைந்திருக்கிறது.

சென்னை—17
26—9—66 க. சந்திரசேகரன்

திரு 'சோ' அவர்கள் இன்றைய சமுதாயச் சூழ்நிலையைச் சரியானபடி படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஆண்டவன் இருக்கிறான் என்பதையே வலியுறுத்தி நிரூபிக்க முயன்றிருக்கிறார்.

சென்னை-20 கே. எஸ். பக்தவத்ஸலம்
25—9—66 (அட்வொகேட்)

கடவுளைப் பற்றி நாடகத்தில் "சோ" ஏதாவது புது விளக்கம் கொடுப்பார் என்று ஆவலுடன் எதிர்பார்த்து ஏமாந்ததோடு மட்டுமல்லாமல், அவர் தாம் எடுத்துக் கொண்ட பொருள் பற்றி ஆராயாமல், ஏதோ ஒரு டாக்டரை மனத்தில் கொண்டு அந்தத் தொழிலையே மட்டமாகத் தாக்குகிறார் என்பதைக் கண்டேன்.

சென்னை
24—9—66 மீனாட்சி

'கல்கி'யில் ஹாஸ்யத் துணுக்கு ஒன்றில் கைதிகளின் படம் போடப்பட்டுள்ளது. அவர்கள் கட்டம் போட்ட சட்டையும் கட்டம் போட்ட குல்லாவும் அணிந்து உள்ளதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் கைதிகளுக்குத் தூய வெள்ளைச் சட்டையும், வெள்ளைக் குல்லாவும் தான் கொடுக்கிறார்கள். சாப்பிடுவதற்கு ஓர் அலுமினியத் தட்டும், அலுமினியக் குவளையும் கொடுக்கப்படுகின்றன. குவளையானது நான்கு அல்லது ஐந்து டம்ளர் தண்ணீர் பிடிக்கும்.

சென்னை—7 பி. நாராயணசாமி
23—9—66 (உதவியாளர், சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகம்)

கல்கி இதழில் பாரதியின் அடிச்சுவட்டில் புதுக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளைச் சுவைத்தேன்; இன்புற்றேன்.

கவிஞர் 'தமிழ்முடி' எழுதிய "நீ இருந்தால்" என்னும் கவிதை குற்றாலத் தேனருவி போல் வற்றாத தமிழ்க் கவிதையாக இருக்கக் கண்டேன். உண்டேன்.

கவிஞர் 'பாகவி' எழுதிய 'புதுப் பொருளைத் தேடுகின்றேன்' என்னும் கவிதை பிறர் உழைப்பால் தன் உடலை வளர்க்கும் பேடியர்க்கும் பேதை மேதையர்க்கும் கல் இறந்து வழி நடக்கத் துணை புரிகின்றது. பாரதியின் சித்தனைகளை அப்படியே எடுத்துச் சில மாற்றம் செய்து திரைப்பாடல் எழுதி ஊதியம் பெறுவோர்க்குச் சம்மட்டி அடி கொடுப்பதாய் அமைகின்றது.

"மின்னிளமை" என்னும் கவிதை ஓசை நயத்துடன் படிப்பதற்கு இனிமையாயிருக்கின்றது. கவிஞனின் உலகியலைப் பார்க்கும் முறை அல்லது நோக்கும் திறன் புதுமையாயிருக்கின்றது. இளமையும், யாக்கையும் நிலையா என்னும் பழம் பாடலின் நினைவும் அழகு ஒரு சூனியக்காரி (Beauty is a witch) என்பதும் அக்கவிதையின் கருவாக அமைந்துள்ளன. 'காலக் குமிழிகள்' 'காலச்சூடு' போன்ற புதுச் சொற்றொடர்கள் படிப்பதற்குச் சுவை தருவன.

சென்னை—29
20—9—66 சொ. பரமசிவன்

பாட்டொன்று இத்துடன் இணைத்திருக்கிறேன். தாத்தாப் பாட்டு. அதாவது தாத்தாவைப் பற்றிய பாட்டு. நாடறிந்த தாத்தாக்களுக்கெல்லாம் உகந்திய விழாக்கள் நடக்கும்போது ஊரறிந்த தாத்தாக்களை விட்டுவிடவாவது பாராட்ட வேண்டாமா என்னும் ஆதங்கத்தில் பிறந்த பாட்டு. பாட்டு தாத்தாக்களுக்குப் பிடிக்கும். ஏனெனில், அவர்களைப் பற்றிய பாட்டு. பாட்டிமார்களுக்கும் பிடிக்கும். ஏனெனில், அவர்களே பாடக்கூடிய பாட்டு. அந்த இரு சாராருக்கும் பிடித்த பாட்டு, தாத்தாக்களுக்குப் பிள்ளைகளாகவும், பிள்ளைகளுக்கு அப்பாக்களாகவும் உள்ளவர்களுக்கு மட்டும் பிடிக்காமல் போய் விடுமா, என்ன? நிச்சயமாகப் பிடிக்கும். அந்த நம்பிக்கையில்தான் துணிந்து இதை அனுப்பியிருக்கிறேன்.

ஒரு விஷயம். ஒருவேளை, 'தாத்தா'வைப் பிடிக்காவிட்டால் அவரை அநாதையாக்கி விடாதீர்கள், பாவம்! வழிச் செலவுக்கும் கொடுத்தனுப்பியிருக்கிறேன். புறப்பட்ட இடத்துக்காவது வழிகாட்டி அனுப்பி விடுங்கள்.

முத்துராமலிங்கபுரம்
5—8—66 ரா. பொன்ராசன்

[தாத்தாவுக்கு வரவேற்பளித்து இவ்விதழ் மங்கையர் மலர் பகுதியில் அமரச் செய்திருக்கிறோம். —ஆசிரியர்]

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 35 சதம்
தபால் செலவு தனி